பக்கங்கள்: இருபத்திநான்கு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 சித்திரை 14 செவ்வாய்க்கிழமை (27.04.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 152

# விடுதலைப் புலிகளை வெற்றி கொள்ள இந்திய ஒத்துழைப்பே காரணம்

## பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ விவரிக்கிறார்



கொழும்பு, ஏப்ரல் 27

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் அவர்களை வெல்வதற்கு இந்திய அரசாங்கம் வழங்கிய, பூரண ஒத்துழைப்பும் கருத்துப் பரிமாற்றங்களுமே முழுக்க முழுக்கக் காரணம்.

இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ.

2005 ஆம் ஆண்டு முதல் 2009 ஆண்டுவரை எமது படை நடவடிக்கைகளை நிறுத்துமாறு இந்தியா எம்மை நிர்ப்பந்தித்திருக்கும் பல சந்தர்ப்பங்கள் இருந்தன. நாம் புதுடில்லிக்கு முறையாக விளக்கம் அளித்து அவ்வாறான நிலை ஏற்படுவதைத் தவிர்த்தோம்; அனுமதிக்கவில்லை - என்றும் பாதுகாப்புச் செயலாளர் கூறியுள்ளார்.

இந்தியச் செய்தியாளர் சி.கே. சசிகுமாருக்கு வழங்கிய மிக நீண்ட செவ்வியில் பல விடயங்களை விரிவாகவும் விளக்கமாகவு் கோத்தபாய எடுத்துரைத்துள் ளார்.

கோத்தபாய ராஜபக்ஷ தமது செவ்வியில் கூறியுள்ளதாவது:

பொதுவாக சண்டைகளில் படையினர் சண்டையிடுவது, இராணுவ வாகனங்கள் முதலானவற்றையே சண்டைக்களத்துக்கு வெளியே உள்ளவர்கள் காண்பர். ஆனால் சண்டைக் களத்திற்கு வெளியே உள்ளவர்களுக்கு யுத்த தந்திரோபாயங்கள் தென்பட மாட்டாது. நான்கு ஜனாதிபதிகளின் கீழ் 8 அரசாங்கங்கள் புலிகளை தோற்கடிப்பதற்குத் தவறின.

அந்த நான்கு ஜனாதிபதிகளின் கீழும் சிறந்த இராணுவத் தளபதிகளும் படையினரும் இருக்கவில்லை என்று கூறமுடியாது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்றபோது (24ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் கடத்தப்பட்ட இளம் குடும்பஸ்தர் மீட்பு

வவுனியா, ஏப்.27

வவுனியாவில் வைத்துக் கடத்தப்பட்ட இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் கடந்த சனியன்று வவுனியா வைத்தியசாலைக்குச் செல்லும்போது கடத்தப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டிருந்த நிலையில், வவுனியாவிலுள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## மணல் விநியோகத்தை ஏகபோக உரிமையாக்கி மக்களை வதைக்கும் அட்டூழியத்தை நிறுத்துக!

### கூட்டமைப்பின் எம்.பி. சரவணபவன் சீற்றம்



யாழ்ப்பாணம், ஏப்.27

மணல் விநியோ கத்தை தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு - ஏகபோக உரிமையாக்கி - மக்களை வதைக்கும் அரசியற் கட்சியின் அட்டூழியத்துக்கு முடிவு கட்ட வேண்டியது மக்கள் நலனுக்கு இன்றியமையாத தாகும்.

இவ்வாறு நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

அவர்விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு:

யாழ்ப்பாணத்தில் இது நாள் வரை யும் இருந்து வந்த போர் தொடர்பான அச்சங்கள் நீங்கி மக்கள் இயல்பு வாழ்வில் ஈடுபடத் தொடங்கி யுள்ளனர். இந் நிலையில் அபிவிருத்தி, மீள் கட்டுமானம், புனரமைப்பு என்பன மக்களது தொலைந்து போன வாழ்வை மீட்டெடுக்க அவசியமானவை.

(21ஆம் பக்கம் பார்க்க)

## வலிகாமம் பகுதி மாணவர், பெற்றோரை அலறியடிக்க வைத்த கடத்தல் பீதி!

### வாகனங்களை படையினர் சோதனையிட்டதால் மேலும் பரபரப்பு

மூளாய், ஏப்ரல் 27

பாடசாலை மாணவர்கள் இருவர் கடத்திச் செல்லப்பட்டதாக நேற்றுக் காலை பரவிய தகவலை அடுத்து சுழிபுரம், மூளாய், வட்டுக்கோட்டை, சங்கானை, சித்தன்கேணிப் பகுதிகளில் பெரும் பதற்றமும் பீதியும், பரபரப்பும் ஏற்பட்டன.

வெள்ளை வானில் வந்தவர்கள் சுழிபுரம் பகுதியில் மாணவர்கள் இருவரைக் கடத்த முற்பட்டவேளை, அவர்கள் கூக்குரலிட்டதால், கடத்தற்காரார்கள் தப்பிச் சென்றதாக பரவலாகப் பேசப்பட்ட போதும் அதனை ஊர்ஜிதம் செய்யமுடியவில்லை.

இந்தச் சம்பவம் குறித்து (24ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் கடத்தல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்கிறார் படைத்தளபதி

யாழ்ப்பாணம், ஏப். 27

யாழ்.மாவட்டத்தில் கடத்தல் சம்பவங்கள் எதுவும் இடம்பெறவில்லை. எனினும் கடத்தல் சம்பவம் இடம்பெற்றால் எமக்கு அறிவிக்கும்பட்சத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துறுசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சிறுவர்கள் பரவலாகக்கடத்தப்படுவதாக வெளிவந்துள்ள தகவல் குறித்து இணையத்தளம் ஒன்றுக்குக் கருத்துக் கூறுகையில் மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ். படைகளின் தளபதி மேலும் தெரிவித்துள்ளதாவது -

யாழ். மாவட்டத்தில் கடத்தல் சம்பவங்கள் இடம்பெறுவதாக வெளிவரும் தகல்களில் எந்தவித உண்மையும் இல்லை. கடத்தல் சம்பவம் எதுவும் தொடர்பாக முறைப்பாடுகள் இதுவரை இல்லை என்றார் அவர். (அ-1)

## ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு பூட்டானில் பெருவரவேற்பு

திம்பு, ஏப். 27

'சார்க்' உச்சி மாநாட்டில் கலந்துகொள்வதற்காக பூட்டான் தலைநகர் திம்புவைச் சென்றடைந்த இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு அங்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

பூட்டானின் பரோ சர்வதேச விமான நிலையத்தில் அந்த நாட்டின் பிரதமர் யிக்மே வை தின்லே, இலங்கை ஜனாதிபதியையும், (24ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்துக்குப் பின்னரான அபிவிருத்தி: யாழ். மக்களுக்கு ஏமாற்றம், அதிருப்தி!

கொழும்பு, ஏப். 27

யுத்தம் முடிவடைந்த பின்னர் அரசினால் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து அப்பகுதி மக்கள் ஏமாற்றமும் அதிருப்தியும் வெளியிட்டுள்ளனர் என 'ஐ.பி.எஸ்' செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

அபிவிருத்தித் திட்டங்களில் தாங்கள் உள்வாங்கப்படவில்லை, வெறுமனே பார்வையாளர்களாக மாத்திரம் இருக்கிறோம் என யாழ்ப்பாண மக்கள் தெரிவித்தனர் எனவும் அச் செய்திச் சேவை குறிப்பிட்டுள்ளது.

அபிவிருத்தி என்பது அப்பகுதியைப் பொறுத்தவரை (21ஆம் பக்கம் பார்க்க)

KOKUVIL HINDU COLLEGE

KHC VS JHC Battle of the HINDUS

JAFFNA HINDU COLLEGE

Official Media Sponsor உதயன் @Kokuvil Hindu College grounds 30th & 1st of May 2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Computer Mega Sale

கடைசியும் இறுதி நாளும்
இறுதி நாள் விசேட விலைக்கழிவு விற்பனை.
PIV கணனிகள் 9,500 ரூபாவிலிருந்து யாழ்.
மத்திய கல்லூரியில் காலை 9 மணி முதல்
மாலை 6 மணி வரை
மேலதிக தொடர்புகளுக்கு:
0715680707,0718570609
(97296)

## வேலையாள்கள் உடனடியாகத் தேவை

யாழ்ப்பாணத்தில் பிரபலமான எக்ஸ்போ பவிலியன் ஹோட்டலுக்கு றூம் போய் (Room boy) , துப்புரவாளர் (Cleaner) தேவை.

இன்று (27.04.2010) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு நேரில் வரவும்.

**எக்ஸ்போ பவிலியன் ஹோட்டல்**
40, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0772487254, 021 222 3790
(97496)

## LH-30 வான் விற்பனைக்கு

பாடசாலைச் சேவை, பிரத்தியேக வாடகைச் சேவைக்குப் பயன்படுத்தக்கூடிய, 17 இருக்கைகளைக் கொண்ட, மிகவும் நல்ல நிலையில் உள்ள LH-30 (TOYOTA HIACE 53-XXXX தொடரிலக்கமுடைய) வான் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
இல.148,கோயில்வீதி,
(புனிசெவ்முன்பாக)
யாழ்ப்பாணம்.
T.P 0774528818


## நினைவு நாள் பிரார்த்தனை



தேசிய கல்வி நிறுவக கல்விமாணிப் பட்டநெறி விரிவுரையாளர் கலாநிதி நிர்மலாதேவி நல்லையா அவர்களின் அன்புத் தந்தை

**வைரமுத்து நல்லையா**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பீடாதிபதி, இணைப்பாளர்கள், விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள், கல்விமாணிப்பட்ட நெறி பிராந்திய நிலையம், யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி.
(97498)

## கண்ணீர் அஞ்சலி

கைதடி நவபுரத்தைச் சேர்ந்த

**சின்னவன் சங்கரன் (மாம்பழம்)**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

கைதடிச் சந்தி. காத்தி குடும்பம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது மன்ற அங்கத்தவர் சி.சிவயோகநாதன் (உரிமையாளர், ஒறிஸ் படமாடம், சாவகச்சேரி) அவர்களின் தந்தை

**அமரர் க.சின்னத்தம்பி**

அவர்கள் 19.04.2010 அன்று காலமானார்.
அன்னாரின் மறைவுக்கு மன்றம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.
சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்
(C/5670001)

## மரண அறிவித்தல்

### செல்லையா இராசையா

சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லையா இராசையா நேற்று (26.04.2010) திங்கட்கிழமையன்று காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லையாவின் மகனும், தங்கம்மாவின் அன்புக் கணவரும், சுந்தரம் (ரக்ரர்), நவரத்தினம் (C.T.B),சரஸ்வதி, அமரர் யோகம்மா ஆகியோரின் சகோதரனும், சுகிர்தராணி, இராஜேந்திரன், அமரர் மங்கை, அமரர் இராஜகுலேந்திரன், மகேந்திரன் (முல்லைத்தீவு) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் சண்முகம், மங்கையர்க்கரசி (ஆசிரியர்), திருப்பதி (ஆசிரியர்) ஆகியோரின் மாமனாரும், ஜஸ்வினி, மாலவன், நித்திலன், ஜனுசியா, கச்சிஜன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2010) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10மணியளவில் அவரது பூதவுடல் தகனக்கிரியைக்காக கொம்பிளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சரசாலை வடக்கு. குடும்பத்தினர்.

## தேர்த்திருவிழாக்கள்

யாழ்ப்பாணம், ஏப்.27

நல்லூர் கைலாசபிள்ளையார் ஆலயப் பெருந்திருவிழாவில் இன்று தேர்த்திருவிழா இடம்பெறவுள்ளது.

காலை 7.30மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று 9மணிக்கு பிள்ளையார் தேரில் ஆரோகணித்து அருள் காட்சியளிப்பார். 10.30மணிக்கு தேரில் இருந்து சுவாமி இறங்கி 11மணிக்கு விசேட பூசை இடம்பெறும். தொடர்ந்து அன்னதானம் நடைபெறும்.

நாளை காலை 9மணிக்கு தீர்த்த உற்சவம் இடம் பெறும். (1)

(சிறப்பிதழ் 16ஆம் பக்கத்தில்)

* * *

யாழ்ப்பாணம், ஏப்.27

யாழ்.வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தான பெருந்திருவிழாவில் இன்று தேர்த்திருவிழா இடம்பெறும்.

காலை 8.30மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்று முற்பகல் 10மணிக்கு அம்பாள் தேரில் ஆரோகணித்து அருள் காட்சியளிப்பார். (1)

(சிறப்பிதழ் 9ஆம் பக்கத்தில்)

* * *

யாழ்ப்பாணம், ஏப்.27

நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தான பெருந்திருவிழாவில் இன்று தேர்த்திருவிழா இடம்பெறும்.

காலை 7மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்று 8.30மணிக்கு முருகன் தேரில் ஆரோகணித்து அருள்காட்சி தருவார். நாளை முற்பகல் 10மணிக்கு தீர்த்தத் திருவிழா நடைபெறும். (ஓ-1-224)

(சிறப்பிதழ் 10ஆம் பக்கத்தில்)

## தவறவிடப்பட்ட அ.அட்டைகள்

யாழ்ப்பாணம்,ஏப்.27

குடாநாட்டில் தனியார் மினிபஸ்களில் பயணிக்கும் போது பயணிகள் தவறவிட்ட ஒரு தொகை அடையாள அட்டைகள் தமது செயலகத்தில் உள்ளன என்று தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

உரியவர்கள் யாழ்.தனியார் பேருந்து நிலைய மேற்பார்வையாளர் எஸ்.மகாலிங்கத்துடன் தொடர்புகொண்டு ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ-1)

## வீதிப்புனரமைப்புக்கு தார் பரல்கள் வந்தன

யாழ்ப்பாணம், ஏப்.27

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு நேற்று முன்தினம் ஒரு தொகுதி தார் பரல்கள் எடுத்துவரப்பட்டுள்ளன.

இரண்டு கனரக வாகனங்கள் மூலம் இந்த தார் பரல்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

குடாநாட்டு வீதிகளின் புனரமைப்புக்காக இந்த தார் பரல்கள் கொண்டுவரப்பட்டதாக சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (1-224)

## ஒருங்கிணைப்புக் குழு கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.27

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தீவகம் வடக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (1-300)

## வருடாந்தத் திருவிழா

யாழ்ப்பாணம்,ஏப்.27

நாவாந்துறை புனித நீக்லஸ் ஆலய வருடாந்தத் திருவிழா நடைபெற்று வருகிறது.

நாளை புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு நற்கருணையும் பெருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் ஆசிரும் இடம் பெறும். (1-135)

## புதிய வடிவமைப்பில் ஆலயம் நிர்மாணம்

யாழ்ப்பாணம்,ஏப்.27

யாழ்.திருச்சபையின் யாத்திரைத் தலங்களில் ஒன்றான அரியாலை புனித யூதா ததேயு புதிய ஆலய நிர்மாணப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

யாழ்.மாநகரத்தின் நுழைவாயிலில் அமைந்திருந்த இவ் ஆலயம் போரின் தாக்கத்தால் முற்றாகச் சேதடைந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது புதிய வடிவமைப்பில் இவ்வாலயம் உருவாக்கப்பட்டு வருகிறது. பங்கு மக்கள் மற்றும் பரோபகாரிகளின் தாராள [illegible] துரிதமாக நடைபெற்று வருவதாக பங்குத் தந்தை றெக்ஸ் சவுந்தரா அடிகள் தெரிவித்தார். (ஓ-135)

## மரண அறிவித்தல்கள்

### அரியகுட்டி அரியரத்தினம்



புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட அரியகுட்டி அரியரத்தினம் நேற்று( 26.04.2010) திங்கள் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி-நல்லம்மா தம்பதியரின் புதல்வரும் காலஞ்சென்ற கமலாதேவியின் அன்புக் கணவரும் சசிதரன், சேகரன், பகீரதன், பகீரதி ஆகியோரின் பாசமிகு தந்தையும் தர்சினியின் அன்பு மாமனாரும் கீர்த்தினியின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மானிப்பாய் வீதி, உரும்பிராய் மேற்கில் உள்ள அவரது இல்லத்தில் இன்று( 27.04.2010) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் வீதி,
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.
தொ.பே. 0776106220
தகவல்: பிள்ளைகள்.
(97354)

### திருமதி ஆறுமுகம் தையல்நாயகி



அரியாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் தையல்நாயகி நேற்று (26.04.2010) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை- கண்மணி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற கந்தையா ஆறுமுகம் அவர்களின் அன்பு மனைவியும், குகதாஸ், குகராணி, கமலதாஸ், கமலராணி, பாலேந்திரதாஸ், குகேந்திரதாஸ், பாலேந்திரராணி ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

21, கனகரத்தினம் வீதி,
அரியாலை.
(97353)
தகவல்: வை.இராசேந்திரன் (மருமகன்).

### சின்னவன் சங்கரன் (மாம்பழம்)

கைதடி,நவபுரத்தைச் சேர்ந்த சின்னவன் சங்கரன் (மாம்பழம்) நேற்று (26.04.2010) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் மீனாட்சியின் அன்புக் கணவரும், அமரர்களான சின்னவன்-முதலிச்சி தம்பதியினரின் அருமை மகனும், கொத்தன் சின்னம்மாவின் பாசமிகு சகோதரனும் அமரர் சின்னவன்-பாறி தம்பதியினரின் மருமகனும் தங்கராசா, அமரர் சிங்கராசா, தம்பிராசா (இலங்கை மின்சார சபை,யாழ்ப்பாணம்), புஸ்பராணி, தங்கராணி (பாப்பா), இந்திராணி (ரதி), தவேந்திரன் (நவம்-ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகம்மா (கனகா-பெல்ஜியம்), இராசமணி (மணி), சுதர்சனா (ஜேர்மனி), அரியரத்தினம், கா.கிறிஸ்காந்தராசா (ஊழியர், அரச முதியோர் இல்லம்,கைதடி), பொ.பஞ்சலிங்கம் ஆகியோரின் மாமனாரும் அமரர் சி.வேலன் (மாணிக்கம்),அமரர் நா.கொத்தன் ஆகியோரின் மைத்துனரும், தமிழினி, தமிழ்பிரபா (பிரபா), துர்க்கா, யாழினி, பிரகலாதன் (பிரபு-பெல்ஜியம்), கார்த்தீபன் (தீபன்), தனுஜியா, தாரிணி, தேவகி, தணிகைச்செல்வன், புவிசாந், லோஜியா, பவுணா, சுசானா (ஜேர்மனி), திருசனா, மதுசனா ஆகியோரின் அன்புப் பேரனும் லதுசனா,கெவினோச் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27.04.2010) செவ்வாய்க்கிழமை பி.பகல் 2மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கைதடி கிழக்கு ஊற்ரல் மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவபுரம், கைதடி.
தகவல்: குடும்பத்தினர்.

### செல்வி கமலா சின்னையா

கரம்பன் மேற்கைப் பிறப்பிடமாகவும், நல்லூர் இராசாவின் தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி கமலா சின்னையா நேற்று (26.04.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - நாகம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுந்தரமூர்த்தி, நவரத்தினம், யோகநாதன், உலகாம்பிகை மற்றும் ஞானாம்பிகை (கனடா), பரமநாதன் (ஓய்வுபெற்ற பொறியியலாளர், தேசிய வீடமைப்பு அதிகார சபை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சிவயோகம் (கௌசலா-பிரான்ஸ்), நித்தியானந்தன் (கொழும்பு), காலஞ்சென்ற விருத்தாசலம் மற்றும் சகுந்தலாதேவி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், நிலானி, முருகதாஸ், வினோதனி, நிசாந்தினி, சுதாகரன், பிரபாகரன், தர்சினி, தேவகரன், துளசிகா,சயந்திகா, ஹஸ்தனி, பிரசாந், தனுசாந், கரிசாந் ஆகியோரின் பாசமிகு அன்ரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2010) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் 128 A, ஆடியபாதம் வீதி, நல்லூர் என்னும் முகவரியில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

128 A, ஆடியபாதம் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தகவல்: சி.பரமநாதன் (தம்பி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## மனித உரிமைகளைப் பேணுவதாயின் அவசரகால விதிகளை நீக்குங்கள்!

அவசரகாலச் சட்ட விதிகளைத் தளர்த்துவது குறித்து அரசு பரிசீலிக்கின்றது என்ற செய்தியை புதிய வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் வெளியிட்டிருக்கின்றார்.

இலங்கையில் மோசமான மனித உரிமை மீறல்களுக்குக் கால்கோள் இட்டுக் காரணமாக அமைந்திருக்கும் ஒரு விடயம் குறித்து அரசு கவனம் செலுத்தத் தயாராகி வருவது நல்லதோர் சமிக்ஞையே.

1971 இல் தென்னிலங்கைக் கிளர்ச்சியை அடுத்து. பொதுசனப் பாதுகாப்புச் சட்ட ஏற்பாடுகளின் கீழ் அவசர கால ஒழுங்கு விதிகள் கொண்டுவரப்பட்டன. அன்று தொட்டு - இடையிடையே சிலகாலம், அமைதியும், சமாதானமும் நிலவிய சொற்ப வேளைகள் தவிர - ஏனைய காலம் முழுவதும், இந்தத் தேசத்தில் அதிகாரம் செலுத்திய அரசுகள் எல்லாம் அவசரகாலச்சட்ட த்தின் கீழேயே இந்த நாட்டை ஆட்சி செய்து வந்திருக்கின்றன.

சுமார் மூன்றரை தசாப்த காலம் அவசரகாலச் சட்டம் இலங்கைத் தீவைப் பற்றிப்பிடித்து இங்கு நிலைத்து நீடித்திருக்கின்றது.

நெருக்கடி வேளையில் - அவசர காலங்களைச் சமாளிப்பதற்காக - தற்காலிகமாகக் கொண்டுவரப்படும் அவசர காலச் சட்டம், இலங்கையைப் பொறுத்தவரை நிலையானதாக நீடித்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றமை இலங்கையின் துரதிஷ்டமின்றி வேறில்லை.

அரசமைப்பு ரீதியாக தேசத்தின் ஒவ்வொரு பிரஜைக்கும் வழங்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மட்டுப்படுத்தி மறுக்கும் விசேட ஏற்பாடுகளைக் கொண்டிருக்கும் அவசரகாலச்சட்ட விதிகள், அத்தோடு அரச அதிகாரிகளுக்கு - குறிப்பாக முப்படையினர் மற்றும் பொலிஸாருக்கு - கட்டுமட்டில்லாத அதிக அதிகாரங்களையும் வழங்கி நிற்கின்றது.

ஆட்களைக் கேட்டுக் கேள்வியின்றிக் கைது செய்வதற்கும், தமக்கு விரும்பிய இடத்தில் தடுத்துவைத்து இரகசிய சிறைக்கூடங்களைப் பேணுவதற்கும், அத்தகைய தடுப்பு முகாம்களில் பிரஜைகள் சித்திரவதை செய்யப்படுதல், மோசமாகவும், மனிதாபிமானமற்ற முறையிலும் நடத்தப்படுதல் போன்ற கொடூரங்கள் இடம்பெறுவதற்கும், சட்டத்துக்கு முரணான வகையில் மனித மரணங்கள் ஏற்படுத்தப்படுவதற்கும், மரணித்தவர்களின் சடலங்களை அதிகாரிகளே தம் மிஷ்டப்படி எடுத்து, புதைத்து இல்லாமல் செய்து கழிப்பதற்கும் இந்த அவசரகாலச்சட்ட விதிகளில் உள்ள சட்ட ஓட்டைகளே இலகுவாக வழிவகுத்துக் கொடுக்கின்றன என்பது அனைவருக்கும் தெரிந்த பரகசியம்.

அது மாத்திரமல்ல, அதிகாரிகளும் ஆளும் தரப்பினரும் தமக்கு தனிப்பட்ட ரீதியில் முரண்பட்டவர்களையும் அரசியல் எதிரிகளையும், ஊடகவியலாளர்களையும் அடக்கி, ஒடுக்கும் விதத்தில் சட்ட அத்துமீறல்களில் ஈடுபடுவதற்கு இந்த அவசரகாலச்சட்ட விதிகளே வழிவகுத்துக் கொடுக்கின்றன என்பதிலும் சந்தேகமில்லை.

அவசர நெருக்கடி நிலைமையின் பேரில், நீதிமன்றின் - நீதித்துறையின் - சட்டவாட்சியைக் கட்டுப்படுத்தி, மட்டுப்படுத்தி விட்டு, அந்த அதிகாரங்களை தற்றுணிவு அடிப்படையில் பிரயோகிப்பதற்கு அதிகார வர்க்கத்திடம் - போதிய வரையறை, கட்டுப்பாடுகள், மட்டுப்படுத்தல்கள், ஆய்வுக்கும் கண்காணிப்புக்கும் உட்படுத்தல் போன்றவையின்றி - கையளிப்பதினால் இந்த மோசமான நிலைமை அரங்கேறுகின்றது.

அவசரகாலச் சட்ட விதிகள் அளவுக்கு மிஞ்சிய அதிகாரங்களை நீதித்துறையின் முறையான கட்டுப்பாடின்றி அதிகாரிகளுக்கு வழங்குவதால் மனித உரிமை மீறல் துஷ்பிரயோகங்களுக்கு அது தாராளமாக வழிவகுத்து நிற்கின்றது.

அதேவேளை, அவசரகாலச் சட்ட விதிகளை இப்படித் துஷ்பிரயோகம் செய்து புரியப்படும் மோசமான மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் சர்வதேசச் சட்டங்களின் கீழ் குற்றச் செயல்களாக அர்த்தப்படுத்தப்பட்டு, தண்டிக்கப்படக் கூடியவை என்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

யுத்தம் முடிவுற்றுள்ளதாக அரசு அறிவித்துள்ள சூழலில், அந்தப் பின்னணியில் முதன்முறையாக நடத்தப்பட்ட பொதுத் தேர்தலில் வென்று ஆட்சிக்கு வரும் புதிய அரசு, மனித உரிமை மீறல்களுக்குத் தாராளமாக வழி செய்து நிற்கும் அவசரகாலச்சட்டத்தை நீக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், புதிய அரசின் தலையாய - முக்கிய - பிரதான - பணியாக இந்த விடயம் அமையவேண்டும் என்றும் சர்வதேச மன்னிப்புச்சபை கடந்த வாரம்தான் கோரியிருந்தது.

இலங்கை உண்மையில் முன்னோக்கி நகர விரும்பினால், இத்தகைய அவசரகாலச் சட்ட விதிகள், பயங்கரவாதச் சட்டங்கள் போன்றவற்றைக் கைவிட்டு, மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டோருக்கு சட்டத்தின் பிடியிலிருந்து விலக்களிக்கும் முறையற்ற போக்கையும் துறந்து. மனித உரிமைகளை மதிக்கும் புதிய சட்டங்களை இனியும் [illegible] அது விரைந்து கொண்டு வரவேண்டும் என [illegible] மன்னிப்புச்சபை வலியுறுத்திக் கேட்டிருந்தது.

[illegible] கையைக் குறைந்த பட்சப் பரிசீலனைக்கு [illegible] வது இலங்கை ஆளும் வர்க்கம் [illegible] ஆக்கபூர்வமான ஒரு செயற்பாடே.

அவசரகாலச் சட்டத்தை நீக்குவது என்பது வெறும் பரிசீலனைக்குரிய விடயம் என்பதுடன் அமைந்துவிடாது - முடிந்துவிடாது - உண்மையில் முழு அளவில் நடைமுறைப்படுத்துவதாகவும் அமையவேண்டும். அப்போதுதான் இலங்கையில் வகைதொகையின்றி அங்கேறும் மனித உரிமை மீறல்களும், துஷ்பிரயோகங்களும் ஓரளவுக்காவது கட்டுப்பாட்டுக்கு வரும் சூழல் உருவாகும்.

## இலாபநோக்குடன் இயங்கும் மகேஸ்வரி நிதியத்திடம் வரி அறவிடப்படுகிறதா? அல்லது விதிவிலக்கா?

## மாதாந்தக் கூட்டத்திற்கு கேள்வி முன்னறிவித்தல்

யாழ்ப்பாணம்,ஏப்.27

பொதுமக்களின் கட்டடப் பணிகளுக்கான மணல் விற்பனையை இலாப நோக்கோடு முன்னெடுக்கும் மகேஸ்வரி நிதிய நிறுவனத்திடமிருந்து வியாபார அனுமதிப்பத்திரத்துக்கான வரி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? இல்லையாயின் இந்த நிறுவனத்துக்கு வரிஅறவிடுதலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளதா?

யாழ்.மாநகர முதல்வரிடம் மேற்கண்ட கேள்விகள் எழுப்ப முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் வியாழக்கிழமை இடம்பெறவுள்ள மாதாந்தக் கூட்டத்தில் எழுப்பப்படவுள்ள கேள்விகளுக்கு முன்னறிவித்தலை மாநகரசபை உறுப்பினர் அ.பரஞ்சோதி மேயருக்கு அனுப்பியுள்ளார்.

அவர் முன்னறிவித்தல் கொடுத்துள்ள கேள்விகள் வருமாறு:

✱யாழ்.மாநகரசபை தனது பழைய கட்டடத்தைக் கட்டுவதற்காக கடந்த சில நாள்களுக்கு முன்னர் அடிக் கல் நடப்பட்டது யாவரும் அறிந்ததே. ஆனால் இதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவா? வரைபடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவா? இதற்கான நிதிகிடைத்துள்ளதா? எவ்வளவு காலப்பகுதிக்குள் இது கட்டி முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அப்படி இல்லையாயின் அவசரம் அவசரமாக இதன் அடிக்கல் நடப்பட்டதன் காரணம் என்ன? இதன் பின்னணியில் இருந்து செயற்பட்டவர்கள் யார்?

✱மகேஸ்வரி நிதியத்தினூடாக பல திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளதாக பத்திரிகை வாயிலாகஅறியப்படுகின்றது. இது வரவேற்கப்படுகிறது. ஆனால் இதற்கான நிதயானது பொதுமக்களது கட்டடங்களுக்கான மணல் விற்பனை மூலமாகவும் சில சேவைகள் வழங்குனர்களிடமிருந்து வரியாக அறவிடப்படும் பணத்தினூடாகவும் பெறப்படுவதாக அறிகின்றேன். இது மாநகரசபை நிர்வாகத்துக்கு அப்பாலான விடயமாக இருந்தாலும், இதனது அலுவலகம் யாழ்.மாநகரசபை எல்லைக்குள்அமைந்திருப்பதனால் மாநகரசபையின் அதிகாரத்துக்குட்பட்ட வகையில் இலாப நோக்கத்தோடு, வியாபாரத்தின் பொருட்டு இயங்கும் இந் நிறுவனத்திடமிருந்து வியாபார அனுமதிப்பத்திரத்துக்கான வரி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? அவ்வாறு இல்லையாயின் இந் நிறுவனத்துக்கு அனுமதிப்பத்திரத்துக்கான வரி அறவிடுதலிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளதா? அப்படியானால் ஏன்? எப்போது?

✱யாழ்.மாநகரசபையில் ஊழியர் நியமனம் விடயமாக விண்ணப்பம் கோரப்பட்டு நீண்ட நாள்களாக நேர் முகப்பரீட்சை நடைபெற்றது. தற்போது இவர்களுக்கான நியமனம் வழங்கப்பட்டு விட்டனவா? அப்படியானால் எந்த அடிப்படையில் தெரிவுகள் இடம் பெற்று நியமனம் வழங்கப்பட்டன.

(ஓ-1)

## சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தில் விழிப்புலனற்றோர் சங்க 30 உறுப்பினர்கள்

யாழ்ப்பாணம், ஏப்.27

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையினால் வழங்கப்படும் ஓய்வூதியத் திட்டத்தில் யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தைச் சேர்ந்த 30 அங்கத்தவர்கள் இணைந்துள்ளனர்.

விழிப்புலனற்றோர் சங்கத்தின் தலைவர் ஏ.மகேந்திரன் இத் தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், மேலும் ஒரு தொகுதி அங்கத்தவர்களை இந்தத் திட்டத்தில் இணைத்துப் பயன்பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கென 18வயது முதல் 50வயது வரையான அங்கத்தவர்கள் விரைவில் தெரிவு செய்யப்படவுள்ளனர்-என்றார்.

(50-224)

## புங்குடுதீவில் பவுசரை சேவையிலீடுபடுத்தி மக்களின் தாகத்தை தணிக்க கோரிக்கை

புங்குடுதீவு, ஏப் 27

புங்குடுதீவில் குடிநீர் விநியோக சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வந்த கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான குடிதண்ணீர் பவுசர் கடந்த பல நாள்களாகப் பழுதடைந்த நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது குடிதண்ணீருக்குபெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. இந் நிலையில் ஏனைய நிறுவனங்களினால் வழங்கப்படும் குடிதண்ணீர் இதனைப் போக்கும் வகையில் இல்லாததால் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே பழுதடைந்துள்ள குடிதண்ணீர் பவுசரை உடனடியாகச் சீர்செய்து சேவையில் ஈடுபடுத்தி, பிரதேச மக்களின் தாகத்தைத் தணிக்குமாறு பொது மக்கள் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(க-188)

## வன்னி மாட்டெருவுக்கு யாழ்ப்பாணத்தில் கிராக்கி

யாழ்ப்பாணம்.ஏப்.27

வன்னியில் தேடுவாராற்றுக் கிடக்கும் மாட்டெரு வாகனங்கள் மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டு விற்பனையாவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

வன்னியில் தேடுவாராற்றுத் தேங்கிக் கிடக்கும் மாட்டெரு வாகனங்கள் மூலம் எடுத்துவரப்பட்டு குடாநாட்டு விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. இதனை இங்குள்ள விவசாயிகளும் ஆர்வத்துடன் கொள்வனவு செய்து தமது விவசாய நிலங்களுக்குப் பசளையாக இடுகின்றனர்.

வலி.மேற்கு, வலி.கிழக்குப் பகுதிகளிலேயே இந்த எருவுக்கு அதிக கிராக்கி நிலவுகின்றது.

இதேவேளை வன்னிப் பகுதியில் பெருமளவு மாட்டெரு தேங்கிக் கிடப்பதாகவும் அங்கு சென்று வருவோர் கூறுகின்றனர்.

(க-224)

## புற்றுநோய் விழிப்புணர்வுக் கண்காட்சி இன்று யாழ்.இந்துக் கல்லூரியில்

யாழ்ப்பாணம்.ஏப்.27

புற்றுநோய் தொடர்பாகப் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் கண்காட்சியும் [illegible] வரையும் இன்று [illegible] கிழமை யாழ்.இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இன்று காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரையும் யாழ்.இந்துக் கல்லூரி, குமாரசாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ள இந்த விழிப்புணர்வுக் கண்காட்சி யாழ்.போதனா வைத்தியசாலைப் புற்றுநோய் பிரிவின் ஏற்பாட்டில் இடம்பெறும்.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களமும் 'கேன்' அமைப்பும் இணைந்து இதற்கான அனுசரணையை வழங்குகின்றன.

யாழ்.மாவட்டத்திலுள்ள கல்வி வலயங்கள் ரீதியாக இந்த புற்றுநோய் விழிப்புணர்வுக் கண்காட்சியை நடத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு கல்வி வலயத்தில் இந்தக் கண்காட்சி இடம் பெறும் என ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர்.

புற்றுநோய் ஏற்படும் காரணங்கள் மற்றும் சூழலியல் காரணிகளை மக்களுக்குத் தெளிவாகத் தெரியப்படுத்தும் புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வுத் திட்டத்தின் கீழ் இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த விழிப்புணர்வுக் கண்காட்சி நிகழ்வினை ஓர் அரிய சந்தர்ப்பமாக பயன்படுத்தி, பாடசாலை மாணவர்கள், நோய்க்கான குணங்குறிகள் உள்ளவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பார்வையிட்டு பயன்பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(50-14)

### நாளை

| | |
|---|---|
| சித்திரை 15 | 28.04.2010 புதன்கிழமை |
| திதி | : பூரணை மாலை 06.37வரை |
| நட்சத்திரம் | : சுவாதி பி.இ. 04.53 வரை |
| சுபநேரம் | : 04.28 -05.58வரை |
| ராகுகாலம் | : 11.58-01.28 வரை |

சித்திராப் பூரணை விரதம்

## சுற்றுலாப் பயணியின் சங்கிலியை அபகரித்த திருடன் பொலிஸாரிடம்

யாழ்ப்பாணம்.ஏப்.27

சுற்றுலாப் பயணி ஒருவரின் தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பியோட முற்பட்ட திருடன் அருகில் நின்ற பொலிஸாரிடம் வகையாக மாட்டிக்கொண்டார்.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை யாழ்.பிரதம தபாலகத்துக்கு அருகில் கே.கே.எஸ். வீதியில் இடம் பெற்றது.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:

யாழ்ப்பாணத்தைப் பார்வையிடத் தென்னிலங்கையில் இருந்து வந்த சுற்றுலாப் பயணிகளில் ஒருவர் கே.கே.எஸ்.வீதியில் உள்ள உணவகம் ஒன்றில் தேநீர் அருந்திக் கொண்டிருந்தார். அப்போது அருகில் நின்ற திருடன் திடீரென அந்தப் பயணியின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலினை அறுத்துக்கொண்டு தப்பி ஓடினான். இதனைக் கண்ட அருகில் நின்ற பொலிஸார் திருடனை மடக்கிப் பிடித்தனர். அவரிடமிருந்து சங்கிலியும் மீட்கப்பட்டது. அவரைக் கைது செய்த பொலிஸார் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றனர்.

(50-224)

## காரைநகர்-பொன்னாலை வீதி புனரமைப்பு துரிதகதியில்

யாழ்ப்பாணம்.ஏப்.27

காரைநகர்-பொன்னாலை வீதியின் புனரமைப்புப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

ஆசிய அபிவருத்தி வங்கியின் நிதியுதவியுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இன்னும் இரண்டு அல்லது மூன்று மாதங்களில் இந்த வீதி புனரமைப்புப் பணிகள் முழுமையாகப் பூர்த்தியடைந்து விடுமென வீதி அபிவிருத்தி அதிகாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

(க-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது ஆசிரிய
சகோதரத்துவ உறுப்பினர்
**கந்தையா**
**ஜெயவீரசிங்கம்**
அவர்கள் 21.04.2010 அன்று யாழ்ப்பாணம் மாவட்ட நீதிவான் அ.பிரேம்சங்கர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டதை மகிழ்ச்சியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம். மேலும் பல உயர்ச்சிகளைப் பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய சகோதரத்துவம்,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

(C/567003)


இப்பொழுது நாங்கள் கிளிநொச்சியிலும்

MMBL **Money Master** முகவர் நிலைய திறப்பு விழாவை முன்னிட்டு

**அளப்பரிய அன்பளிப்புக்கள்**

WESTERN UNION MONY TRANSFER | வெஸ்டன் யூனியன் பணப்பரிமாற்றம்

மூலம் பணம் அனுப்பி ஒரு சில நிமிடங்களில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க

MMBL Money Master நிலையத்திற்கு உடன் நாடுங்கள்

நம்பிக்கை, நாணயம், பாதுகாப்பான சேவை

**குளோபல் மல்ரி சேவிசஸ்,**
கண்டி வீதி, கிளிநொச்சி.
(கந்தசாமி கோயில் முன்பாக)

(C/567014)


## நன்றி நவில்கின்றோம்

தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் 25.04.2010 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற **'கலாபூசணம்' கல்வயல் வே.குமாரசாமி** அவர்களின் பாராட்டு விழாவில் பாராட்டுப்பத்திரங்கள் வழங்கியோர், பொன்னாடை போர்த்தியோர், பொற்கிளி வழங்கியோர் மற்றும் ஆசியுரை, பாராட்டுரைகள் வழங்கியோர், கவியரங்கில் பங்குபற்றியோர், இந் நிகழ்வை ஒழுங்குபடுத்திய தென்மராட்சி கலை மன்றத்தினர் மற்றும் இந் நிகழ்வில் பங்குபற்றி வாழ்த்திய அன்புள்ளங்கள் அனைவருக்கும் சிரம்தாழ்த்தி வணங்கி எமது குடும்பத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பெரிய அரசடி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

**குமாரசாமி**
**பாலகுமாரன்**
**(மகன்).**

(C/567013)

## மரண அறிவித்தல்

### திருமதி நந்தகுமார் கமலாதேவி



சந்நிதி வீதி, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நந்தகுமார் கமலாதேவி நேற்று (26.04.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கந்தசாமி நந்தகுமாரின் அன்பு மனைவியும், கார்த்திக், பிரசன்னா (செலிங்கோ நிறுவனம்), றொபின்சன், கயலக்சி (2011 கலைப்பிரிவு, வேம்படி மகளிர் உயர் கல்லூரி), தக்சனி (மாணவி, 2013 கலைப்பிரிவு, அச்சுவேலி புனித சென்.திரேசா மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-புஸ்பம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி- பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தங்கவேல் மற்றும் ஆயிலியம், விமலாதேவி (ஜேர்மனி), நித்தியானந்தம், நவமணிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவகுமார், இந்திரகுமார், சாந்தகுமாரி, அமரர் தங்கராசா, லோகேஸ்வரன், தங்கரத்தினம், சந்திரகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2010) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக தீர்த்தாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.நந்தகுமார் (கணவர்)
மெக்கானிக் (நந்தன், ஆவரங்கால்).

சந்நிதி வீதி,
அச்சுவேலி.

(97500)

## ஆளுநருடனான கலந்துரையாடல் பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,ஏப்.27

யாழ்.மாவட்ட சுகாதார திணைக்களத்துக்கு கீழ் இயங்கும் நிறுவனங்களின் தலைவர்களுக்கும் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறிக்கும் இடையில் இன்று இடம்பெறவிருந்த கலந்துரையாடல் பிற்போடப்பட்டுள்ளது.

தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்றும் சந்திப்புக்கான புதிய திகதி பின்னா அறிவிக்கப்படும் என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார். (ஓ1)

## வில்லூன்றியில் நாளை சித்திராபூரணை நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஏப்.27

வில்லூன்றி புனித தீர்த்தத்தில் சித்திராபூரணை நிகழ்வுகள் நாளை புதன்கிழமை வழமைபோல் சிறப்பாக நடைபெறவுள்ளன.

வில்லூன்றி விநாயகர் ஆலயத்தில் அதிகாலை விசேட அபிஷேகம், பூசைகளும் காலை 7மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் இடம்பெறும்.

காலை 8மணிக்கு வில்லூன்றி புனித தீர்த்தத்தில் தீர்த்தவாரி நடைபெற்றபின் பொதுமக்கள் தீர்த்தச் சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிரத்தர்ப்பணங்கள் செய்து கொள்ளவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஆலய தர்மபரிபாலன சபை அறிவித்துள்ளது. (ஓ-1)

## குறிகாட்டுவானில் இளைப்பாற்றுக் கொட்டகை

யாழ்ப்பாணம்,ஏப்.27

சுற்றுலாப் பயணிகளின் வசதி கருதி குறிகாட்டுவான் இறங்குதுறைப் பகுதியில் இளைப்பாற்றுக் கொட்டகை ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

தற்போது நிலவும் கடும் வெப்பம், சுட்டெரிக்கும் வெய்யில் ஆகியவற்றில் சிக்கி அவதிப்படும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காகவே இந்தக் கொட்டகை அமைக்கப்பட்டுள்ளதாகவும், இதனைவிட மேலதிக மலசலகூட வசதிகள், குடிதண்ணீர் வசதிகள் என்பன ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-224)


**முன்பள்ளி ஆசிரியர் உடன் தேவை (P.S Teacher)**

நவாலி தெற்கில் உள்ள HSCMF நிறுவனத்திற்கு நவாலி - மானிப்பாய் பிரதேசத்திற்குட்பட்ட பயிற்றப்பட்ட முன்பள்ளி ஆசிரியர் தேவை. 28.04.2010 முற்பகல் 10மணி முதல் 12மணி வரை நேர்முகப்பரீட்சை இடம்பெறும்.

தலைவர், HSCMF (சி/567009)

**தேவை**

வயோதிபப் பெண் ஒருவருடன் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பெண் ஒருவர் தேவை.
தொடர்பு: 209, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 0773086894 (சி/567008)

**காசாளர், பெண் உதவியாளர் தேவை**

யாழ்.நகரில் இயங்கும் பிரபல குளிர்பான நிலையம் ஒன்றுக்கு அனுபவம் வாய்ந்த 45வயதிற்கு மேற்பட்ட காசாளரும், பெண் உதவியாளரும் (கைத்தொழில்) தேவை.
உடன் தொடர்பு கொள்க: 0774714636 (97488)

**முகாமையாளராக ஓர் அரிய சந்தர்ப்பம்**

வாழ்க்கையின் பிரகாசமான எதிர்காலத்தை எதிர்பார்க்கும் துடிப்புள்ள இளைஞர், யுவதிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். நீங்கள் O/L, A/L சித்திபெற்றவராயின் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட எமது Canadian நிறுவனத்தில் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் முகாமைத்துவப் பயிற்சி பெறுவதுடன் கவர்ச்சிகரமான சம்பளமும்பெற ஓர் அரிய சந்தர்ப்பம். பயிற்சிக்காலம் 6 மாதமாகும்.
Note: சிங்கள மொழி தெரிந்திருந்தால் அதனை மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்
*Contact:* V.Udayarajan 0717494735 (97492)

**முகாமைத்துவ உதவியாளர் போட்டிப்பரீட்சை வகுப்பு**

இப் பரீட்சை 8ஆம் திகதி நடைபெற உள்ளது.
வகுப்பு ஆரம்பம் :
புதன் (28.04.2010) காலை 9மணி
புதன் 9 - 3வரை, சனி, ஞாயிறு 1 - 5 வரை
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு,
யாழ்.போதனா வைத்தியசாலை எதிரே (97489)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி கனகபூரணம் சுப்பிரமணியம்



சுதுமலையைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கனகபூரணம் சுப்பிரமணியம் (25.04.2010) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நடராசா, சேதுராசா, சுந்தரராஜா, ராஜரட்ணம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பரிமளம் அவர்களின் பாசமிகு அக்காவும், கருணாமூர்த்தி, மனோரஞ்சிதம் (கனடா), சிவானந்ததேவி, கெங்காதேவி (வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வவுனியா), சாந்தபவான் (கனடா), மனோகரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், விஜயலக்சுமி, நித்தியானந்தம் (கனடா), பரமராஜா (வீதி அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம், சியாமளா (கனடா), சாந்தினி (ஜேர்மன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், தாட்ஷாயினி (கனடா), மதனராஜன், நிந்துஜா, மயுந்தன் (கனடா), லஜினி (லண்டன்), திவிஜா, புவிஜா, கலாபன், தாரணி (கனடா), சர்மியா (கனடா), சயந்தவி (ஜேர்மனி), பவதாரணி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சாயினி, அபிநயா (கனடா) ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு.பரமராஜா (பரம்) - மருமகன்.
தொ.பே. 0214591531

சுதுமலை மத்தி,
மானிப்பாய்.

(97497)

### திருமதி சுப்பிரமணியம் உருக்குமணி

(ஓய்வுபெற்ற பிரதான தாதி, யாழ்.போதனா வைத்தியசாலை )



சுன்னாகம் கிழக்கு,சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் உருக்குமணி (ஆசையன்ரி என்று அன்பாக எல்லோராலும் அழைக்கப்படும் யாழ்.போதனா வைத்தியசாலை இரத்தவங்கி ஓய்வுபெற்ற தாதியும், யாழ்.மானிப்பாய் வைத்திய சாலை பிரதான தாதியும்) அவர்கள் 23.04.2010 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் (இலங்கை போக்குவரத்துச்சபை) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மாதர் பொன்னம்மா (யாழ். போதனா வைத்தியசாலை, மேற்தாதி) மற்றும் நாகம்மா, சுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற முத்துவேலு மற்றும் குழந்தைவடிவேல் ஆகியோரின் மைத்துனியும் லோகேஸ்வரன், கோணேஸ்வரன், யோகசாலினி, யோகமாலினி, சிவச்செல்வன், கலைச்செல்வி, கலைவதனி, உமாச்செல்வனி, துளசிச்செல்வன் ஆகியோரின் பெரியதாயும், சுகுணா, ரூபராணி, குலசிங்கம், ரவீந்திரன், வாசுகி, சிவபாலன், சுரேஸ்குமார், திருமதி தர்மினி ஆகியோரின் பாசமிகு பெரியமாமியும், பங்கையச்செல்வன், செந்தூர்ச்செல்வன், சோபனா, லக்ஸ்சாயினி, தயானந்தன், நிசாந்தினி, சபீஸ்கண்ணா, சரவணா, சிராணி, தாரணி, காத்திகன், மயூரன், பிரணவன், அபிராமி, கிவேதனன், கவிந்தன், துவேதிதா, மயூரா, சாந்சியா, ரிதி, பிரசாந்தி,கௌதமி ஆகியோரின் பாசமிகு பாட்டியும் , டிலக்சனா, டிலக்சன், மகிதா, மகிசா, மகிதன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2010) செவ்வாய்க்கிழமை சுன்னாகம் கிழக்கு, சுன்னாகத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப.2 மணிக்கு சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்பு:
சு.சிவச்செல்வன்-00447786849542.
சு.துளசிச்செல்வன்-04407733796021,
மோகன்-00447773422034,
க.குழந்தைவடிவேல்-0094771246151,

தகவல்.
குடும்பத்தினர்.
*காளிகோவிலடி,*
*சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.*

### திருமதி கணேசு சிவஞானம்மா (தவமணி)

இணுவில் தெற்கு, மஞ்சத்தடி, விவேகானந்தா வீதியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி கணேசு சிவஞானம்மா நேற்று (26.04.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கணேசுவின் அன்பு மனைவியும், தனலட்சுமி (கண்ணம்மா), காலஞ்சென்ற விசுவரட்ணம் மற்றும் கிருபானந்தன், பரமநாதன், சோமேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தாயும், இராசதுரை, புஸ்பராணி, கமலாதேவி, உஷாரூபி, வசந்தாதேவி ஆகியோரின் மாமியாரும், சுதர்ஜினி- சுரேந்திரன், பவாரஜினி-ஸ்ரீகாந்தன், மாநினி-பிரபாகரன், றஜீவன்-றகிதா, சுதர்ஜன், நவாஜினி, அருணன், சுஜிதரன்- சைலஜினி, அச்சுதன்-செந்தூவியா, சஞ்சுதன், விபிஷன், நிஷாந்தன், பிரசாந்தன், பிரசாந்தி, தனுசன், வியாசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சந்தோஷ், சுருஜா, சந்தியா, கவின், ஹரிசதுர்ஜன், சங்கீர்த்தனா, திலோசன், வர்ஷன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2010) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11.30மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக் காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:
மருமகன் - இராசதுரை (ஓய்வு பெற்ற முகாமையாளர், கிராமிய வங்கி, சுன்னாகம்).

விவேகானந்தா வீதி,
மஞ்சத்தடி,
இணுவில் தெற்கு.

(97499)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை, தென்னை அபிவிருத்திச் சங்கங்களுக்கு ஆளுநரால் தலா 10 லட்சம் ரூபா கடனுதவி

யாழ்ப்பாணம், ஏப் 27

குடாநாட்டில் உள்ளபத்து பனை, தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தலா பத்து லட்சம் ரூபா நிதி கடனாக வழங்கப்பட்டது.

கூட்டுறவு திறந்த வெளிச்சந்தை திறப்பு விழாவைத் தொடர்ந்து நேற்று வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் இந்த நிதிக்கான காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன.

விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி மேற்படி சங்கங்களுக்கான காசோலைகளை வழங்கினார்.

அதனைவிட பிரதேச சபையின் கீழ் இயங்கும் நூலகங்கள் சிலவற்றுக்கும் புத்தகங்கள் வழங்கப்பட்டன.

மாதர் அபிவிருத்திச் சங்கங்கள், சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவு சங்கங்களுக்கும் முப்பது ஆயிரம் முதல் நாற்பது ஆயிரம் ரூபா வரையான நிதி ஆளுநரினால் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வடமாகாண கூட்டுறவு, கூட்டுறவு உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி தெ.து.விஜயலட்சுமி, வடமாகாண கூட்டுறவு ஆணையாளர் எஸ்.சுப்பிரமணிய சர்மா, யாழ்அரச அதிபர் கே.கணேஷ், யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ. சிவலிங்கம் உட்பட கூட்டுறவாளர்கள் பலரும் கலந்து கொண்டனர். (50-224)

## சிமெந்து விநியோகம்

வடமராட்சி,ஏப்.27

நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை பிரதேசத்தில் மீளக்குடியேறிய குடும்பங்களுக்கு சிமெந்து பைக்கற்றுக்கள் இலவசமாக வழங்கப்பட்டன.

இவ்விதம் சுமார் 600குடும்பங்களுக்கு சிமெந்து பைக்கற்றுக்கள் மந்திகையில் உள்ள களஞ்சியத்தில் வைத்து வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்டுள்ளன. (04-236)

## ஊடகவியலாளர் ரூபன் காலமானார்



யாழ்ப்பாணம், ஏப் 27

யாழ்.தினக்குரல் பத்திரிகையின் உதவி ஆசிரியராகக் கடமையாற்றிய இளம் ஊடகவியலாளரான செல்வரட்ணம் ரூபன் (வயது 31) நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

கடந்த சில நாள்களாக நோய்வாய்ப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர் நேற்று முன்தினம் மாலை அங்கு காலமானார்.

ஊடகவியலாளர் ரூபன் யாழ்ப்பாணத்தில் பல நெருக்கடியான வேளைகளில் துணிச்சலுடன் பணியாற்றியவர்.

கடந்த 8 வருடங்களாக அவர் பத்திரிகைத்துறையில் துடிப்புடன் பணியாற்றி வந்தார். இவரது இறுதிக்கிரியைகள் நேற்று மாலை அவரது இல்லத்தில் நடைபெற்றன.(50-6)

## பாடசாலைகளை நான்கு பிரிவுகளாக வகைப்படுத்தி சமூக விஞ்ஞானப் போட்டிகள் 30 ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.27

மாணவர்கள் தொகை குறைவாக இருக்கும் பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கும் நோக்கில் பாடசாலைகளை நான்கு பிரிவுகளாக வகைப்படுத்தி சமூக விஞ்ஞானப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

200இற்கும் குறைவான மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகள், 201 தொடக்கம் 500 வரையான மாணவர்கள் உள்ள பாடசாலைகள், 501 தொடக்கம் 1000 வரையான மாணவர்கள் கற்கும் பாடசாலைகள், 1000 இற்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் என நான்கு பிரிவுகளாக வகைப்படுத்தியே பாடசாலை மட்டம், கோட்ட மட்டம், வலய மட்டம், மாகாண மட்டம், தேசிய மட்டம் ஆகியவற்றில் மேற்படி போட்டிகள் நடைபெறும்.

மேலும் இப்போட்டிகள் தமிழ் மொழி மூலம் தோற்றும் மாணவர்களுக்கு தரம் 6 தொடக்கம் 13 வரையும், ஆங்கில மொழி மூலம் தோற்றுபவர்களுக்கு தரம் 8 தொடக்கம் தரம் 11 வரையும் நடத்தப்படவுள்ளதுடன் பாடசாலை மட்டப் போட்டிகள் இந்த மாதம் 30 ஆம் திகதியும், கோட்ட மட்டப் போட்டிகள் மே 15ஆம் திகதியும், வலய மட்டப் போட்டி ஜூன் 5ஆம் திகதியும், மாகாண மட்டப் போட்டிகள் ஜூலை முதலாந் திகதியும், தேசிய மட்டப்போட்டிகள் ஒகஸ்ட் 10 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.(50-190)











யாழ்.நகரில் கூட்டுறவுத் திறந்தவெளிச் சந்தை நேற்றுத் திறந்துவைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வட மாகாண கூட்டுறவு அமைச்சின் செயலாளர் திருமதி ஆர்.விஜயலட்சுமி, யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் ஆகியோர் விற்பனை நிலையங்களை நாடாவெட்டித் திறந்துவைப்பதை மேல் வரிசையிலும் -

இதன் பின்னர் யாழ்.வீரசிங்கம் மண்டபத் தில் இடம்பெற்ற நிகழ்வில் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றுக்கு வட மாகாண ஆளுநர் கடனுதவிக்கான காசோலை வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் கீழ்வரிசையிலும் காணலாம். *(படங்கள்: நந்தன், கரன்)*

## திருடப்பட்ட மோட்டார் சைக்கிள்களை உடுவிலில் பொலிஸார் கைப்பற்றினர்

### சந்தேக நபரும் கைதானார்

வலி.வடக்கு,ஏப்.27

திருடப்பட்டவை எனக் கருதப்படும் இரண்டு மோட்டார் சைக்கிள்களை சுன்னாகம் பொலிஸார் உடுவில் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து கைப்பற்றியதுடன் சந்தேகநபர் ஒருவரையும் கைது செய்துள்ளார்கள்.

சுன்னாகம் குற்றத்தடுப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிசார் மேற்கொண்ட நடவடிக்கையைத் தொடர்ந்து இம் மோட்டார் சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டன.

இரண்டு மோட்டார் சைக்கிள்களும் எம்.டி.90 இனத்தைச் சேர்ந்தவை என்றும் அவை தேவைகளுக்கு ஏற்ப ஒரே இலக்கத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன என்றும் கூறப்பட்டது.

இந்த மோட்டார் சைக்கிள்களின் இயந்திரங்களின் இலக்கங்களும் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மோட்டார் சைக்கிள்களுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டார். அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (க-86)

## வீதி சேதம்

சுன்னாகம்,ஏப்,27

சுன்னாகம் தெற்கு முருகேச பண்டிதர் வீதி மோசமாக சேதடைந்துள்ளதால் அவ் வீதியால் பயணிக்கும் பொதுமக்கள் பெரிதும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுன்னாகம் மின்சார நிலையம், மத்திய மருந்தகம் ஆகியவற்றுக்கு செல்வதற்கு இந்த வீதியையே பலரும் பயன்படுத்தி வருவதாகவும் சேதமடைந்த வீதியை செப்பனிட்டு உதவுமாறு இப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (04-30)




## கூட்டுறவுத் திறந்தவெளிச் சந்தையை ஆளுநர் நேற்றுத் திறந்து வைத்தார்

யாழ்ப்பாணம்.ஏப்.27

யாழ்.நகரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கூட்டுறவுத் திறந்தவெளிச் சந்தை நேற்று வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியினால் வைபவரீதியாக நாடாவெட்டித் திறந்து வைக்கப்பட்டது.

குடாநாட்டின் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதற்காக இந்தச் சந்தை மூன்று பிரிவுகளாக அமைக்கப்பட்டுள்ளது. அவற்றை வட மாகாண உள்ளூராட்சிக் கூட்டுறவு அமைச்சின் செயலாளர் திருமதி து.விஜயலட்சுமி, யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் உள்ளிட்ட விருந்தினர்கள் நாடாவெட்டித்,திறந்துவைத்தனர்.

இதனைத் தொடர்ந்து யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நிகழ்வுகள் இடம்பெற்றன. யாழ்.கூட்டுறவு கிராம வங்கிகளின் சமாசத் தலைவர் தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ்.மாவட்டத்திலுள்ள தெரிவுசெய்யப்பட்ட பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் மாதர் அபிவிருத்திச் சங்கங்கள் என்பனவற்றுக்கு கடனுதவிக்கான காசோலைகளும் வழங்கப்பட்டன.

வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, வடமாகாண கூட்டுறவு ஆணையாளர் எஸ்.சுப்பிரமணியசர்மா ஆகியோர் அவற்றை வழங்கினர்.

இந்த நிழ்வில் கூட்டுறவுத்துறையினர், பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தினர், கடற்றொழிலாளர் கூட்டுறவுத் துறையினர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (50-14-224)

## மாதாந்த உதவிப் பண அட்டை மீளாய்வு

சண்டிலிப்பாய்ப் பிரிவில் இன்று செவ்வாய்க்கிழமை மு.ப. 11முதல் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களின் பணம் பெறும் அட்டை அந்தந்தப் பிரிவுக் கிராம சேவையாளர்களின் அலுவலகங்களில் வைத்து மீளாய்வு செய்யப்படவுள்ளது.

இதற்கமைய இன்று ஜே/149 கிராம சேவையாளர் அலுவலகத்திலும், 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஜே/150 கிராம சேவையாளர் அலுவலகத்திலும், எதிர்வரும் 3ஆம் திகதி திங்கட்கிழமை ஜே/151 கிராம சேவையாளர் அலுவல்கத்திலும், 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஜே/152 கிராம சேவையாளர் அலுவலகத்திலும் நடைபெறவுள்ளது என சமூக சேவைகள் உத்தியோகத்தர் இ.அருந்தவராசா அறிவித்துள்ளார்.(50-100)

## கைவிடப்பட்ட இரண்டு சைக்கிள்கள் சுன்னாகம் பொலிஸாரின் பாதுகாப்பில்


வலி.வடக்கு, ஏப்.27

சுன்னாகம் நகரப் பகுதியில் அனாதரவான முறையில் கைவிடப்பட்டுக் காணப்பட்ட இரண்டு சைக்கிள்களைச் சுன்னாகம் பொலிஸார் கைப்பற்றினார்கள்.

பெண்களுக்கான சைக்கிள் ஒன்றும் ஆண்களுக்கான [illegible] சைக்கிள் ஒன்றும் இவ்வாறு கைவிடப்பட்ட நிலையில் பொலிஸாரினால் எடுத்துச்செல்லப்பட்டு பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள் என.

சுன்னாம் பொலிஸ் நிலையத்திற்கு உரியவர்கள் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து இவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு சுன்னாகம் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பொலிஸார் பொதுமக்களை கோரியுள்ளனர். - (க-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தந்தை செல்வநாயகத்தின் 33ஆவது சிரார்த்ததின நிகழ்வு நேற்று திங்கட்கிழமை தந்தை செல்வா நினைவுச் சதுக்கத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தந்தை செல்வா அறங்காவலர் குழுவின் உப தலைவருமான மாவை சேனாதிராஜா, தந்தை செல்வநாயகத்தின் புதல்வர் எஸ். சந்திரகாஷன், அறங்காவலர் குழுவின் தலைவர் பேரருட் கலாநிதி எஸ்.ஜெபநேசன் ஆகியோர் தந்தை செல்வாவின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்துவதை முதல் மூன்று படங்களிலும், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் மற்றும் பொதுமக்கள் நினைவுச் சமாதிக்கு அஞ்சலி செய்வதை நான்காவது படத்திலும் காணலாம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், அருட்திரு எ.பி. ஜெயசேகரம், தமிழரசுக் கட்சியின் பிரமுகர் எஸ்.எக்ஸ்.குலநாயகம் ஆகியோர் நினைவுரையை நிகழ்த்துவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் அடுத்துள்ள படங்களில் காணலாம்.

(படங்கள்: தமிழினியன்)


தகாக்காலக் கொடூரப் பேரிழப்பு இழப்பும்

45ஆம் நாள் நெஞ்சம் நெகிழ்ந்த நினைவலைகள்



ஆண்டவன் படைப்பு
06
.
05
.
1993

அநியாய அழிப்பு
14
.
03
.
2010

கடந்த 14.03.2010 ஞாயிற்றுக்கிழமை அன்று அகாலமரணமடைந்த எமது தெய்வக்குழந்தை

அமரர்

திருச்செல்வம் கபிலநாத்

(யா/சாவகச்சேரிஇந்துக் கல்லூரி, சாதாரணதரம் - 2009)

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (27.04.2010) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
அருள் விநாயகர் ரேடர்ஸ்,
அருள் விநாயகர் மோட்டோர்ஸ்.
பெரியரசடி வீதி,
சாவகச்சேரி.

(வி/567018)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இந்துக்களின் போர்' 30, 01 ஆம் திகதிகளில் இரண்டு பிரபல கல்லூரிகள் பலப்பரீட்சை

## முதல் வெற்றியைப் பதிவுசெய்யப் போகிறவர்கள் யார்?

யாழ்ப்பாணம்,ஏப்.27

'இந்துக்களின் போர்' என வர்ணிக்கப்படும் யாழ்.இந்துக்கல்லூரி-கொக்குவில் இந்துக்கல்லூரி அணிகளுக்கு இடையிலான இருநாள் துடுப்பாட்டப் போட்டி எதிர்வரும் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் முதலாம் திகதி சனிக்கிழமையும் நடை பெறவுள்ளது.

கொக்குவில் இந்துக்கல்லூரியின் மைதானத்தில் நடைபெறும் இப்போட்டி மூன்றாவது வருடமாக நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

2008 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்துக்களின் போரில் நடைபெற்று முடிந்த இரு போட்டிகளும் சமனிலையில் முடிவடைந்துள்ளன. இதனால் இம்முறை யார் வெற்றிபெற்று முதல் வெற்றியைப் பதிவு செய்யப்போகிறார்கள் என அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளனர்.

இப்போட்டிக்குப் பிரதம விருந்தினராக பிரபல தொழிலதிபர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் கலந்துகொள்வுள்ளார்.

இப்போதே களைகட்ட ஆரம்பித்துள்ள இந்துக்களின் போருக்கு இம்முறை அதிகளவான ரசிகர்கள் வருவார்கள் உன எதிர்பார்க்கப்படுகிறது. போட்டிக்கான ஊடக அனுசரணையை 'உதயன்' வழங்கவுள்ளது குறிப்பிடத்தக்கது. (50-06)

## மென்பந்து துடுப்பாட்டத் தொடர் சம்பியன் வென்றது 'சுப்பர் கிங்ஸ்'.

தென்கிழக்கு, ஏப்.27

வரணி நண்பர்கள் விளையாட்டுக் கழகத்தின் மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் சம்பியன் வென்றது 'சுப்பர் கிங்ஸ்' விளையாட்டுக்கழகம்.

சித்திரைப் புத்தாண்டையொட்டி நடத்தப்பட்ட போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சுப்பர் கிங்ஸ் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 79 ஓட்டங்களைப் பெற்றது.

சுப்பர் கிங்ஸ் சார்பில் துடுப்பெடுத்தாடிய எஸ்.காந்தன் 36 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இளைஞர் கழக அணி 60 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியடைந்தது. (6-23)

## பருத்தித்துறை உதயதாரகையின் உதைபந்தாட்டப் போட்டியில்

யாழ்ப்பாணம், ஏப்.27

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலையின் அனுசரணையுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடந்தும் அணிக்கு 7 பேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் நாளை மறுதினம் வியாழக்கிழமை கற்கோவளம் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதும் அணிகள் விவரம் வருமாறு :

பி.ப. 3.30 மணி

கரணவாய் மத்திய விளையாட்டுக் கழகம் எதிர் பருத்தித்துறை விளையாட்டுக் கழகம்.

பி.ப.4.30 மணி

றேஞ்சஸ் விளையாட்டுக்கழகம் எதிர் பாரதி விளையாட்டுக்கழகம். (6-23)

# வலிகாமம் வலய கரப்பந்தாட்டச் சம்பியனை வென்றது இளவாலை மெய்கண்டான் ம.வி.

## மூன்றாம் இடத்தைப் பெற்றது மானிப்பாய் இந்துக்கல்லூரி

வலி.வடக்கு, ஏப். 27

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான (17 வயதுப் பிரிவு) கரப்பந்தாட்டப் போட்டியின் சம்பியனாக இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் சம்பியன் பட்டத்தைத் தனதாக்கியது.

மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியும் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயமும் பலப்பரீட்சை நடத்தின.

மூன்று செற்களைக் கொண்ட இந்தப் போட்டியில் இளவாலை மெய்கண் டான் மகா வித்தியாலயம் 25:19, 25:17 எனும் புள்ளிகள் அடிப்படையில் சண்டி லிப்பாய் இந்துக் கல்லூரியை வீழ்த்தி சம்பியனாகியது.

மூன்றாம் இடத்திற்கான போட்டிக்காக மானிப்பாய் இந்துக்கல்லூரியும் அளவெட்டி அருணாசலம் வித்தியாலயமும் மோதின.

மூன்று செற்களைக் கொண்ட போட்டியில் மானிப்பாய் இந்துக்கல்லூரி 25:15, 25:19 எனும் புள்ளி அடிப்படையில் அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தைத் தோற் கடித்து மூன்றாம் இடத்தைப் பெற்றது.

வலய மட்டத்தில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற இவ்வணிகள் மாவட்ட மட்டப் போட்டிகளில் பங்குபெறத் தகுதி பெற்றுள்ளன. (6-86)



இராணுவத்தினரின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் இலங்கை கிரிக்கெட் சபையினால் நடத்தப்பட்ட மத்தியஸ்தர்களுக்கான செயலமர்வு நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட படைகளின் தலைமைப்பீட அதிகாரி பிரிகேடியர் பிராங்ளின் ரொட்றிக்கோவுடன் செயலமர்வில் கலந்து கொண்டவர்களைப் படத்தில் காணலாம். (படம்: நேசன்)

# சென். தோமஸ், மணற்காடு சென். அன்ரனிஸ் உதைபந்தாட்டத்தில் வெற்றி

யாழ்ப்பாணம்,ஏப்.27

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலையின் அனுசரணையுடன் கற்கோவளம் உதயதாரகை வின்ளயாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 7பேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கற்கோவளம் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் சென். தோமஸ் விளையாட்டுக்கழகம், மணற்காடு, சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் செண். தோமஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யங் லைன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் சென். தோமஸ் விளையாட்டுக்கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய யங்லைன்ஸ் விளையாட்டுக்கழக அணியை 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டது.

தொடர்ந்து இடம்பெற்ற மற்றொரு ஆட்டத்தில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

இதில் மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது. (6-23)

# நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான போட்டி முடிவுகள்

வலி.வடக்கு ஏப்.27

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான தடகள விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு:

100 மீற்றர் ஓட்டம்

எஸ். பானுஷா- (அரியாலை ஐக்கிய வி.க), கே.கல்யாணி (கோண்டாவில் சித்தி விநாயகர் வி.க.) வை.வினித்தா (கோண்டாவில் சித்தி விநாயகர் வி.க.)

200 மீற்றர் ஓட்டம்

கே. ஜான்சி (கொக்குவில் மத்திய ச.ச.வி.க.), எஸ்.துசிதா (அரியாலை ஐக்கிய வி.க.), ஆர். மீராகினி (கொக்குவில் மத்திய ச.ச.வி.க.).

400 மீற்றர் ஓட்டம்

கே.ஜான்சி (கொக்குவில் மத்தி ச.ச.வி.க), எஸ்.இராகவதனி (கொக்குவில் மத்தி ச.ச.வி.க.), எ.காயத்திரி (அரியாலை ஐக்கிய வி.க.)

800 மீற்றர் ஓட்டம்

எஸ். இராஜவதனி (கொக்குவில் மத்திய ச.ச.வி.க.); கே.ஜான்சி (கொக்குவில் மத்திய ச.ச.வி.க.)

எஸ். மிதுலா (கொக்குவில் மத்திய ச.ச.வி.க.).

1500 மீற்றர் ஓட்டம்

எஸ். ஹம்சவதனி (கொக்குவில் மத்திய ச.ச.வி.க.),எம். ஜனனி ( அரியாலை ஐக்கிய வி.க.).

5000 மீற்றர் ஓட்டம்

எஸ்.உஷா ( நல்லூர் ஒலிம்பிக் வி.க.), எம். அபிஸ்பா ( நல்லூர் ஒலிம்பிக் வி.க.)

10,000 மீற்றர் ஓட்டம்

எம். ஜனனி (அரியாலை ஐக்கிய வி.க.), எம். கிரிசாந்தி ( அரியாலை ஐக்கிய வி.க.)

நீளம் பாய்தல்

எஸ்.பானுஷா ( அரியாலை ஐக்கிய வி.க.), எ.காயத்திரி( அரியாலை ஐக்கிய வி.க.), எஸ்.மிதுலா ( கொக்குவில் மத்திய ச.ச.வி.க.)

உயரம் பாய்தல்

ஆர். தரசுதா( கொக்குவில் மத்திய ச.ச.வி.க.), எஸ்.துஷிதா ( அரியாலை ஐக்கிய வி.க.)

முப்பாய்ச்சல்

எஸ்.பானுஷா( அரியாலை ஐக்கிய வி.க.), எஸ். துஷிதா( அரியாலை ஐக்கிய வி.க.), எ.விதுரா ( கொக்குவில் மத்திய ச.ச.வி.க.).

தட்டெறிதல்

ரி.அபிராமி(அரியாலை ஐக்கிய வி.க.),எ.சிரோமி(அரியாலை ஐக்கிய வி.க.), பி.ஜனனி ( கொக்குவில் மத்திய ச.ச.வி.க.).

குண்டு போடுதல்

ரி.ஸ்ரீசத்தியா ( அரியாலை ஐக்கிய வி.க.), பி.ஜனனி ( கொக்குவில் மத்திய ச.ச.வி.க.), எ.சிரோமி( அரியாலை ஐக்கிய வி.க.).

ஈட்டியெறிதல்

ரி.ஸ்ரீசத்தியா (அரியாலை ஐக்கிய வி.க.), பி.ஜனனி ( கொக்குவில் மத்திய ச.ச.வி.க.), எ.சிரோமி (அரியாலை ஐக்கிய கூக.க.).

4x100 மீற்றர் அஞ்சலோட்டம்

அரியாலை ஐக்கிய வி.க, கொக்குவில் மத்திய ச.ச.வி.க, கோண்டாவில் சித்தி விநாயகர் வி.க.

4x400 மீற்றர் அஞ்சலோட்டம்

அரியாலை ஐக்கிய வி.க. (50-6-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்





உடுவில் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட உடுவில் மத்திய விளையாட்டுக்கழகத்திற்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பேராசிரியர் க.தேவராஜா வெற்றிக்கிண்ணத்தை வழங்குவதையும்,வெற்றியீட்டிய உடுவில் மத்திய விளையாட்டுக்கழக வீர, வீராங்கனைகளையும் படங்களில் காணலாம்.

(படங்கள்-நேசன்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



புதிய காரியங்களைச் செய்ய முற்படுவீர்கள். நாடி வந்த சிலருக்கு இல்லை என்று சொல்லாமல் பிறரிடம் கைமாத்து வாங்கிக் கொடுத்தாவது உதவி செய்வீர்கள். பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். கோயில்களுக்குச் சென்று வழிபாடு நடத்துவீர்கள். சிறு பணவரவுகளைப் பெறலாம்.

### இடபம்



ஒரு வழியில் வந்த வரவுகள் மற்றொரு வழியில் செலவாகும். இளைய உடன் பிறப்புகளால் அனுகூலம் கிடைக்கலாம். மனக் குழப்பங்கள் விலக அனுபவம் உள்ளவர்களிடம் ஆலோசனை கேட்டு செயற்பட வேண்டியது அவசியம். பிள்ளைகள் வழியில் உருவான பிரச்சினைகள் தீர்விற்கு வரும். கனவுத் தொல்லையுண்டு.

### மிதுனம்



நன்றி மறந்தவர்களை நினைத்து வருத்தப்படுவீர்கள். கணவன், மனைவி இடையே வாக்குவாதங்கள் ஏற்படலாம். மருத்துவர்கள் நினைத்தது நடக்கலாம். வியாபாரிகள் கடனாகக் கொடுத்த பணத்தை வசூலிப்பதில் அக்கறை காட்டுவர். சில விடயங்களில் கவனமாகச் செயற்பட்டு அதிருப்திக்கு ஆளாகலாம்.

### கடகம்



தொடங்கிய காரியங்கள் தங்கு தடையின்றி நடக்கும் நாள். நண்பர்கள் வழியில் சிறு அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். வெளிவட்டாரத் தொடர்புகளை விரிவுபடுத்திக் கொள்வீர்கள். பல நாள்களாக மன உளைச்சலை கொடுத்துக் கொண்டிருந்த விடயம் திடீரென முடிவுக்கு வரும். ஆசைகள், எண்ணங்கள் நிறைவேறும் நாள்.

### சிங்கம்



துணையாக இருந்த சிலரே பிரச்சினையாக மாறலாம். சில வேலைகளில் தீவிரமாக இறங்கிவிட்டு பின்னர் அதில் இருந்து பின்வாங்கலாம். கொடுக்கல், வாங்கல்களை சீராகவைத்துக் கொள்ள பிரயத்தனம் செய்வீர்கள். வியாபாரிகள் புதியவர்களின் சந்திப்பால் பெருமை அடைவர். பரிகாசப் பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும்.

### கன்னி



உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் கண்டிப்பற்கு ஆளாகலாம். மனதிற்கு உற்சாகம் தரும் செய்திகளைக் கேட்கலாம். வேலையாள்கள் வழியில் உருவான பிரச்சினைகள் தீர்விற்குவரும். வியாபாரிகள் அகலக்கால் வைக்காமல் எச்சரிக்கையோடு செயற்பட வேண்டும். நாளை வரும் என நினைத்த பணவரவு ஒன்று இன்றே வரலாம்.

### துலாம்



தொழிலில் மற்றவர்கள் செய்த தவறு ஒன்றுக்கு நீங்கள் பொறுப் பேற்கலாம். விரயச் செலவுகளைத் தவிர்க்க பேராசைகளைத் தவிர்க்க வேண்டும். உறவினர்கள் தொடர்பான விடயங்களில் கௌரவம் பார்த்து கர்வமாக நடந்து கொள்வீர்கள். கடன் பாக்கிகளை கொடுப்பது தள்ளிப் போகலாம். எதிர்பாராத சந்திப்புகள் நிகழும்.

### விருச்சிகம்



காலை நேரத்தில் மனதிற்கு உற்சாகம் தரும் செய்திகளைக் கேட்கலாம். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பெரிய மனிதர்கள் சிலரைச் சந்திக்க மேற்கொண்ட முயற்சிகளில் நல்ல பலன் கிடைக்கும். உதிரி வருமானங்கள் கைக்குக் கிடைக்கும். அயலாரின் ஆதரவைப் பெறுவீர்கள்.

### தனுசு



மனதில் தெய்வீக சிந்தனைகள் குடிகொள்ளும் நாள். எதிர்ப் புகளை முறியடிக்க புதிய திட்டம் போடுவீர்கள். இடமாற்றம் தொடர்பான விடயங்களில் நல்ல செய்திகளைக் கேட்கலாம். பிள்ளைகள் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். ஓய்வு எடுக்க நினைத்தாலும், முடியாத அளவுக்கு வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம்.

### மகரம்



ஒரு விடயத்தைப் பற்றி மனக்கோட்டை கட்டி, அடுத்த சில நிமிடங் களில் அது தகர்ந்து போகலாம். நண்பர்களுடன் கொண் டாட்டங்களில் பங்கேற்கலாம். சில வேலைகளுக்காக நீங்கள் மட்டுமின்றி, மற்ற சிலரையும் கூட்டிக்கொண்டு அலைவீர்கள். பணிபுரிவோர் வேறுவேலை காரணமாக திடீர் விடுப்பு எடுக்கலாம்.

### கும்பம்



வெறுப்பு, விரக்தி ஆட்கொள்ளும் நாள். மற்றவர்களுக்காக சில விடயங்களில் விட்டுக்கொடுத்துச் செல்ல நேரிடலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். உறவினர்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். திடீர் செலவால் சேமிப்பில் கைவைக்கலாம்.

### மீனம்



எந்த வேலையையும் பொறுப்பாகச் செய்து மற்றவர்களின் பாராட் டுக்களைப் பெறுவீர்கள். அதிக செலவாகும் என நினைத்த காரியம் ஒன்று குறைந்த செலவில் முடிவுக்கு வரலாம். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சிகளில் நீங்களும் பங்கேற்கலாம். பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிவதில் நாட்டம் செல்லும். வெற்றிகரமான நாள்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ
ஓம் சக்தி
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

# யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயம்

# தேர்த்திருவிழாச் சிறப்பு மலர் - 27.04.2010



## சித்திரத் தேரிலே சிங்காரபவனி! பக்தர்கள் கூட்டம் அலைமோதும் காட்சி

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற அன்னை ஆதிபராசக்தியானவள் மதுரையிலே மீனாட்சியாகவும் காசியிலே விசாலாட்சியாகவும் காஞ்சியிலே காமாட்சியாகவும் வீற்றிருந்து வழிபடும் அடியார்களின் துன்பதுயரங்களைக் களைந்து இன்ப வாழ்வருளுவதுபோல ஈழத்திலே யாழ்.வண்ணையிலே கருணை மிகு காமாட்சியாக எழுந்தருளி அருள்பாலிக்கின்றாள்.

யாழ்.காங்கேசந்துறை வீதியிலே தட்டார்தெருவுக்குச் சமீபமாக வண்ணையம்பதியிலே கோயில் கொண்டெழுந்தருளி வழிபடும் அடியவர்களின் இன்னல்களையும் இடுக்கண்களையும் நீக்கிப் பரிபூரணானந்தமான பெருமைமிக்க பெருவாழ்வை அள்ளி வழங்கி அருள்பாலித்துக் கொண்டிருக்கிறாள் அம்பிகை காமாட்சி.

அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகியான அம்பிகை காமாட்சிதான், விஸ்வகுல மக்களின் வழிபடு தெய்வமாக விளங்குகின்றாள். அழகிய கம்பீரமான இராஜகோபுரத்துடன் விளங்குகின்ற இந்த அருள்மிகு ஆலயத்தின் அழகும் அலங்காரத் தோற்றமும் கண்ணைக் கவரும் தன்மையுடையன.

இவ்வாலய அம்பிகையின் தோற்றத்துக்கு கர்ணபரம்பரையான வரலாறு ஒன்றும் இருக்கிறது. மருத மரங்களும் நாவல் மரங்களும் நிறைந்து காணப்பட்ட இந்தக் குளக்கரையிலே ஒருநாள் மதிய வேளை விறகுச் சுள்ளிகள் ஒடிப்பதற்காக வந்த ஓர் இளம்பெண் இப்பகுதியிலே சிறுநீர் கழித்தாராம். அவ்வேளை அவரையறிமாமல் அவருடைய முலைகளை யாரோ திருகிவிட்ட உணர்வு மேலிட அப்பெண் அலறியடித்துக்கொண்டு மற்ற உறவினர்களிடம் முறையிட அப்போது ஒரு வயோதிப விஸ்வகுல மாது அங்கே உறைந்துள்ள தேவதையைச் சாந்தப்படுத்தும் நோக்கில் மருத மரத்தடியில் ஒரு கல்லை வைத்து வழிபாடியற்றியதாகக் கூறப்படுகின்றது.

அன்று தொடங்கிய வழிபாடு தான் பின்பு சிறிது சிறிதாக வளர்ச்சியுற்று பின்பு காலக்கிரமத்தில் விஸ்வகுல மக்களின் வழிபாட்டுத் தெய்வமான காமாட்சி அம்பாள் கோயிலாக உருவாகிற்று. இப்போது சித்திராப் பௌர்ணமியைத் தீர்த்தநாளாக்கொண்டு 15 நாள் மகோற்சவம் நடைபெறுகிறது. இங்கே பூரணை தோறும் நடைபெறுகின்ற குத்துவிளக்கும் பூசை மிகவும் விசேடமானது. இங்கு வீதிவலம் வரும் அம்பிகையின் அருட்காட்சி காணத் தூர இடங்களிலிருந்தெல்லாம் பக்தர்கள் வருவார்கள். சாத்துப்படி பார்க்கவே பக்தர் கூட்டம் அலைமோதும். அழகுக் காட்சியை இங்குதான் காணலாம். இன்று சித்திரத் தேரிலே சிங்கார பவனி வருகின்ற கண்கொள்ளாக்காட்சி காண்பதற்குப் பூர்வஜென்ம புண்ணியஞ் செய்திருக்க வேண்டும். விநாயகர் சுப்பிரமணியர் சகிதம் அம்பிகை அருள் பாலித்து தேர் மீது ஆரோகணித்து வருகின்ற அழகே தனி.

இந்த அம்பாளின் தேர்வடம் பிடித்திழுத்தால் சொர்க்கத்திலே ஓர் இடம் பிடிக்கலாம் என்ற நம்பிக்கையுடன் இன்று ஆண்களும் பெண்களுமாக அம்பிகையின் தேரிழுக்கும் அற்புதம் இங்கே காணலாம். ' அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாம்' என்ற மகாவாக்கியத்துக்கிணங்க ஆதிபராசக்தி அலங்கார பூஜிதை காமாட்சி அம்பாளைத் தரிசித்து உய்தி பெற்றுப் பெருவாழ்வு வாழ்வோம்.

சிவநெறிக்கலாநிதி ' வில்லிசைச் செல்வர்''
இராசையா ஸ்ரீதரன்.

## மஹோற்ஷவ குருவின் அருளாசியுரை

வண்ணையிலே உறைந்து அருளாட்சி செய்கின்ற அம்பிகை காமாட்சிக்கு இன்று தேர்த்திருவிழா. எல்லாம் வல்ல நாயகியாக விளங்குகின்ற அம்பாள் இன்று தேரிலே ஆரோகணித்து அருள்பாலிக்கும் அற்புதக் காட்சியைக் கண்டுகளிக்கும் பக்தர்குழாம் பரிபூரண கிருபாகடாட்சம் பெற்றுச் சிறப்புடன் வாழ அருளாசி நல்குகின்றோம்.

இன்று அம்பிகையின் தேர்த்திருவிழா சிறப்புடன் நிறைவேறிப் பிறந்துள்ள புத்தாண்டு முதலாக வண்ணையம்பதி வாழும் எல்லா மக்களும் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்து மங்களமும் சுபீட்சமும் பெற்று நல்வாழ்வு வாழவேண்டுமென்று அம்பாளைச் சிந்தித்து வந்தித்துச் சேவித்து நிற்கின்றோம்.

எல்லோரும் இன்புற்று வாழ எங்கள் அன்பு அன்னை ஸ்ரீகாமாட்சித்தாய் கருணை புரியப் பிரார்த்தித்து வாழ்த்தி வணங்கி ஆசி வழங்கிப் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

-பிரம்மஸ்ரீ இ.நடராஜக் குருக்கள்,
வண்ணை ஸ்ரீகாமாட்சி அம்பாள் தேவஸ்தான பிரதமகுருவும்,
மஹோற்சவ குருவும்.

## நல்லை ஆதீன குருமுதல்வரின் ஆருளாசிச் செய்தி



அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகியாக விளங்குகின்ற ஆதிபராசக்தியான அன்னை, யாழ்ப்பாணம் வண்ணை மாநகரிலே ஸ்ரீகாமாட்சி அம்பிகையாக எழுந்தருளி வீற்றிருந்து அருள்பாலிக்கின்றாள்.

இன்று இந்த அம்பிகைக்குத் தேர்த்திருவிழா. வழிபடும் அடியார்களின் அல்லல் களைந்து அருள் பாலிக்கும் காமாட்சித்தாய் இன்று சித்திரத் தேரிலே சிங்கார பவனி வரும் பொன்னான திருநாளாகும்.

அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிகவரம் பெறலாமே என்றபடி அடியவர்கள் எல்லோரும் அன்னை காமாட்சியை வழிபாடியற்றிப் பூமியில் சகல ஐஸ்வரியங்களுடன் வாழவேண்டுமென்று எல்லாம் வல்ல தாய் காமாட்சியைப் பணிந்து போற்றி உளமாரப் பிரார்த்தித்து அருளாசிகள் வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

தேர்த்திருவிழா அழித்தலைக் குறிப்பதாகும் ஆகவே,இன்று ஆழகிய சித்திரத்தேரிலே ஆரோகணித்து அருள்புரியும் அன்னை ஸ்ரீகாமாட்சி எங்களுடைய பாவங்களையெல்லாம் களைந்து துன்பங்களை அழித்தொழித்து அடியவர்களுக்கு அருள் புரியவேண்டுமென்று நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து நல்லைக் கந்தனையும் வாழ்த்தி அருளாசி கூறி மகிழ்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி
என்றும் வேண்டும் இன்ப அன்பு.

இரண்டாவது குருமகா சந்நிதானம்,
ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்.
நல்லை ஆதீன குருமுதல்வர்.
திருஞானசம்பந்தர் ஆதீனம், யாழ்ப்பாணம்.


**ஷன் கபே**
கே.கே.எஸ் வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

**அப்பன் ஆட்ஸ்**
576, கே.கே.எஸ்.வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

**மணிமாறன் நகைத்தொழிலகம்**
896,கே.கே.எஸ்.வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

**சடாச்சரம் நகைத் தொழிலகம்**
K.K.S ROAD,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

**சாருஜன் ஜூவெல்ஸ் சிற்றி**
யாகினி பிறின்டேர்ஸ்
620,கே.கே.எஸ்.வீதி,
நாச்சிமார் கோயிலடி,யாழ்ப்பாணம்.
T.P. 0773400910

**சிவன் அம்மை கொம் நெற்**
963, கே.கே.எஸ்.வீதி,
நாச்சிமார் கோயிலடி,
தட்டாதெரு. யாழ்ப்பாணம்.

**லக்சனா மல்ரி சென்ரர்**
57, இராமநாதன் வீதி,
கலட்டி.
யாழ்ப்பாணம்.

**B.K. மல்ரி சொப்**
மின்சார உபகரணங்கள், T.V அன்ரனாக்கள், P.V.C பைப் வகைகள், கல்வனைஸ் பைப் வகைகள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
1008, கே.கே.எஸ்.வீதி, நாச்சிமார் கோயிலடி
யாழ்ப்பாணம்.

**லிங்கம்ஸ் ஸ்ரோர்ஸ்**
நல்ல தரமான பலசரக்கு பொருள்களுக்கு
சிறந்த இடம் 603.காங்கேசன்துறை வீதி.
யாழ்ப்பாணம்.

**கிருஸ்ணபிள்ளை அன் சன்ஸ்**
சைக்கிள் உதிரிப்பாகங்கள், மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள்.
1155(615),கே.கே.எஸ்.வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

**சாரா என்ரபிறைஸ்**
59,இராமநாதன் வீதி,
கலட்டி,
யாழ்ப்பாணம்.

**சத்தியா சலூன்**
596, கே.கே.எஸ்.வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

**ஸ்ரீ அம்பாள் எலெக்ரிக்கல்ஸ்**
கேற்,கிறில் வேலைகளுக்கும் இரும்பு.
வெல்டிங் வேலைகளுக்கும் சிறந்த இடம்
1029, கே.கே.எஸ்.வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

**லம்போதரா**
மிதிவண்டி திருத்துநரும்
உதிரிப்பாக விற்பனையும்
1006, கே.கே.எஸ்.வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

**ரமணன்**
கட்டப் பொருள் விற்பனை நிலையம்
சகலவிதமான கட்டப் பொருள்கள் நியாய விலைக்கு குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்
525,528 கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:021 222 9296.

**மிலேனியம் றெஸ்ட்**
உல்லாசப் பயணிகள்
விடுதி மற்றும் உணவகம்.
70, இராமநாதன் வீதி, நாச்சிமார்
கோயிலடி, யாழ்ப்பாணம்.

**சிவா எலெக்ரிக்கல்**
635, கே.கே.எஸ்.வீதி, நாச்சிமார் கோயிலடி.
மின்சார உபகரணங்கள் S.lon
உதிரிப்பாகங்கள் போன்றவற்றை பெற்றுக்
கொள்ள நாடவேண்டிய இடம்.

ரி.வி.அன்ரனா, மோபைல் அன்ரனா,கிற் காட், எலெக்ரிக்கல் உபகரணங்கள் விற்பனையாளர்
**ஸ்ரீஜனா**
மின்பொருள் விற்பனை நிலையம்
1157, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

**துளசிகா களஞ்சியம்**
1004, கே.கே.எஸ்.வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

**நித்தியாலெட்சுமி**
கட்டப் பொருள் விற்பனை நிலையம்
பதிவு இல:6779
உரிமையாளர்: திரு.கு.தவராசசிங்கம்
861,கே.கே.எஸ்.வீதி,
தட்டாதெரு யாழ்ப்பாணம்.

வெற்றி இலக்கு மாணவர்கள் பரீட்சையில் அதிகபுள்ளி பெற்றிட தரம் 1 முதல் 5வரையான பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்களைப் பெற்றுப் பயன் அடையுங்கள்
**தயா அச்சகம்**
138, கே.கே.எஸ்.வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

**நியூ வைற்**
சலவைத் தொழிலகம்
554, கே.கே.எஸ்.வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

**வஜீதா**
மோட்டார் சைக்கிள் திருத்தகமும் சேவிஸ் சென்ரரும்
**Vageetha**
*Prop. M.Vasanthan*
300/1, Navalar Road,
Railway Junction,Jaffna.
300/1, நாவலர் வீதி,
ரயில்வே சந்தி,யாழ்ப்பாணம்.
தொ.பே: 0778097741

**மகமாயி ஸ்ரோர்ஸ்**
பல்பொருள் வாணிபம்
866, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

**ஐங்கரன்**
துவிச்சக்கரவண்டி திருத்துமிடம்
175, அரசடிச்சந்தி சிவப்பிரகாசம் வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

**முருகானந்தா உணவகம்**
790, கே.கே.எஸ்.வீதி,
நாச்சிமார் கோயிலடி,
தட்டாதெரு,
யாழ்ப்பாணம்.

**SOFT VIEW COMPUTER COLLEGE**
*NO.43, K.K.S.ROAD*
தட்டாதெரு,
யாழ்ப்பாணம்.


விழாச் சிறப்புற வாழ்த்துவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்வேலி கந்தசுவாமி ஆலயம்

## தேர்த் திருவிழா சிறப்பு மலர் 27.04.2010





கடம்பமர விருட்சமும், தீர்த்தத் தடாகமும் பூங்கொல்லைச் சிறப்பும் மிக்க இவ் ஆலயத்தில் மூலவேராக வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியர் வீற்றிருந்து அருள் பாலிக்கின்றார். ஆலய சுற்றுப்பிரகாரங்களில் விநாயகர், சிவலிங்கம், உமாதேவி, சிவகாமி சமேத நடேசப்பெருமாள், வள்ளி தேவசேனாதிபதி சமேத ஆறுமுகப் பெருமான், தெட்சணாமூர்த்தி, துர்க்கை அம்மன், வைரவர் ஆகிய மூர்த்திகளும் நவக்கிரகங்களுக்கான வழிபாட்டிடமும் வெளிவீதியில் தீர்த்தக் கேணிக்கருகில் பழனி ஆண்டவர் கோயிலும், ஆலய ஈசான மூலையில் கடம்பமர விருட்ச நிழலில் நாகதம்பிரான் கோயிலும் சிறப்பாக அமைந்துள்ளன. நீர்வைக் கந்தப் பெருமான் சந்நிதானத்தில் நேர்த்தி வைத்துக் காணிக்கைகள் வழங்கும் மரபு சிறப்புக்குரியது. இவ்வாலயத்தின் மகோற்ஷவத்தில் தீர்த்தம், சித்திரைப் பௌர்ணமியில் நடைபெறுவதும் சிறப்புக்குரியதாகும்.

வேல் வழிபாடு ஆரம்பித்த காலத்தில் இருந்து புராண படனமரபும் பேணப்பட்டு வருகின்றது. சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன் இப்புராணப்படிப்பில் பங்கு கொண்ட பெருமை இவ்வாலய பிரதமகுருவாக விளங்கிய சிவஸ்ரீ சுவாமிநாத இராசேந்திரக்குருக்களையும் சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்களையும் சாரும். தற்போது இராசேந்திரக் குருக்களின் ஏக புதல்வன் சிவஸ்ரீ இ. சுவாமிநாதக் குருக்கள் பிரதமகுருவாக ஆலயத்தைச் சிறப்பாக வழி நடத்தி வருகின்றார்.

சண்முகம் செல்வகுமார்,
தலைவர், நீர்வேலி கந்தசுவாமி கோயில், பரிபாலனசபை.

### தமிழர் பண்பாட்டில் முருக வழிபாடு தனித்துவமானது



ஈழத்திருநாட்டின் யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமியில் இற்றைக்கு இருநூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்தோன்றிய அற்புதமான திருக்கோயில் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோயில். தமிழர் பண்பாட்டில் முருகவழிபாடு என்பது தனித்துவமானது. மிக நீண்ட வரலாறு கொண்டது. பழம்பெரும் கிராமமாகிய நீர்வேலிக் கிராமம் முற்றுமுழுதாக முருகவழிபாட்டுக்கு முதன்மை கொடுத்த கிராமம். பண்டிதர்கள், பாவலர்கள், கலைஞர்கள் வாழ்ந்த புண்ணிய பூமி. நீர்வளம், நிலவளம் நிறைந்த செல்வம் மலிந்த பூமி. இத்திருவூரில் மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையே அமைந்த திருக்கோயில் நீர்வேலிக் கந்தசுவாமி கோயில். நீர்வையில் பிறந்த முருக பக்தர் கந்தையினார் என்ற பெரியார். இவர் கதிர்காமக் கந்தனைத் தரிசிப்பதற்கு பக்தர்களோடு கால் நடையாகச் சென்ற சமயம் துறவி ஒருவர் தோன்றி வேல் ஒன்றை அவரது கையில் கொடுத்து ''இதனைத் துணையாகக் கொண்டு செல் கதிரமலைக் கந்தனை அடைவாய்'' என்று கூறிச் சிறிது தூரம் வழியும் காட்டிப் பின் மறைந்தருளினார் என்றும் கதிர்காமக் கந்தனைத் தரிசித்து மீண்ட கந்தையினார் துறவியாய் பெற்ற வேலாயுதத்தை நீர்வேலியிலே ஸ்தாபித்துச் சிறியதோர் ஆலயத்தைத் தோற்றுவித்தார் என்றும் கூறப்படுகின்றது.

நீர்வேலியில் ஸ்தாபிதமான வேற்கோட்டம் 1852இல் கந்தப் பெருமானது விக்கிரம் கொடிகாமத்திலிருந்து கொண்டு வரப்பட்டு, கோவிலமைக்கப்பட்டு கந்தையினார், நல்லையினார் என்னும் இருவரினால் பரிபாலிக்கப்பட்டு வந்தது. இதனைத் தொடர்ந்து தர்மகர்த்தா சபையும் தற்போது பரிபாலன சபையும் அமைக்கப்பட்டு பரிபாலிக்கப்பட்டு வருகின்றது.
இவ்வாலயத்தின் ஈசான மூலையில் கந்தனுக்குக் கந்தகடம்ப விருட்சம் தல விருட்சமாய் அமைந்துள்ளமை சிறப்பு அம்சமாகும்.

### நல்லை ஆதீன குரு முதல்வரின் அருளாசிச்செய்தி



இன்று நீர்வேலிப் பதியுறையும் முருகப் பெருமானுக்கு தேர்த்திருவிழா. கலியுக வரதனான கந்தப் பெருமான் கவின்மிகு தேரிலே களிப்புடன் வரும் காட்சி காணக் கண் கோடி வேண்டும்.

நீர்வேலி வாழ் மக்கள் பூர்வஜென்ம புண்ணியஞ் செய்தவர்களாவர். முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கின்ற வடிவேலழகன் இன்று வள்ளிதேவசேனா சமேதராகத் தேரிலே ஆரோகணித்து அருள்பாலித்துத் திருவீதிவலம் வரும் அற்புதம் நீர்வேலியில் நிகழ்கின்றது.

அழகே ஒருருவெடுத்தாற்போன்று அழகன் முருகன் அருட்காட்சி தரும் இந்த நன்னாளில் அடியார்கள், அன்பர்கள் அனைவரும் அல்லல் அகன்று இன்புற்று வாழ எம்பெருமான் திருவருள்புரியவேண்டுமென்று உளமாரப் பிரார்த்தித்து அருளாசி நல்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

இற்றை நாள்வரை பட்ட துன்ப துயரங்கள் யாவும் விலகி இப்புத்தாண்டு முதலாக அனைவரும் ஆனந்தமயமான நல்வாழ்வு வாழவேண்டுமென நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து கந்தனைக் கரங்குவித்துச் சிரந்தாழ்த்தி வணங்கி வாழ்த்தி ஆசிவழங்கி அமைகின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞானசம்பந்த பரம்மாசாரிய சுவாமிகள்,
நல்லை ஆதீன குருமுதல்வர்,
இரண்டாவது குருமகா சந்நிதானம்.

### ஆசியுரை



''ஸ்கந்தஸ்ய கீர்த்திம் அதுலாம் கலிகல்மஷ நாசினீம்'' என்ற பகவான் வியாசரின் வாக்குப்படி இந்தக் கலி காலத்தில் உண்டாகும் சகல துன்பங்களையும், பாவங்களையும் நீக்க வல்லது கந்தனது கருணையே ஆகும். எனவே இன்றைய துயர் தொலைய நீர்வை நகரிலே கந்தப் பெருமான் வள்ளி தேவசேனா தேவியாருடன் ஆறுமுகப் பெருமானாகத் திருத்தேரிலே பவனி வருகிறார்.

எமது திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள ஆறுமுக சுவாமியின் திருவுருவ எழிலையும் சிறப்பையும் அழகையும் கண்ட 'கலைமகள்' ஆசிரியரும் நமது தந்தையாரின் நண்பருமான 'வாகீச கலாநிதி' கி.வா ஜகந்நாத ஐயரவர்கள் 'இத்தகு அழகிய திருவுருவை பாரதநாட்டில் கூடத் தரிசித்தல் அரிது' என விதந்துரைத்துள்ளமையும் இச் சந்தர்ப்பத்தில் நினைத்தற்குரியது. இத்தகு சிறப்பு மிக்க ஷண்முகப் பெருமான் கடம்பமலர் மணங்கமழும் நீர்வையூரில் அடியார்கள் வடம் தொட்டிழுத்து சுவர்க்கத்தில் இடம்பிடிக்கும் வண்ணம் சிற்ப சித்திர ரதத்தில் விநாயகர், பார்வதி பரமேஸ்வரர், சண்டேஸ்வரர் ஆகிய மூர்த்திகளுடன் திருவுலாக் கொண்டருள்கிறார்.

முருகனடியார்கள் யாவரும் இவ்விழாவில் பங்கேற்று இக பரசுகம் பெறவும் இந்நாட்டிலே நிரந்தரமான சாந்தியும் சமாதானமும் சுபிக்ஷ வாழ்வும் உண்டாகவும் கந்தனின் கழலடிகளைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கிறோம்.

சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக் குருக்கள்,
ஆலய பிரதம குருவும் மஹோற்சவ குருவும்




**பிறவுண்ஸ் அன் கம்பனியின்**

❁ TAFE உழவு இயந்திரம், ❁ EXIDE பற்றறி வகைகள், ❁போட்டோக் கொப்பி இயந்திரங்கள்
❁ ரோனர் வகைகள் என்பவற்றையும்
அக்ரோ ரெக் நிறுவனத்தின் இரு சக்கர உழவு இயந்திரங்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். மேலும் CIC தயாரிப்புக்களான
❁ உரவகைகள் ❁கிருமிநாசினி வகைகள் ❁ தண்ணீர்த்தாங்கிகள்
❁ கால்நடைத் தீவனங்கள் ❁ பெயின்ற் வகைகள் என்பவற்றையும்,
ஏனைய கெல்லிஸ், லாம்கெமி, மக்ரட்ஸ் கம்பனிகளின் கிருமிநாசினி வகைகள், உரவகைகள், கால்நடை மருந்துகள் என்பவற்றையும் வீட்டுப்பாவனைக்குத் தேவையான மளிகைப் பொருள்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் ஒரே கூரையின் கீழ் நியாயவிலையில் பெற்றிட தலைசிறந்த நிறுவனம்.

**பவானி களஞ்சியம்**

இராஜ வீதி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி.



கஜமுகா ரேட்சென்றர்
கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

ஸ்ரீமகாவிஷ்ணு
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்**

உறுதியும் உத்தரவாதமும் உள்ள 22 கரட் தங்க வைர நகைகளைப் பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்
**சாரங்கன் நகைமாடம்**
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
**சாரங்கா ஜூவலர்ஸ்**
55, செட்டியார் தெரு, கொழும்பு - 11

**கஜான்**
பல்பொருள் வாணிபம்
நியாய விலைக்கு பொருள்கள் பெற்றுக்கொள்ளலாம்.
கரந்தன் வீதி, நீர்வேலி.

**கஜொனன்**
அரைக்கும் ஆலை
இராசவீதி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

**ரியோ ஐஸ் கிறீம்**
உற்பத்தி செய்பவர்களும் ஏகவிநியோகஸ்தர்களும்
கந்தசாமி கோயிலடி, நீர்வேலி.

**வினோ நகைப்பூங்கா**
தங்க, வைர நகை வியாபாரம் நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம். 22 கரட் தங்க நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 9494, 021 222 5394

பாடசாலை உபகரணங்கள், அன்பளிப்புப்பொருள்கள், மற்றும் பலவற்றைப் பெற்றிட
**சிவா ஸ்ரோர்ஸ்**
பருத்தித்துறை வீதி, நீர்வேலி

போட்டோப் பிரதி, லெமினேற்றிங் என்பவற்றை சிறந்த முறையில் செய்து பெற்றிட
**அபிராமி பாமசி**
பருத்தித்துறை வீதி, நீர்வேலி.

ஒரே கூரையின் கீழ் ஆலய அபிஷேகத் திரவியங்கள், மருந்துப் பொருள்கள், புடைவை வகைகள், மளிகைப் பொருள்கள், அன்பளிப்புப் பொருள்கள் ஆகியவற்றை மலிவாகப் பெற்றிட
**திருமுருகன்**
திருமண மண்டபமும் பல்பொருள் அங்காடியும் கதிரைகளும்
கரந்தன் வீதி, நீர்வேலி.
(கந்தசுவாமி கோயில் வடக்கு வீதி).
தொ.பே. 060 2217320, 077 6660211.

புள்ளி மயிலோனே முருகா சரணம்!
**நீர்வேலி ப.நோ.கூ.சங்கம்**
(வ-து)
பருத்தித்துறை வீதி,
நீர்வேலி (தென்பகுதி).

சகலவிதமான அச்சுப்பதிப்பு வேலைகளைச் சிறந்த முறையில் உங்கள் எண்ணத்திற்கேற்ப வடிவமைத்துத் தருபவர்கள்.
திருமணம் மற்றும் மங்களகரமான நிகழ்வுகளுக்கான புத்தம்புதிய அழைப்பிதழ்களை உங்கள் எண்ணம்போல் தெரிவுசெய்ய..
**ஷாம்பவி பதிப்பகம்**
276, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4143
கரந்தன் வீதி, நீர்வேலி. 077 6184425


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரத தேசத்துக்கு ஒரு பகிரங்க மடல்....!

**ஈழத் தமிழர்களின் கடந்த ஐம்பது ஆண்டு கால சட்ட விடயங்களிலும் தமிழ்த் தலைவர்களுடனும் நெருக்கமாகச் சம்பந்தப்பட்டு செயலாற்றிய சட்ட விற்பன்னர் ஸி.வி.விவேகானந்தன்.**

**ஈழத் தமிழர் சார்பில் இந்தியாவை நோக்கி அவர் எழுப்பும் கேள்விக்கணைகளில் அர்த்தம் நிறைந்த பல விடயங்கள் பொதிந்துள்ளன. புதன்கிழமை முதல் இந்தக் கட்டுரை தொடர்ந்து பிரசுரமாகிறது. (ஆ-ர்)**

பாகம் 3

சிரேஷ்ட சட்டத்தரணி
ஸி.வி.விவேகானந்தன்

(நேற்றைய தொடர்ச்சி)

டில்லிப் பேரரசே!

வருகை தரும் படைகள் சட்டம்

### VISITING FORCES ACT

வெளிநாட்டுப் படைகள் இலங்கைக்கு வரலாம். அல்லது, வரவழைக்கப்படலாம். அப்படைகளைக் கட்டுப்படுத்துவது ‘வருகை தரும் படைகள் சட்டம்’ தான். இச்சட்டம் 1949 ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. பதினொரு பிரிவுகளைக் கொண்டது. 3 தொடக்கம் 11 வரையுள்ள பிரிவுகள் படைகளைக் கட்டுப்படுத்தும் சட்டவரைவுகளை உள்ளடக்குகின்றன.

இச்சட்டத்தின் 2 ஆவது பிரிவு முக்கியமானது. வருகை தரும் படைகளின் கட்டுப்பாட்டை நிர்ணயிக்கின்றது. வருகை தரும்படை இச்சட்டத்திற்கு கட்டுப்படுகின்றது என ஜனாதிபதி ‘கசற்’றில் பிரகடனம் செய்ய வேண்டும். 3 தொடக்கம் 11 வரையுமுள்ள பிரிவுகளுக்குக் கட்டுப்படுகின்றது என்றும் பிரகடனம் செய்யலாம். அல்லது ஒரு சில பிரிவுகளுக்குக் கட்டுப்படுகின்றது என்றும் பிரகடனம் செய்யலாம். அவ்வாறு பிரகடனம் செய்யாவிட்டால் காட்டாட்சி நடத்தலாம். அப்படையின் இருப்பு சட்டப்படி வலுவற்றதாகிவிடும்.

10.10.1949 இல் பெரிய பிரித்தானியாவிலிருந்து இலங்கைக்குப் படை வருகை தந்தது. 10,028 இலக்கம் கொண்ட விசேட கசற் வெளியிடப்பட்டது. அப்படை இச்சட்டத்தின் 3 தொடக்கம் 11 வரையுமுள்ள பிரிவுகளுக்கமைய கட்டுப்படுகின்றது எனப் பிரகடனம் செய்யப்பட்டது.

இந்திய அமைதிப்படை இலங்கைக்கு வருகை தந்த பொழுது அவ்வாறு பிரகடனம் செய்யப்பட்டதா? இணைப்பிற்கெதிராக வழக்குப் போட்டது போல் படையின் இருப்பிற்கெதிராக யாரும் வழக்குப் போடவில்லை. வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தால் இணைப்பிற்கெதிரான




தீர்ப்புப் போல் இருப்பிற்கெதிராகவும் தீர்ப்பு வந்திருக்கலாம். யாரும் வழக்கு தாக்கல் செய்யவில்லை. தமிழர்கள் அடிபட்டாலென்ன, நசுக்கப்பட்டாலென்ன, அழிக்கப்பட்டாலென்ன எவருக்கும் கவலையில்லை. யாரும் அதை எடுத்துக் கூறினால், இனவாதியென கூக்குரல் போடுவதற்கு ஒரு கூட்டமே இருக்கின்றது.

சண்டை தொடங்கல்

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர்களான புலேந்திரனும் இன்னும் 16 பேரும் கடலில் வைத்துக் கைது செய்யப்படுகின்றனர். பலாலிப் படைத்தளத்தில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்களைக் கொழும்பிற்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவர்கள் எல்லோரும் பொதுமன்னிப்பு கொடுக்கப்பட்டவர்கள். பழைய குற்றச் சாட்டுக்களின் நிமித்தம்விசாரணை செய்வதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. அவர்கள் எல்லோரும் சயனைட் அருந்தித் தற்கொலை செய்து கொண்டனர். இந்தியாவிற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இருந்த உறவு முடிவுக்கு வந்தது. 06.10.1987 இல் யுத்த நடவடிக்கை தொடங்கியது. இந்திய அமைதிப்படை ‘ஒப்பிரேஷன் பவன்’ என்ற பெயர் சூட்டி விடுதலைப் புலிகளுக்கெதிரான யுத்தத்தை முன்னெடுத்தது. வீட்டுக்குள் ஒருவரும் இருக்கப்படாது, எல்லோரும் வெளியில் நிற்க வேண்டும் என அறிவித்தல் கொடுத்தது. யாழ்ப்பாண மக்கள் அவ்வறிவித்தலுக்கு அக்கறை காட்டவில்லை. அமைதிப்படை எங்கள் படை, அவர்கள் எங்களை ஒன்றும் செய்யமாட்டார்கள், புலிகளைத்தான் சுடுவார்கள் என்று நினைத்தனர். அதனால் பலர் வீடுகளில் இருந்து வெளியே வரவில்லை. நடந்தது என்ன? அமைதிப்படை வீட்டுக்குள் இருந்தவர்களைப் படபடவென சுட்டுத் தள்ளியது. அவர்கள் யார் எவர் என்று கேட்கவில்லை. இச்செய்தி பரவியதும் மக்கள் வீட்டுக்குள் இருந்து வெளியே வந்துவிட்டனர்.

உலகத்தில் எந்த நாட்டுப் படையாக இருந்தாலும் உணர்ச்சியடையும் பொழுது கட்டுப்பாட்டை இழப்பது சகஜம். 1983 ஜூலையில் 13 சிங்களப்படை வீரர்களை நிலகண்ணிவெடி மூலம் கொன்று குவித்தனர். உணர்ச்சி வசப்பட்ட படை மூன்று இடங்களில் கண்டபடி சுட்டது. வயோதிபர், பெண்கள், சிறு குழந்தைகள் என ஐம்பதிக்கு மேற்பட்டோர் சுடுபட்டு இறந்தனர். ஜனாதிபதி ஜெயவர்த்தனா இச்செய்தியை இலங்கை மக்களிடமிருந்து மறைத்து விட்டார் 13 படைவீரர்களின் உயிர்களுக்காக ஐம்பதிற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டனர் என்ற செய்தியை சிங்கள மக்கள் அறிந்திலர். இரு நிகழ்வுகளுக்கும் சமமான விளம்பரம் கொடுக்கப்பட்டிருந்தால் 1983 கலவரத்தின் கொடூரம் எவ்வளவோ குறைந்திருக்கும். நிலைமைகளைக் கையாளும் தலைவர்களின் பிழைபாட்டால் மாபெரும் தவறுகள் நடப்பதும் உண்டு. படைவீரர்களுக்கும் இது விதிவிலக்கல்ல. என்றாலும், நோய்வாய்ப்பட்டுக் கட்டிலுடன் மாதக்கணக்காகப் படுத்திருக்கும் வயோதிப நோயாளியைச் சுட்டனர் என இலங்கைப் படைவீரர் மீது குற்றம் சுமத்தப்படவில்லை.

நடராஜா என்பவர் கொழும்பில் இருந்த வயோதிபர். பேருந்து மோதி விபத்துக்குள்ளானார். அவருக்கு வழக்குப் பேசி நட்டஈடு எடுத்துக் கொடுத்தேன். அவருக்கு நடக்கமுடியாது. அத்தோடு முடக்கு வாதமும் ஏற்பட்டது. யாழ்ப்பாணம் சென்று கட்டிலோடு ஐக்கியப்பட்டுக்கொண்டார். அவரது வாழ்வு, சகலதும் கட்டிலோடுதான். அமைதிப்படையினர் ஓடிச்சென்றனர். அவரது நிலைமையை விளக்கிய பொழுது, வீட்டுக்குள் படுத்திருந்தாய், வெளியில் படுக்கவில்லையெனக் கூறிச் சுட்டு விட்டனர். இவ்வாறான சூழ்நிலையில் இலங்கைப் படையினர் எந்தத் தமிழனையும் சுட்டனர் எனச் செய்தி வரவில்லை. அது மட்டுமல்ல. 83 ஆம் ஆண்டுக் கலவரத்தில் நடந்த ஒரு நிகழ்வையும் நினைவு கூருகின்றேன்.

போல் பிள்ளை வயது முதிர்ந்த சட்டத்தரணி. அவருக்கும் முடக்கு வாதம். கையும் காலும் சக்தியிழந்து விட்டன. அவரும் கட்டிலோடு தான் படுத்திருந்தார். 83 கலவரத்தில் தமிழர்கள் எரிக்கப்பட்டனர். வீடுகள் எரிக்கப்பட்டன. காடையர்கள் இவர் வீட்டிற்குள் நுழைந்தனர் .நிலமையை அறிந்தனர். போல்பிள்ளை கட்டிலோடு தூக்கி வெளியில் வைக்கப்பட்டார். அவரின் நிலைமை கண்டு மற்றவர்களுக்கும் தீமை விளைவிக்கவில்லை. வீட்டிற்கு தீ மூட்டினர். போல் பிள்ளைக்கு தீ மூட்ட வில்லை. இந்தக் காடையர்களுக்குக் இருந்த கருணை மனிதாபிமானம் எங்கே? அமைதிப்படையின் கருணை’ மனிதாபிமானம் எங்கே?



இலங்கைப் படையினருக்கு யுத்த வழிமுறைகளைச் சொல்லிக் கொடுத்தனர். அத்தோடு எவ்வாறு சித்திரவதை செய்ய வேண்டுமென்பதையும் சொல்லிக் கொடுத்தார்கள் அமைதிப்படையினர்.

சிவபாலேந்திரன். அவரும் ஒரு சட்டத்தரணி. நீதிபதியாகவும் இருந்தவர். பருத்தித்துறை, கரவெட்டியைச் சேர்ந்தவர்.

அவர் தனது சட்டத்தரணித் தொழிலை பருத்தித்துறையில் நடத்திக் கொண்டிருந்தார்.

பவன் யுத்த நடவடிக்கை தொடங்கியதும் அன்ரன் பாலசிங்கமும், அவரது மனைவியும், அவர்கள் வளர்த்த நாயுடன் ஓடத் தொடங்கினர். அவர்கள் சிவாபாலேந்திரா வீட்டின் ‘போட்டிக்கோ - வில் சிறிது நேரம் நின்றனர்.வீடு பூட்டியிருந்தது. அவர்கள் ஓடிவிட்டனர். சிவபாலேந்திராவின் அயலவர்கள் பார்த்தனர் வெள்ளைக்காரி, கறுத்த மனிதன், நாய், இவர்கள் யார் என்று ஆச்சரியத்தோடு பார்த்தனர்.

அன்ரன் பாலசிங்கத்தைத் தொடர்ந்து வந்த அமைதிப்படை அங்கு வந்தனர். பொது மக்கள் கொடுத்த விவரத்தை அறிந்து கொண்டு சிவபாலேந்திரா வீட்டிற்குச் சென்றனர்.

(14 ஆம் பக்கம் பார்க்க....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஓகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

# பொருளியல் - 01 | பகுதி - I

SPECIAL GUIDE FOR 2010 A/L ARTS, COMMERCE STUDENTS

* **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. சந்தைப்பொருளாதாரத்தில் அரசாங்கத்தின் செயற்பாடுகளாக அமையக்கூடியது.
1) பொருளாதார அபிவிருத்தியினை ஏற்படுத்துதல்.
2) வேலையின்மையைக் குறைத்தல்.
3) அரச உடைமைகளை தனியாருக்கு விற்பனை செய்தல்.
4) விலைப் பொறிமுறையினால் உற்பத்தி செய்து வழங்காது பொதுப்பண்டங்களை உற்பத்தி செய்தல்.
5) பொருளாதாரத்தால் உற்பத்திசெய்யப்பட்ட வளங்களை மக்களிடையே சமமாக பங்கிட்டு வழங்குதல்.

02. பற்றாக்குறையான வளம் பின்வருவனவற்றுள் எது?
1) காலம். 2) உழைப்பு.
3) நீர் 4) ஆடம்பரப் பண்டம்.
5) மேற்கூறிய அனைத்தும்.

03. பண்டத்தின் விலை குறைவடைய கேள்வி ஒடுக்கம் ஏற்படுமாயின் அப்பண்டம்.
1) ஆடம்பரப்பண்டம். 2) இழிவுப்பண்டம்.
3) பொதுப்பண்டம். 4) கிஃபன் பண்டம்.
5) பொருளாதாரப் பண்டம்.


04. அதிகரித்துச் செல்லும் அளவுத்திட்ட விளைவு விதியின்போது,
1) மொத்த உற்பத்தி அதிகரிக்கும்.
2) நீண்டகால சராசரிச் செலவு குறைவடையும்.
3) குறுங்காலத்தில் எல்லைச்செலவு அதிகரிக்கும்.
4) உள்ளீட்டில் ஏற்பட்ட அதிகரிப்பிலும் பார்க்க வெளியீட்டில் ஏற்பட்ட அதிகரிப்புக் குறைவாகும்.
5) சந்தர்ப்பச்செலவு அதிகரிக்கும்.

05. வருமானமானது 1000/= ரூபாவிலிருந்து 1500/=வாக அதிகரிக்கின்றபொழுது பண்டத்தின் மீதான நுகர்வோன் செலவு 500/-விலிருந்து 600/-ரூபாவாக அதிகரிக்கின்றது எனில், வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சி யாது?
1) 4 2) 2 3) 0.5
4) 0.4 5) எல்லாம் தவறு.

06. நிறுவனம் ஆனது சாதாரண இலாபத்தினை பெற்றுக்கொள்ளும் நிலை.
1) எல்லைச்செலவும் சராசரி செலவும் சமனாகும்போது.
2) எல்லைச்செலவும் எல்லை வருமானமும் சமனாகும்போது.
3) சராசரி வருமானமும் எல்லை வருமானமும் சமனாகும்போது.
4) சராசரி வருமானமும் சராசரி செலவும் சமனாகும்போது.
5) எல்லை வருமானமும் விலையும் சமனாகும்போது.

07. குறுங்காலத்தில் நிறுவனமானது வெளியீட்டினை அதிகரிக்கின்றபொழுது ஏற்படவல்லது.
1) சராசரி நிலையான செலவு குறைவடையும்.
2) சராசரி மொத்த செலவு குறைவடையும்.
3) சராசரி மாறும் செலவு குன்றவடையும்.
4) மொத்தச்செலவு குறைவடையும்.
5) எல்லைச்செலவு குறைவடையும்.

08. நிறுவனமானது 100 அலகினை உற்பத்தி செய்கின்ற பொழுது ஓர் அலகிற்கான மாறும்செலவு யாது?
1) 10
2) 20
3) 30
4) 40
5) மேற்கூறிய எவையுமல்ல.




09. நிறுவனத்தின் மொத்தச்செலவு தொடர்பான விவரம் தரப்பட்டுள்ளது.


| உற்பத்தி அளவு (அலகு) | மொத்த செலவு (ரூபா) |
|---|---|
| 0 | 90 |
| 1 | 200 |
| 2 | 340 |
| 3 | 450 |

3 அலகினை உற்பத்தி செய்கின்றபொழுது நிறுவனத்தினது சராசரி மாறும் செலவு யாது?
1) 120/= 2) 150/= 3) 360/=
4) 458/= 5) 790/=

10. தொலைக்காட்சிப் பெட்டியின் விலை அதிகரிப்பினை ஏற்படுத்தக்கூடியது எது?
1) தொலைக்காட்சிப் பெட்டிக்கு பதிலாக பதிலீட்டு பண்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டது.
2) வினைத்திறன் வாய்ந்த தொழிலாளர்கள் எண்ணிக்கை அதிகரித்தமை.
3) தொலைக்காட்சிகளுக்கான இணைப்பு சாதனங்களின் நிரம்பல் அதிகரித்தமை.
4) தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கான கேள்வி அதிகரித்தமை.
5) உற்பத்தியாளர்கள் உற்பத்தியை அதிகரிப்பது என தீர்மானம் மேற்கொண்டமை.

11. பொருளாதாரத்தில் கேள்வியினை அதிகரிக்க அரசு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கையாக அமையக்கூடியது எது?
1) பாதீட்டு மிகை. 2) சேமிப்பினைத் தூண்டுதல்.
3) செலவினைக் குறைத்தல். 4) வரியினைக் குறைத்தல்.
5) முதலீட்டினைக் குறைத்தல்.

12. இலங்கையின் வருமான வரி முறையினை (Tax System) விளக்கும் மிகச்சரியான வரைபு எது?




13. அரசாங்கத்தின் பொருளாதார இலக்குகளாக கருத முடியாதவை எவை?
1) பொருளாதார வளர்ச்சி. 2) நிறை தொழில் மட்டம்.
3) வருமான சமமின்மை. 4) விலை உறுதிப்பாடு.
5) பொருளாதார உறுதிப்பாடு.

14. QD = 400 - 4P எனில், நெகிழ்ச்சியானது 1இற்கு சமனாகக் காணப்படுமாயின் பண்டத்தினது விலை யாது?
1) 50 2) 100 3) 200 4) 250

15. S = -200 + 0.25y, I = 300m, G = 150 எனில், சமனிலை தேசிய வருமானம் யாது?
1) 1800m 2) 2200m 3) 2600m 4) 1500m

16. வளி மாசடைதல், வாகனங்களின் இறைச்சல் போன்றவை பின்வருவனவற்றுள் எவற்றுள் உள்ளடக்கப்படும்,
1) தனியார் செலவு. 2) சந்தர்ப்ப செலவு அல்லது அமையச் செலவு.
3) நிலையான செலவு. 4) வெளிவாரியான செலவு.
5) மாறும் செலவு.

17. அபிவிருத்தியடைந்த நாட்டில் மக்களது வருமானம் அதிகரிக்கின்றபொழுது எப்பண்டத்தின் மீதான செலவின் நாட்டம் அல்லது சதவீதம் குறைவடையும்,
1) உணவு வகைகள். 2) தனிப்பட்ட போக்குவரத்துச் செலவு.
3) சுற்றுலாச் செலவு. 4) களியாட்டச் செலவுகள்.
5) பொழுதுபோக்கு வசதிகள் தொடர்பான செலவு.

18. அரசாங்கம் அடைந்துகொள்ள முனையும் மிகப்பொருத்தமான இரு இலக்குகள் எது?

| | உயர்வு | குறைவு |
|---|---|---|
| 1) | சென்மதி நிலுவை பற்றாக்குறை | வேலைவாய்ப்பு |
| 2) | பொருளாதார வளர்ச்சி | பணவீக்கம் |
| 3) | வேலைவாய்ப்பு | பொருளாதார வளர்ச்சி |
| 4) | பணவீக்கம் | சென்மதி நிலுவை பற்றாக்குறை |
| 5) | வருமான சமமின்மை | அரச சேமிப்பு |

19. மொத்த உள்நாட்டு உற்பத்தி, சனத்தொகை தொடர்பான அட்டவணை தரப்பட்டுள்ளன. சரியான கூற்றை குறிப்பிடுக.

| நாடுகள் | GDP | சனத்தொகை |
|---|---|---|
| எதியோப்பியா | $ 6,257 mill | 55 mill |
| | $ 83,823 mill | 38 mill |
| நியூசிலாந்து | $ 41,304 mill | 3.4 mill |

1) நியூசிலாந்து உயர்ந்த வாழ்க்கைத்தரத்தைக் கொண்டுள்ளன.
2) போர்த்துக்கல் நியூசிலாந்தைவிட இரண்டு மடங்கு வாழ்க்கைத்தரத்தைக் கொண்டதாக விளங்குகின்றது.
3) சனத்தொகை வாழ்க்கைத்தரத்தை நிர்ணயிக்க போதுமானதல்ல.
4) சனத்தொகை அதிகரிக்க வாழ்க்கைத்தரம் அதிகரிக்கும்.
5) மேற்கூறிய எல்லாம் தவறு.

20. 2008ஆம் ஆண்டின் பாதீட்டு பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் எத்தனை சதவீதம்?
1) 8.0 2) 7.7 3) 7.0
4) 6.7 5) 6

## பகுதி - I

01. 1) உற்பத்திக்கு குழிவான உற்பத்தி இயல்தகவு வளையி ஒன்று எதனை குறிப்பாக சுட்டிக் காட்டுகின்றது?
2) சாதன ஒதுக்கீடு, குறை தொழில் மட்டத்தினை உற்பத்தி இயல்தகவு எல்லை ஒன்றில் விளக்குக?
3) அரசினது பாதுகாப்பு செலவில் ஏற்பட்ட வீழ்ச்சியினை, உற்பத்தி இயல்தகவு வளையி ஒன்றின் உதவியுடன் விளக்குக.
4) பயனானது அளக்கப்படக்கூடியது என்பதிலிருந்து நீர் விளங்கிக்கொள்வது யாது? இக் கூற்றினை நீர் ஏற்றுக்கொள்வீரா விளக்குக.

02. 1) கேள்விக்கோடானது மேலிருந்து கீழ் நோக்கியதான எதிர்க்கணிய சரிவுடையதாக காணப்படுவதற்கான காரணங்கள் எவை?
2) யுத்தம் காரணமாக விவசாயிகளது வெங்காயத்தினது நிரம்பல் வீழ்ச்சியடைகின்றது. ஆனால், அவர்களது மொத்த விற்பனை வருவாய் மிக உயர்வாக இருக்கின்றது. இக்கூற்றினை நீர் ஏற்றுக்கொள்வீரா? விளக்குக.
3) பண்டங்களுக்கிடையே நெகிழ்ச்சி வேறுபட்டுக் காணப்படுவதற்கான காரணங்கள் யாது?

03. குறித்த பண்டம் தொடர்பான விலை சார்புகள் தரப்படுகின்றன.
QD = 250 - 50p, QS = -50 + 100p
1) வரைபடத்தின் உதவியுடன் சமனிலை விலை தொகையைக்காண்க.
2) அரசு பண்டத்தின் மீது கட்டுப்பாட்டு விலையாக ரூபா 1.50 இனை விதிக்கின்றபொழுது சந்தையில் நிகழும் மாற்றம் யாது?
3) இத்தொகையினை சந்தையில் நிரம்பல் செய்ய உற்பத்தியாளர் நிரம்பல் செய்ய தயாராக இருக்கும் விலை யாது?
4) இக் கட்டுப்பாட்டு விலையைப் பேணுவதற்கு அரசு இறக்குமதி செய்து வழங்க முன்வருமாயின், அதனது இறக்குமதி செலவு யாது?

04. 1) ''சந்தையே பொருளுக்கான பெறுமதியை தீர்மானிக்கின்றது'' என்ற கூற்றைத் தெளிவுபடுத்துக.
2) ''x'' எனும் ஒரேயொரு பொருள் மட்டும் கொண்டுள்ள சந்தையினை எச்சந்தை அமைப்புக்குள் வகைப்படுத்துவீர்? உமது விடைக்கான காரணம் யாது?
3) தனிநபர் கேள்வி, சந்தைக்கேள்வி என்பவற்றை வேறுபடுத்துக.

05. 1) பொதுப்பண்டங்களை அரசு மட்டுமே வழங்க முடியும். இக்கூற்றை விளக்குக.
2) நல்ல வரியிடலில் காணப்படும் பண்புகள் எவை?
3) வரி விதிப்பின் பொருளாதார விளைவுகள் எவை?
4) நிறைபோட்டிச் சந்தையில் ஒரு நிறுவனத்தின் எல்லை வருமானம், சராசரி வருமானம் என்பன ஒன்றுக்கொன்று சமனாக காணப்படும் என்பதை விளக்குக.

06. ஒரு மூடப்பட்ட பொருளாதாரத்தில் பேரினப் பொருளாதாரத்தின் மாறிகள் கீழ்வருமாறு தரப்பட்டுள்ளன.
முதலீடு (I) - 250B அரசாங்க செலவீடு (G) - 300B
நுகர்வு (செலவிடத்தக்க வருமானத்தில்) - (C = 0.8yd) 80%
வரி. வருமானத்தில் (T = 0.1y) - 10% ஆக உள்ளது.
1) பொருளாதாரத்தின் சமனிலை தேசிய வருமானம் யாது?
2) இப்பொருளாதாரத்தில் சேமிப்புக்கும் முதலீட்டிற்கும் இடையிலான வேறுபாடு யாது?
3) சமன்பாடு S = I, சமனிலை தொடர்பாக ஏன் ஒரு நிபந்தனையாக இல்லை?
4) வரவு - செலவுத்திட்ட மீதி யாது?

07. 1) சந்தைத்தோல்வி, அரசாங்க தோல்வி என்பதனை விளக்குக.
2) வரவு - செலவுத் திட்டமானது எவ்வாறு பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் என்பதை விளக்குக.
3) எளிய பொருளாதாரத்தின் முதலீட்டுப் பெருக்கியினை குறிப்பிட்டு விளக்குக.

(நிறைவுற்றது)

தொகுப்பு:- V.முரளி B.A.Hons (Eco.Sp), M.A (Eco),
விவேகானந்தா கல்லூரி, கொழும்பு-13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணக்கீடு - 01 பகுதி - II

02. அ. சிந்து நிறுவனத்தின் 01 ஜனவரி 2009இல் இருந்த நிலைமை பின்வரும் சமன் பாட்டில் தரப்படுகிறது.

நடைமுறைச்சொத்து + நடைமுறையல்லாச்சொத்து = பொறுப்பு + மூலதனம்.
60,000 + 140,000 = 50,000 + 150,000

ஜனவரி 2009 இல் நடைபெற்ற நடவடிக்கைகள் பின்வருமாறு:
1) 50,000 ரூபா அலுவலக உபகரணமொன்று 30,000 ரூபா காசாக செலுத்தியும் மிகுதி கடனடிப்படையிலும் வாங்கப்பட்டது.
2) கடன்கொள்வனவு 30,000 ரூபா.
3) 2009 முதல் காலாண்டுக்கு செலுத்திய வாடகை 7,000 ரூபா.
4) 60,000 ரூபா கிரயமான பண்டங்கள் 78,000 ரூபாவுக்கு கடனுக்கு விற்கப்பட்டன.
5) 5,000 ரூபாவாக இருந்த ஐயக்கடன் ஏற்பாடு கடன்பட்டோர் தொகைக்கேற்ப 8,000 ரூபாவாக சீராக்கப்பட்டது.
6) உரிமையாளர் பற்றிய பண்டங்கள் 5,000 ரூபா.
7) செலுத்திய காப்புறுதி 12,000 ரூபா.

**வேண்டப்படுபவை:**
1) மேற்கூறிய கொடுக்கல்வாங்கல்கள் தரப்பட்ட கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படுத்திய அதிகரிப்பு அல்லது குறைவைக் காட்டுக.
2) தேறியசொத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு அல்லது குறைவு எவ்வளவு?
3) தேறிய சொத்தின் மாற்றத்தின் அடிப்படையில் ஜனவரி மாத இலாபம் அல்லது நட்டத்தைக் கணிப்பிடுக.

ஆ. கிருஷ்ணா நிறுவனத்தின் கணக்குப் பதிவாளர் கணக்கேடுகளில் பின்வரும் தவறுகளை இழைத்திருந்தார்.
1) கொள்வனவு நாளேட்டின் ஒரு பக்கக்கூட்டுத்தொகை 45,600 ரூபா 46,500 ரூபா என கூட்டப்பட்டிருந்தது.
2) விநோதாவின் விற்பனைத்திரும்பல் 3,000 ரூபா நபர்கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.
3) கடன்பட்டோர் ஒருவரிடமிருந்து பெற்றகாசு 30,000 ரூபா விற்பனைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டது.
4) கொடுத்த கழிவு நிரலின் கூட்டுத்தொகை 1,400 ரூபா பெற்ற கழிவுக் கணக்கில் 4,100 எனப் பதியப்பட்டிருந்தது.

**வேண்டப்படுவது:**
மேற்படி தவறுகளைத் திருத்துவதற்கான நாட்குறிப்புப்பதிவுகள்.

03. அ. 2009.01.01 இல் சுமன் வியாபார நிலையத்தின் பிரித்தெடுக்கப்பட்ட மூலதன மீதி தவிர்ந்த ஏனைய மீதிகள் கீழேத் தரப்பட்டுள்ளன.

| | ரூ. |
|---|---|
| கடன்கொடுத்தோர் | 15,000 |
| விற்பனைகள் | 85,000 |
| கொள்வனவுகள் | 40,000 |
| கடன்பட்டோர் | 35,000 |
| காசு | 50,000 |
| நடைமுறையல்லாச்சொத்துகள் | 180,000 |
| செல்மதி பெறுமதி சேர்ப்பு வரி | 5,000 |

2009 ஜனவரி மாத காலத்தினுள் பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள் இடம் பெற்றுள்ளன.

| திகதி | கொடுக்கல்வாங்கல்கள். |
|---|---|
| ஜனவரி 03 | கடன்பட்டோரிடமிருந்து பெற்ற காசு 30,000 ரூபா. |
| ஜனவரி 05 | காசுக்குக் கொள்வனவு செய்யப்பட்ட எழுதுகருவிகள் ரூபா 10,000. |
| ஜனவரி 11 | கடன்கொள்வனவுகள் ரூபா 33,000 (10% பெறுமதி சேர் வரி உள்ளடங்கலாக) |
| ஜனவரி 15 | திரும்பி வந்த பொருட்கள் ரூ.8,800 (10%பெ.சே.வ உள்ளடங்கலாக) |
| ஜனவரி 19 | வரையறுத்த அல்விஸ் கம்பனியிடமிருந்து ரூபா 55,000 பெறுமதியான உபகரணம் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது. |
| ஜனவரி 22 | கடன்விற்பனை ரூபா 88,000 (10% பெ.சே.வ. உள்ளடங்கலாக) |
| ஜனவரி 31 | வருமானவரித் திணைக்களத்திற்குச் செலுத்திய பெறுமதிசேர்வரி (பெ.சே.வ) ரூபா 5,000. |

**வேண்டப்படுவது:**
சுமன் வியாபாரத்தின் 2009 ஜனவரி 31 இல் தயாரிக்கப்பட்ட பரீட்சைமீதி.

ஆ. புஸ்பா நிறுவனத்தின் கணக்காண்டு டிசம்பர் 31.12.2009 இல் முடிவடைவதாகவும் வாடகை இறை ஒப்பந்தப்படி காலாண்டுக்கு ஒருமுறை வாடகைக் கொடுப்பனவாக 3,000/= வீதம் செலுத்தப்படல் வேண்டும். இறைக் கொடுப்பனவு அரையாண்டுக்கு ஒருமுறை 4,500/= உம் செலுத்தப்படல் வேண்டும். 01.01.2009 இல் முற்பண இறை 3,000/=, வாடகை சென்மதி 2,000/=. 31.12.2009 இல் வாடகை முற்பணம் 5,000/=, இறை சென்மதி 4,000/=. வாடகைக்கும் இறைக்கும் ஒரே கணக்கு பராமரிக்கப்படுகின்றது.

**வேண்டப்படுவது:**
மீதிகள் கீழ்க்கொண்டு வரத்தக்க வகையில் வாடகை இறைக்கணக்கைத் தயாரிக்குக.

04. வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றின் கடன்கொடுத்தோர்களின் பேரேட்டு மீதிகள் கீழேத் தரப்பட்டுள்ளன.

| | 2009.01.01 | 2009.01.31 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| நசீர் கம்பனி | 20,000 | 4,000 |
| திவாகர் கம்பனி | - | 20,000 |
| குமரன் கம்பனி | - | 37,000 |
| தாரா கம்பனி | 50,000 | 60,000 |

2009.01.01 இல் உள்ளபடியான கடன்கொடுத்தோர் பேரேட்டு மீதிகளின் மொத்தத்தொகை, கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக்கணக்கு மீதியுடன் உடன்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2009.01.31 இல் இவை இரண்டும் ஒன்றுக்கொன்று வேறுபட்டிருந்தன. இதனைத் தொடர்ந்த பரிசோதனை, கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக்கணக்கு சரியாகத் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தியது. எவ்வாறாயினும் சில கொடுக்கல்வாங்கல்கள் கடன்கொடுத்தோர் பேரேட்டில் பதியப்படவில்லை.

ஜனவரி மாதத்திற்கான கடன்கொள்வனவுகள் (திரும்பல்கள், கொடுப்பனவுகள் உட்பட) விவரங்கள் கீழேத் தரப்பட்டுள்ளன.

| வழங்குநர் | கொள்வனவு (ரூபா) | கொ/வு திரும்பல் ரூபா | கொடுப்பனவு செய்யப்பட்ட விவரங்கள் |
|---|---|---|---|
| நசீர் கம்பனி | 40,000 | 4,000 | ஆரம்ப மீதி, மாதத்தின் தேறிய கொள்வனவு |
| திவாகர் கம்பனி | 200,000 | - | 10% காசுக்கழிவு கழித்த பின் உள்ள மொத்த மீதி |
| குமரன் கம்பனி | 80,000 (இப்பட்டியல் விலையில் 10% வியாபாரக் கழிவுத் தள்ளி) | 7,000 | |
| தாரா கம்பனி | 67,000 | | ஆரம்ப மீதி |

**வேண்டப்படுபவை:**
1) 2009 ஜனவரி மாதத்திற்கான பொதுப்பேரேட்டில் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கைத் தயாரிக்குக.
2) 2009 ஜனவரி 31 இல் உள்ள கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியையும், கடன்கொடுத்தோர் பேரேட்டுக் கணக்கு மீதிகளையும் இணக்கும் கூற்று.

05. அ. சஹானா நிறுவனத்தின் காசேட்டின்படி வங்கிமீதியானது 2009 ஜனவரி 31 இல் 18,000/= ஐக் காட்டியது. அம்மாதத்திற்கான வங்கிக்கூற்று மீதி வேறொரு மீதியைக் காட்டியது. வேறுபாட்டுக்கான காரணங்கள் வருமாறு:
1) வங்கிக் கூற்றில் மட்டும் வரவு வைக்கப்பட்டிருந்த வங்கிக் கட்டணம் 600/=, நிலையான கட்டளைக்கொடுப்பனவு வரி 3,000/=.
2) நேரடி வங்கிவைப்பு 6,000/= , முதலீட்டுவருமானம் 2,000/= ஆகியன காசேட்டில் பதியப்படாதுள்ளன.
3) வழங்கிய காசோலை 8,500/= காசேட்டில் 5,800/= என பதியப்பட்டிருந்தது.
4) வங்கிக்கூற்றில் இன்னும் வரவு வைக்கப்படாத காசோலை 13,000/=.
5) வங்கிக்கூற்றில் இன்னும் செலவு வைக்கப்படாத காசோலை 25,000/=.
6) வைப்பு செய்தபோதும் வங்கியால் திருப்பியனுப்பப்பட்ட காசோலை 2,000/=

**வேண்டப்படுபவை:**
1) ஜனவரி மாதத்திற்கான திருத்திய காசேடு.
2) திருத்திய காசேட்டு வங்கிமீதியிலிருந்து வங்கிக்கணக்கிணக்கூற்று.

ஆ. கொழும்பு விளையாட்டுக்கழகத்தின் 31.03.2008 இல் முடிவுற்ற ஆண்டுக்கான பெறுவனவு, கொடுப்பன்வு விவரங்கள்:

| பெறுவனவுகள் | | கொடுப்பனவுகள் | |
|---|---|---|---|
| 01.04.2008 இல் மீதிகள் | 30,000 | விளையாட்டு உபகரணம் | 25,000 |
| நன்கொடைகள் | 50,000 | மைதான வாடகை | 18,000 |
| விளையாட்டுப்போட்டிப் பெறுவனவுகள் | 32,000 | விளையாட்டுப்போட்டிச்செலவு | 6,500 |
| | | அச்சிட்டல் காகிதாதிகள் | 4,500 |
| அங்கத்துவக் கட்டணம் | 120,000 | உபகரணத்திருத்தம் | 20,000 |
| அனுமதிக் கட்டணம் | 3,000 | பொதுச்செலவு | 6,000 |

மேலதிக தகவல்கள் பின்வருமாறு:
1) 01.04.2008 இல் உபகரணங்கள் கிரயம் 50,000/= (கிரயத்தில் 10% தேய்விடுவது வழமையாகும்)
2) 31.03.2009 இல் முற்பண வாடகை 6,000/=, சென்மதி அச்சிடல் செலவு 2,000/=.
3) 01.04.2008 இல் திரண்டநிதி 200,000/= ஆகும்.
4) கிடைத்த நன்கொடையில் 60% ஆனவை கட்டடம் அமைப்பதற்குக் கிடைக்கப்பெற்றதாகும்.
5) 31.03.2008 இல் நிலுவை அங்கத்துவக்கட்டணம் 20,000/=, முற்பணமாக கிடைத்த அங்கத்துவக்கட்டணம் 4,000/=.

**வேண்டப்படுபவை:**
1) 2008/2009 இற்கான அங்கத்துவக் கட்டணக் கணக்கு.
2) 31.03.2008 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானச் செலவுக்கணக்கு.

06. அ. கணக்கு பதிவு அனுபவமற்ற கந்தன் வியாபார நிலையம் ஒன்றை நடத்தி வந்தார். 2009 ஆம் ஆண்டிற்கான தகவல்கள் பின்வருமாறு:

| விவரம் | 31.12.2009 | 01.01.2009 |
|---|---|---|
| நிலம், கட்டடம் | 200,000 | 250,000 |
| மோட்டார் வாகனம் | 150,000 | 180,000 |
| இருப்பு | 30,000 | 20,000 |
| கடன்பட்டோர் | 32,000 | 25,000 |
| கடன்கொடுத்தோர் | 40,000 | 42,000 |
| வங்கி | 60,000 | (30,000) |
| முற்பண விளம்பரம் | - | 2,000 |
| அட்டுறு வாடகை | 5,000 | - |

மேலதிக தகவல்கள் பின்வருமாறு:
1) மேலதிக மூலதனம் 50,000/=.
2) வாராந்தப்பற்று 500/=.

**வேண்டப்படுவது:**
31.12.2009 ஆம் ஆண்டுக்கான தேறிய இலாபத்தைக் கணிக்குக.

ஆ. வியாபார நிறுவனமொன்றினால் 31.03.2009 இல் ஏற்பட்ட தீ விபத்துக் காரணமாக இருப்புக்கள் அழிவடைந்துள்ளன. எனினும், பாதுகாக்கப்பட்ட இருப்பின் பெறுமதி 10,000/= வியாபாரத்தின் சில சிட்டைகளும் அழிவடைந்தன.
1) 31.03.2008 இல் இருப்பின் கிரயம் 24,000/=.
2) பணம் கிடைக்காத விற்பனைப் பட்டியல்களின் பெறுமதி
31.03.2008 இல் 30,000/=, 31.03.2009 இல் 40,000/=.
3) கணக்காண்டினுள் வியாபார வருமதியாளர்களிடம் இருந்து கிடைத்த பணம் 50,000/=, பதிவழிக்கப்பட்ட அறவிடமுடியாக் கடன் 2,000/=.
4) பணம் கொடுக்கப்பட வேண்டிய கொள்வனவுப்பட்டியல் மீதிகள் 31.03.2008 இல் 50,000/=, 31.03.2009 இல் 30,000/=.
5) கடன்கொடுத்தோருக்கான 72,000/= கடன்பெறுமதியானது வருடத்தினுள் பணம் செலுத்தப்பட்டு கடன்தீர்க்கப்பட்டது.
6) வியாபாரத்தின் இலாபம் விற்பனை விலையில் 12% ஆகும்.

**வேண்டப்படுபவை:**
1) வருடத்திற்கான வியாபாரக் கணக்கு.
2) தீயால் அழிந்த சரக்கின் பெறுமதி.

(நிறைவுற்றது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரான வாழ்க்கைமுறையும் நடத்தையியல் மாற்றங்களும் புற்று நோயைத்தடுப்பதில் அதிக பங்கு வகிக்கும்

பொதுமக்கள் மத்தியில் புற்று நோய் குறித்த விழிப்புணர்வு குறைந்து காணப்படுவதே இன்று குடாநாட்டில் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக் காரணம் எனவும், பொது மக்கள் இந்நோய் அறிகுறிகள் குறித்து அசண்டையீனமாக இருப்பதும் இந்நோயின் தாக்கம் முற்றுவதற்குக் காரணமெனவும் மருத்துவத்துறை அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. புற்றுநோயின் அறிகுறி, நோய்முற்றுவதற்கு முன் அது குறித்து கவனம் செலுத்தாமையால் ஏற்படும் பாதிப்பு என்பவை குறித்து யாழ்.போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு வெளியிட்டிருக்கும் விளக்கப் பிரசுரம் இங்கு பிரசுரமாகிறது. இன்று (27.04.2010 ஆம் திகதி) யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறும் புற்றுநோய் விழிப்புணர்வுக் கண்காட்சியையொட்டி இந்தத் தொடர் உதயனில் பிரசுரமாகின்றது.

## கருப்பைக் கழுத்துப் புற்றுநோய்

பெண்களில் ஏற்படும் புற்றுநோய்களில் 13 வீதமானவை கருப்பைக் கழுத்துப் புற்றுநோயாகும். ஆரம்பநிலையிலேயே அடையாளம் காணப்பட்டால் சிகிச்சை மூலம் 100 வீதம் குணமாக்கப்

**புற்றுநோயைத் தடுக்க ஒத்துழையுங்கள் 3**

படக் கூடியது.

கருப்பைக் கழுத்து புற்றுநோயை ஏற்படுத்துவதற்கு ஏதுவான காரணிகள்

**பாலியல் நடத்தைகள்**

1) பாலியல் உடலுறவைக் குறைந்த வயதிலேயே ஆரம்பித்தல்

2) ஒன்றுக்கு மேற்பட்டவர்களுடன் உடலுறவு கொள்ளல்

3) ஒன்றுக்கு மேற்பட்டவர்களுடன் தொடர்புடைய ஆணுடன் உடலுறவு கொள்ளல்

4) இளவயதிலேயே உடலுறவை ஆரம்பித்த ஆண்/ கருப்பைக் கழுத்து புற்றுநோயுள்ளவருடன் தொடர்புடைய ஆணுடன் உடலுறவு கொள்ளுதல்

5) நீண்ட காலம் வாய்மூலமான கருத்தடை மாத்திரைகளை உட்கொள்ளுதல்

6) முன்தோலினை நீக்கம் செய்யாத ஆணுடன் உடலுறவு கொள்ளுதல்

7) சில வைரஸ் தொற்றுக்கள்

- பாலுண்ணியை ஏற்படுத்தும் வைரஸ் (HPV)
- ஹேப்பிஸ் வைரஸ்

பிறகாரணிகள்

1) புகைத்தல்

-ஒரு நாளைக்கு புகைக்கும் சிகரெட்டுக்களின் எண்ணிக்கை

- புகைப்பிடிக்கும் வருடங்களின் எண்ணிக்கை

2) நோய் எதிர்ப்புச் சக்தி குறைவு

3) எயிட்ஸ் நோயாளிகள்

4) உறுப்பு மாற்றுச்சிகிச்சை செய்தவர்கள்

5) விற்றமின் ஏ குறைபாடு

6) அதிக எண்ணிக்கையான குழந்தைப் பேறு

கருப்பைக் கழுத்து புற்றுநோய்க்கான அறிகுறிகள்

✱ மாதவிடாய் நின்றபின்னர் ஏற்படும் இரத்தப் போக்கு

✱ மாதவிடாய்க்கிடையான இரத்தப் போக்கு

✱ உடலுறவின் பின்னான இரத்தப் போக்கு

✱ அதிகளவான துர்நாற்றத்துடன் கூடிய வெள்ளை படுதல்

நோய் முற்றிய நிலையில்

♥ கால் வீக்கம்

♥ கால், இடுப்பு வலி

♥ சிறுநீருடனான இரத்தப்போக்கு

♥ மலத்துடனான இரத்தப்போக்கு

♥ வயிற்றோட்டம்

## புற்று நோயும் உணவுப்பழக்க வழக்கமும்

உணவானது சில புற்றுநோய்கள் ஏற்படுவதற்கு காரணமாக இருக்கிறது. சில உணவுகள் புற்றுநோய் ஏற்படும் அபாயத்தை குறைப்பனவாகவோ அல்லது தடுப்பனவாகவோ உள்ளன. பொதுவாக விலங்குணவுகள் புற்றுநோய் அபாயத்தைக் கூட்டுவனவாகவும் மரக்கறிகள், பழங்கள் புற்றுநோய் அபாயத்தைக் குறைப்பனவாகவும் உள்ளன.

புற்றுநோய் ஏற்படும் அபாயத்தைக் குறைப்பதற்கான சில உணவுப் பழக்க வழக்கங்கள்.

✱ ஒவ்வொரு சாப்பாட்டு வேளைகளிலும் வேறுபட்ட வகையான புதிய மரக்கறிகளையும், பழங்களையும் அதிகளவில் சேர்த்தல்.

✱ தானியங்களில் அதிகளவு நார்ச்சத்து இருப்பதால் அதனை இயன்றளவில் சாப்பாட்டில் சேர்த்தல்.

✱ பழச்சாறுகள் உட்கொள்ளும்போது இயன்றளவில் 100 வீதமாக சாறாகவே உட்கொள்ளல்.

✱ இரசாயனப்பதார்த்தங்கள் விசிறப்பட்ட மரக்கறிகள், பச்சை இலைகள் மற்றும் நிறப்பழவகைகளை நீரில் நன்றாக அலசிக் கழுவியபின் பயன்படுத்தல்.

✱ சமையலறையில் பொரித்தலுக்காக முதல் நாள் பாவித்த எண்ணெயினை அடுத்த நாள் பாவித்தலைத் தவிர்த்தல்.

✱ உணவின் மூலம் பெறும் சக்தியின் அளவின் 10 வீதத்திலும் குறைவான அளவு மட்டும் கொழுப்புணவு மூலம் பெறல்.

✱ விலங்குணவு வகைகளைத் தவிர்த்தல்.

✱ பதனிடப்பட்ட உணவுகளை குறைந்தளவில் பயன்படுத்தல்.

✱ பொரிக்கப்பட்ட மரக்கறி வகைகளை இயன்றளவில் குறைத்தல்.

✱ சிறியவகை மீன்களை உணவில் இயன்றளவு சேர்த்தல்.

✱ பூஞ்சணம் பிடித்த உணவுகளை (ஒடியன் பழுதடைந்த தயிர்) என்பன உள்ளெடுத்தலை தவிர்த்தல்.

✱ மிகச்சூடான உணவுகள், பானங்கள் என்பன உள்ளெடுத்தலை தவிர்த்தல்.




## புற்றுநோயும் உணவின் பங்களிப்பும்

புற்று நோய் உருவாக்கத்தில் உணவின் பங்களிப்பு 35 வீதம் ஆகும்.

உணவும் புற்றுநோயும்

1. புற்றுநோயை ஏற்படுத்தும் காரணிகள்

✱ உணவின் சில கூறுகளிலேயே நேரடியாகக் காணப்படுகிறது.

-அதிக அளவிலான கொழுப்பு
- மிகையான புரதம்
- கூடுதலான இனிப்பு
- விவசாய இரசாயனங்கள்
- உறைப்பான உணவுகள்
- நாட்பட்ட, பழுதடைந்த உணவுகள்
- உணவில் சேர்க்கப்படும் மேலதிக பதார்த்தங்கள்
- உணவு தயாரிப்பின் போது சம்பவிக்கும் தீய விளைவுகள்
- பதனிடப்பட்ட உணவுகள்

✱ உணவின் சில கூறுகளில் இருந்து உடல் அனுசேபத் தாக்கங்களினால் உருவாகல்

2. புற்று நோயைக் குறைக்கும் காரணிகள் குறைவாயிருத்தல்

✱ நார்ப்பொருள்கள்

உணவுப் பதார்த்தங்களும் பாதிக்கப்படும் உடற்பகுதிகளும்

✱ புகையிலை - நுரையீரல், களம், சிறுநீரகம், சிறுநீர்ப்பை, கருப்பைக்கழுத்து.

✱ மதுபானம் - வாய்க்குழி, தொண்டை, களம், ஈரல்

✱ அதிக கொழுப்புள்ள இறைச்சி, (மாடு, பன்றி) - குடல், மார்பகம், முன்னிலைச்சுரப்பி (Prostate Gland)

✱ சூடான, காரமான உணவுகள் - வாய்க்குழி, தொண்டை, களம்

✱ அதிகளவிலான உப்பு - இரைப்பை

✱ மிகை நிரப்பு பதார்த்தங்கள் - வாய்க்குழி, இரைப்பை, சிறுநீர்ப்பை

**கணிசமான, கட்டுப்பாடற்ற பாவனையால் - புற்றுநோய் உருவாக்கத்தில் அதிகளவு பங்களிப்புச் செய்வதாகக் கருதப்படும் பிரதான உணவுகள்**

1. வெதுப்பிய, வாட்டிய செந்நிற இறைச்சி
2. பொரியல் வகைகள்
3. பாற்பண்டங்கள்
4. சீனி தூவிய, உப்புச்சேர்த்த கொறிக்கும் உணவுகள்
5. மதுபானக் குடிவகைகள்
6. வர்த்தக ரீதியிலான வெண்ணெய் தயாரிப்புக்கள்
7. ஊறுகாய் வகைகள்
8. கோப்பி
9. பதனிடப்பட்ட இறைச்சியினாலான தின்பண்டங்கள்
10. ஆம்லட், பிஸா

விவசாய இரசாயனங்களும் புற்றுநோயும்

✱ பீடை கொல்லிகளின் மிகையான பாவனை

✱ கட்டுப்பாடற்ற பசளை உபயோகம்

✱ நிலக்கீழ் நீரில் இரசாயனங்களின் செறிவு அதிகரித்திருத்தல்

✱ தோற்றப் பொலிவிற்காக பச்சை இலை வகைகள், பழங்கள் மீது இரசாயனம் விசிறுதல்

✱ பழங்கள், காய்கறிகளை நன்கு கழுவாது உட்கொள்ளல்

✱ விவசாய இரசாயனங்களின் மீதிகள் உணவுப் பொருள்களில் அனுமதிக்கப்பட்ட அளவுக்குள் உள்ளனவா என அளவிடப்படாமை

✱ கடுமையான சட்டங்கள் பிரயோகிக்கப்படாமை.

**சீரான வாழ்க்கை முறையும் முன்னேற்றகரமான நடத்தையியல் மாற்றங்களும் புற்றுநோய் தோன்றுவதைத் தடுப்பதில் அதிக செல்வாக்குச் செலுத்துகின்றன.**

✱ உடற்பருமனைக் கட்டுப்பாடாகப் பேணல்.

✱ அளவான - ஆரோக்கியமான உணவுகளை உட்கொள்ளல்.

✱ வெற்றிலை, புகையிலை உபயோகித்தலை தவிர்த்தல்.

✱ புகைத்தலை நிறுத்தல், மதுபாவனையிலிருந்து படிப்படியாக விடுபடுதல்.

✱ நாளாந்த செயற்பாடுகளிலேயே உடலை கட்டுக்கோப்பாகப் பேணவல்ல பயிற்சிகளை மேற்கொள்ளல்.

✱ உடலையும் உள்ளத்தையும் ஆரோக்கியமாக வைத்திருத்தல்.

(முற்றும்)

# பாரத தேசத்துக்கு ..........

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அன்றே சிவாபாலேந்திரா கைது செய்யப்பட்டார். அன்டன் பாலசிங்கத்தையோ அவரது மனைவியையோ சிவாபாலேந்திரவுக்குத் தெரியாது. அவர்களுக்கும் இவரைத் தெரியாது. உண்மையை சிவாபாலேந்திரா கூறினார். அமைதிபடையினர் ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழ் படங்களில் காட்டப்படும் பொலிஸாரின் சித்திரவதையிலும் மோசமாக சிவாபாலேந்திரா சித்திரவதைக்குட்படுத்தப்பட்டார். கடைசியில் மின்சாரம் மூலம் சித்திரவதைக் குட்படுத்தப்பட்டார். பல மாதங்களின் பின் உள்ளம் வாடி, உடல் வதங்கி வெளியில் வந்தார்.

டில்லிப் பேரரசே! நீங்கள் இன்னும் பல, பல தவறுகள் இழைத்துள்ளீர்கள். நீங்கள்தான் காக்கும் தெய்வம் எனக் கும்பிட்டார்கள். நீங்கள் மிதித்து, மிதித்து நசிக்கி விட்டீர்கள். உங்களைச் சீண்டுவதற்காக இவற்றைக் கூறவில்லை. நீங்கள் தமிழர்களுக்கு இழைத்த தீங்குகளை மீளாய்வு செய்து சரியான பாதைக்கு வருவீர்கள் என்ற நப்பாசையில் கூறுகின்றேன். காந்தி வளர்த்த நாட்டில் மனிதாபிமானம் வற்றியது என் பிழையன்று. அது உங்கள் பிழை. தமிழரின் விதியின் பிழை.

சரி நானும் உணர்ச்சி மேலீட்டால் சிலவற்றைக் கூறி விட்டேன். அவை உண்மைகளானாலும் உங்களைச் சீண்டும் தன்மை கொண்டவை. மன்னிக்க வேண்டுகின்றேன்.

இனி 03.08.87, 28.10.87 கடிதங்களுக்கு வருவோம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அதிகாரப் பகிர்வு இந்திய மாநிலத்தின் அதிகாரங்களைக் கொண்டதாக இருக்கும் என வாக்குறுதி கொடுக்கப்பட்டது. ஆனால், சட்டமூலங்கள் அவ்வாறு இயற்றப்படவில்லை எனக் கவலை தெரிவித்துக் கொண்டார்கள் கூட்டணித் தலைவர்கள்.

பலவித வாக்குறுதிகளை ஞாபகப்படுத்துகின்றனர். வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லையென கவலைப்படுகின்றனர். கவுனரின் செயலாட்சி கொண்ட அதிகாரங்களைப் பற்றிக் கூறுகின்றார்கள். செயலாட்சி அதிகாரங்கள் கொடுக்கப்பட மாட்டா எனக் கூறினாலும் சட்டமூலங்களில் அவ்வதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன என விசனிக்கின்றார்கள். இன்னும் பல பல விடயங்கள். அனுமான் வால் மாதிரி நீண்டு கொள்ளும்.

**அவசரகாலச் சட்ட விதிகள்**

அவசரகாலப் பிரகடனம் செய்யும் உரிமை ஜனாதிபதிக்கு உண்டு. அவசர காலச் சட்ட விதிகளை ஜனாதிபதி இயற்றலாம். அவ்வாறு இயற்றும் அவசர காலச் சட்ட விதிகள் மாகாணசபையால் இயற்றப்படும் சட்டங்களை எவ்விதத்திலும் பாதிக்கக் கூடாது என கூட்டணி கேட்டுக்கொண்டது.

இந்தியா அதனை ஏற்றுக்கொண்டது. ஆனால், சட்டமூலம் அவ்வாறு உருவாக்கப்படவில்லை எனக் கவலை தெரிவிக்கின்றார்கள்.

**மாகாணசபை அமைச்சரவை**

இரண்டு மாகாணங்கள் இணைகின்ற போது அமைச்சர்கள் தொகை ஒரு மாகாணத்திற்கு இருப்பது போல இருக்கக்கூடாது என ஒத்துக்கொள்ளப்பட்டது. ஒரு மாகாணத்திற்கு 4 அமைச்சர்கள் நியமிக்கப்படுவர். வடக்கு, கிழக்கு இணைக்கப்படும் பொழுது 71 உறுப்பினர்களைக் கொண்டதாக மாகாணசபை அமையும். 71 உறுப்பினர்களைக் கொண்ட, இணைக்கப்பட்ட மாகாணசபைக்குக் குறைந்தது 1/5வீதம் தொகை கொண்ட அமைச்சர்கள் நியமிக்கப்பட வேண்டும் என தமிழர் விடுதலைக் கூட்டணி கேட்டது. அவர்களது வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஏற்றமை பேச்சோடு நின்றது. சட்டமூலத்தில் இணைக்கப்பட்ட மாகாணசபைக்கும் 4 அமைச்சர்கள்தான் என சட்டமூலம் விவரிக்கின்றது. அது உடனடியாகத் திருத்தப்பட வேண்டும் என கூட்டணித் தலைவர்கள் வேண்டுகோள் விடுத்தனர். அவர்களது வேண்டுகோள் எதுவித கவனத்திற்கும் எடுக்கப்படவில்லை. இந்தியப் பேரரசே! நீ யாரு[illegible]மைக்காக 'அண்ட்றைச்' செய்தாய்?

ஒவ்வொரு மாகாணசபை அமைச்சரவையும் 4 அமைச்சர்களைக் கொண்டது என மாகாணசபை சட்டமூலம் கூறுகின்றது. அவ்வாறே இயற்றப்பட்ட சட்டமும் கூறுகின்றது. மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை.

இணைந்த மாகாணசபைக்கு 4 அமைச்சர்கள்தான். ஒரு மாகாண சபைக்கு 4 அமைச்சர்கள் என்றால், இரு மாகாணசபைகள் ஒன்றாக இணைகின்ற பொழுது 8 அமைச்சர்கள் இருக்க வேண்டாமா? இது சாதாரண கூட்டல் கணக்கு. எல்லோருக்கும் தெரியும். இந்தியப் பேரரசுக்குத் தெரியாதா?

ஜே. ஆர். ஜெயவர்த்தனா இணைந்த மாகாணசபைக்கும் 4 அமைச்சர்கள்தான் என்ற திட்டத்தை ஏன் புகுத்தினார்? கிழக்கு மாகாணத் தமிழர்களும், முஸ்லிம்களும் அமைச்சர் பதவிகளுக்குப் போட்டியிடுவார்கள். யாழ்ப்பாணமும், வன்னியும் போட்டியிடும் பிரதேசவாதமும் தலைதூக்கும். அங்கும் போட்டி தோன்றும். 4 அமைச்சுகளை யாருக்குப் பிரித்துக் கொடுப்பது? பிரச்சினை பூதாகாரமாகத் தோன்றும். பிரிவினை வளரும். இணைப்பு தொடர வேண்டுமா? வேண்டாமா? என்று மக்கள் தீர்ப்பிற்கு (REFERENDUM) விடும் பொழுது இணைப்புப் பிரிவதற்கு இதுவும் ஒரு காரணமாக அமையும் என கணக்குப் போட்டார் ஜெயவர்த்தனா. அவருக்கு ஒத்துழைத்தது இந்தியப் பேரரசு. அவ்வளவுதான். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியப்பட்டியல் நியமனம் குறித்து மு.காங்கிரஸ் ஆதரவாளர்கள் விசனம்

அம்பாறை, ஏப். 27

முஸ்லிம் காங்கிரஸிக்கு கிடைக்கப் பெற்றுள்ள தேசியப்பட்டியல்களில் ஒன்றை அட்டாளைச்சேனைக்கு வழங்காமல் விடுவதென்பது ஓர் அநீதியான செயலென முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

அம்பாறை மாவட்டத்தின் அட்டாளைச்சேனைப் பிரதேச மக்கள் தமக்கு நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைக்கப் பெறவேண்டும் என்று நீண்டகாலமாக பல்வேறு அழுத்தங்களைப் பிரயோகித்து வந்த வேளையில் இம்முறை ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியலில் முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக இப்பிரதேசத்தைச் சேர்ந்த மூத்த அரசியல்வாதியான மசூர் சின்னலெப்பையின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. இருந்தபோதிலும் இத் தேசியப்பட்டியலில் பிரதிநிதித்துவம் இவருக்கு வழங்கப்படாமல் நிந்தவூரைச் சேர்ந்தவரும், முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகமுமாகிய எம்.ரி. ஹசன் அலிக்கே வழங்கப்பட்டுள்ளது.

பலத்த எதிர்பார்ப்புக்களுடன் இருந்த அட்டாளைச்சேனைப் பிரதேச மக்கள் இதனால் ஏமாற்றப்பட்டிருக்கின்றனர்.

நிந்தவூர் பிரதேசத்திலிருந்து முஸ்லிம் காங்கிரஸ் மூலம் ஏற்கனவே தேர்தல் மூலம் பிரதிநிதியொருவர் தெரிவு செய்யப்பட்டிருக்கும் நிலையில் மேலும் ஒருவரை அங்கு நியமித்தமை முறையான செயல் அல்ல எனவும் முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவாளர்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

எதிர்காலத்தில் கட்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதில் அட்டாளச்சேனை மக்களுக்கு கிடைக்கப்பட்டுள்ள அசாதாரண நிலை பாரிய தாக்கங்களை ஏற்படுத்தலாம் என தெரிவிக்கப்படுவதுடன், இவ் விடயம் குறித்து முஸ்லிம் காங்கிரஸ் தலைமை உடனடிக் கவனம் செலுத்த வேண்டும் எனவும் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் வலியுறுத்தி வருகின்றனர். (ளி)

## கிண்ணியாப் பிரதேசங்களில் குடிதண்ணீருக்குப் பற்றாக்குறை

திருமலை, ஏப். 27

கிண்ணியாப் பிரதேசத்திலுள்ள ஆயிலியடி, கற்குழி முதலான இடங்களில் குடிதண்ணீருக்குப் பாரிய பற்றாக்குறை நிலவுகின்றது எனக் கூறப்படுகிறது.

இத்தகைய குடிதண்ணீர் பற்றாக்குறை ஏற்படத் தற்பொழுது நிலவிவரும் வரட்சியான காலநிலையே காரணம் எனக் கூறப்படுகிறது.

தமக்கான குடிதண்ணீரைப் பெறுவதற்கு மக்கள் நீண்ட தூரம் சென்று நீரைப்பெற்றுக் கொள்வதோடு, பல சிரமங்களையும் எதிர் நோக்கி வருகின்றனர் எனக் கூறப்படுகின்றது. ஆடு, மாடு முதலான கால்நடைகளும், தண்ணீர் இன்றிப் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றன. தோட்டபயிர்களும் கருகி வாடுகின்றன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

தோட்டப்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வரும் விவசாயிகள் எதிர்காலத்திலும், தொடர்ந்தும் இந்நிலைமை நீடிக்குமாக இருந்தால் தமக்கு பாரியளவிலான நஷ்டம் ஏற்படக்கூடும் எனக் கூறுகின்றனர். (ளி)

# சுயேச்சைக் குழுக்களின் கட்டுப்பணம் அரசுடமை

அம்பாறை, ஏப். 27

இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கென சுயேச்சைக் குழுக்களின் 3,810 வேட்பாளர்களினால் செலுத்தப்பட்ட 7லட்சத்து 62ஆயிரம் ரூபா கட்டுப்பணம் அரசுடமையாக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் நாடு முழுவதும் 301 சுயேச்சைக் குழுக்கள் வேட்பாளர்களை நிறுத்தியிருந்தன. இவற்றுள் திகாமடுல்ல மாவட்டத்திலிருந்தே அதிகளவிலான சுயேச்சைக்குழுக்கள் போட்டியிட்டன.




திகாமடுல்ல மாவட்டத்தில் 48 சுயேச்சைக் குழுக்களினதும் சார்பாக 480 வேட்பாளர்கள், போட்டியிட்டதுடன், இவர்கள் மொத்தமாக 96,ஆயிரம் ரூபாவை கட்டுப்பணமாகச் செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நாடாளுமன்றத் தேர்தலில் சுயேச்சைக் குழுவின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் 2000 ரூபா வீதம் கட்டுப்பணம் செலுத்த வேண்டும் இதன்படி 3,810 வேட்பாளர்களும், 7லட்சத்து 62ஆயிரம் ரூபாவை கட்டுப்பணமாகச் செலுத்தியிருந்தனர். இச் சுயேச்சைக் குழுக்கள் இத்தேர்தலில் ஐந்து வீதத்துக்கும் குறைவான வாக்குகளையே பெற்றிருந்தால் இவர்களின் கட்டுப்பணம் அரசுடமையாக்கப்பட்டது. (ளி)

# பல்கலைக் கழகம் செல்லும் வறிய மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்குகிறது இராமகிருஷ்ணமிஷன்

## சுவாமி சர்வரூபானந்தாஜீ தெரிவிப்பு



மட்டக்களப்பு, ஏப். 27

பல்கலைக்கழகம் செல்லும் வறிய தமிழ் மாணவர்களுக்கு இராமகிருஷ்ணமிஷன், புலமைப்பரிசில் வழங்கி மேற்படிப்புக்கு உதவி வருகிறது.

வருடா வருடம் நூற்றுக்கணக்கான மாணவர்கள் இப் புலமைபரிசிலுக்கு விண்ணப்பிக்கின்றனர், அவர்களில் மிகவும் பொருத்தமான மாணவர்களைத் தேர்ந்தெடுத்து மாதாந்த விஷேட நன்கொடைகளை இராமகிருஷ்ண மிஷன் வழங்கி வருகின்றது.

மட்டக்களப்பு மாவட்ட இராமகிருஷ்ண மிஷன் கடந்தாண்டு 75 மாணவர்களுக்கு இவ்விஷேட நன்கொடைகளை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

நாடளாவிய ரீதியில் நூறு மாணவர்கள் வருடாந்தம் இந்த உதவியைப் பெற்று வருகின்றனர். பல்கலைக்கழகக் கல்வி பூர்த்தியாகும் வரை இவ்வுதவிஅவர்களுக்கு வழங்கப்படுகிறது. இவ்வுதவி அம்மாணவர்களைப்பொறுத்த வரை வரப்பிரசாதமாகும்.

அவ்வகையில், இவ்வாண்டு ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அனுமதி கிடைத்துள்ள 12 தமிழ் மாணவர்களுக்கு இப்புலமைப் பரிசில் வழங்கப்பட்டது.

இந்தநிகழ்வு காரைதீவு சிறுமியர் இல்லத்தில் கடந்த சனிக்கிழமையன்று நடைபெற்றது. இலங்கை இராமக் கிஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி சர்வரூபாநந்தா ஜீ மஹராஜ் சிறப்பதிதியாக கலந்துகொண்டு குறிப்பிட்ட 12 மாணவர்களுக்கும் ஆரம்பகட்ட கொடுப்பனவை வழங்கி வைத்தார்.

இவ்வாறு தெரிவான மாணவர்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, பதுளை, குருநாகலை, வவுனியா, அக்கரைப்பற்று, கருத்துறை, கண்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந் தவர்களாவர். இவர்களனைவரும் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கற்பவர்களாவர். இந்த நிகழ்வில் மட்டும் இராமகிருஷ்ண மிஷன் சுவாமி ஞானமநோனந்தா ஜீ, காரைதீவு இல்ல முகாமையாளர் பொ. சிவயோகன், ஆசிரியர் திருமதி எஸ். நித்தியானந்தன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். (ளி)

# கல்முனை பீச் பார்க்கின் நிலைமை குறித்து விசனம்

மட்டக்களப்பு, ஏப். 27

கல்முனை மாநகர சபையின் நிர்வாகத்தின் கீழுள்ள சாய்ந்தமருது பீச் பார்க் பொதுமக்களின் பயன்பாட்டிற்குப் பொருத்தமில்லாத வகையில் கட்டாக் காலிகளின் ஓய்விடமாக மாறிவருகின்றது என பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தமது ஓய்வு நேரத்தை ரம்மியமான இயற்கைக் காற்றுடன் அனுபவித்து மகிழ வேண்டும் என இந்த பீச் பார்க்கிற்கு வரும் பொதுமக்கள் இங்கு நிறைந்துள்ள கட்டாக் காலிகளின் கழிவுகளை அகற்றித் துப்புரவு செய்து விட்டே அமர வேண்டியிருக்கிறது என விசனம் தெரிவிக்கின்றனர்.

கழிவுப் பொருள்கள் மற்றும் சிறிய குப்பைத்தூள்கள் என்பன இங்கு பரவிக் காணப்படுகின்றன எனவும் இங்கு பொருத்தப்பட்டிருக்கும் அலங்கார வெளிச்ச விளக்குகள், பெஞ்கள் மற்றும் சுற்றுவேலிகள் என்பன சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன எனவும் பொதுமக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

கல்முனை மாநகர சபை இது விடயத்தில் கூடிய கவனம் செலுத்தி பொதுமக் கள் இங்கு எதிர்கொள்ளும் அசௌகரியங்களைத் தவிர்ப்பதற்கு முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ளி)

# தேசிய காங்கிரஸை சீரமைக்க மட்டு.மாவட்டத்தில் நடவடிக்கை

மட்டக்களப்பு, ஏப். 27

அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லாவின் தலைமையிலான தேசிய காங்கிரஸ் கட்சி மட்டக்களப்பு மாவட்டத்தில் சீரமைக்கப் படவுள்ளது எனத் தேசிய காங்கிரஸ் மாவட்ட அமைப்பாளரும், காத்தான்குடி நகரசபை உறுப்பினருமான சட்டத்தரணி ஏ.ஏ. றூபி தெரிவித்தார்.

காத்தான்குடி மட்டக்களப்பு நகரம், ஏறாவூர், ஓட்டமாவடி, வாழைச்சேனை உட்பட பல தமிழ், முஸ்லிம் பிரதேசங்களில் தேசிய காங்கிரஸை சீரமைப்புச் செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லாவிற்கு மட்டக்களப்பு மாவட்ட தேசிய காங்கிரஸ் பாரிய வரவேற்பு வைபவமொன்றை நடத்தவும் ஏற்பாடு செய்துவருகிறது எனவும் அவர் தெரிவித்தார். (ளி)

# கோழி இறைச்சி, முட்டை விலைகள் அம்பாறை மாவட்டத்தில் அதிகரிப்பு

அம்பாறை, ஏப்.27

முன்னெப்போதும் இல்லாதவகையில் அம்பாறை மாவட்டத்தில் தற்சமயம் கோழி இறைச்சி மற்றும் முட்டை ஆகியவற்றின் விலைகள் அதிகரித்திருக்கின்றன என இப் பிராந்திய நுகர்வோர் கவலை தெரிவித்து வருகின்றனர்.

தற்போது அம்பாறை மாவட்டத்தில் கோழி இறைச்சி ஒரு கிலோ 580 ரூபாவாகவும், முட்டை ஒன்றின் விலை 16 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

எனினும் தற்போது இப் பிரதேசங்களில் கோழி இறைச்சி மற்றும் முட்டைகளுக்கு தட்டுபாடு நிலவுகின்றன.

மேலும், இந்த விலையேற்றம் காரணமாக கோழி வளர்ப்பு கைத்தொழில் ஈடுபட்ட பலர் தற்போது அத்தொழிலை கைவிட்டுள்ளனர் என பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தற்போது கோழித் தீவனம் மற்றும் அத் தொழிலோடு சம்பந்தப்பட்ட மின்சார உபகரணங்களின் விலைகள் அதிகரித்திருப்பதே இப்பிரச்சினைகளுக்கு பிரதான காரணங்களாகுமென தெரிவிக்கப்படுகிறது. (ளி)

# மட்டு. புளுவுனாவிக்குளம் புனரமைப்பு ஜப்பான் உதவி நிறுவனம் நிதி ஒதுக்கீடு

மட்டக்களப்பு, ஏப்.27

மட்டக்களப்பு- புளுவுனாவி நீர்பாசனக்குளம் கடந்த 40 வருடங்களுகளுக்கு மேலாக தூர்ந்துபோய் எவ்வித புனரமைப்புகளுமின்றி அழிவடைந்த நிலையில் கானப்பட்டது.

முன்னர் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த இப்பகுதி இப்போது விடுவிக்கப்பட்டதை தொடர்ந்து தேசத்தைக் கட்டியெழுப்பும் அமைச்சின் அனுசரணையுடன் ஜப்பானிய 'ஜெய்கா' நிறுவனத்தின் 40 கோடி ரூபா நிதியுதவியின் கீழ் மீள் நிர்மாணம் செய்யப்படுகிறது.

இக்குளத்திலிருந்து சுமார் 4 ஆயிரம் ஏக்கர் விவசாய செய்கைக்கான நீர் வசதிகளைப் பெறமுடியும். குளப்புனரமைப்புப் பணிகளில் 76வீத பணிகள் பூர்த்தியடைந்துள்ளன. மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையிலான உயர்மட்ட குழுவினர் நேற்று முன்தினம் குள அபிவிருத்தி தொடர்பாக நேரில் சென்று அவதானித்தனர். ஜப்பானிய 'ஜெய்கா' ஆலோசகர் இசுசாகி கொக்கொட்டிச் சோலை பிரதேச செயலாளர் திருமதி வாசுகி அருள்ராஜா உட்படப் பல அதிகாரிகள் இதில் கலந்து கொண்டனர்.

32 அடி உயரம் கொண்ட இக்குள புனரமைப்பினால் பல்லாயிரம் ஏழை விவசாயிகள் பெரிதும் நன்மை அடையவுள்ளனர். (ளி)

# கிழக்கு மாகாணசபைக்கு 3புதிய உறுப்பினர்கள்

மட்டக்களப்பு, ஏப். 27

கிழக்கு மாகாணசபைக்கு புதிதாக மூன்று உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐ.ம.சு.மு. சார்பில் போட்டியிட்ட முன்னாள் கிழக்கு மாகாண சபையின் சுகாதார சுதேசிய மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் வெற்றி பெற்றதையடுத்து அவருக்குப் பதிலாகவும், கிழக்கு மாகாண சபையின் எதிர்க் கட்சித் தலைவராக இருந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐ.தே.மு. சார்பில் வெற்றி பெற்ற பஷீர் சேகுதாவூதுக்குப் பதிலாகவும், திருகோணமலை மாவட்டத்தில் ஐ.தே.மு. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற எம். எஸ்.தௌபீக்குக்குப் பதிலாகவும் இந்த மூன்று உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.


கிழக்கு மாகாண சபையின் புதிய உறுப்பினர்களில் விருப்புவாக்கு அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐ.ம.சு.மு. பட்டியலில் கணபதிப்பிள்ளை தர்மரட்ணமும், ஐ.தே.மு. சார்பில் லெப்பைத்தம்பி முஹம்மட் பர்கான் என்பவரும், திருகோணமலை மாவட்டத்தில் ஐ.தே.மு.சார்பில் புல்மோட்டையைச் சேர்ந்த அன்வர் என்பவரும் தெரிவு செய்யப்படவுள்ளனர். (ளி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்த்திருவிழா சிறப்புமலர்

# நல்லூர் கைலாச பிள்ளையார் ஆலயம்

## 27.04.2010





| | | |
|---|---|---|
| வசந்த மண்டபப் பூஜை | - 7.30 | நண்பகல் அன்னதானமும் நடைபெறும் |
| சுவாமி தேரில் ஆரோகணித்தல் | - 9 | மறுநாள் தீர்த்தோற்சவம் |
| சுவாமி தேரால் இறங்குதல் | - 10.30 | காலை 9 மணிக்கு நடைபெறும் |
| விஷேஷ பூசை | - 11 | |

## நல்லை ஆதீனக் குரு முதல்வரின் அருளாசிச்செய்தி

நல்லூர் கைலாசபிள்ளையார் ஆலயத்திலே இன்று தேர்ப் பவனி. வினை தீர்க்கும் விநாயகர் தேர்மீது ஆரோகணித்துத் திரு வீதி வலம்வந்து அருள்பாலிக்கும் அற்புதக் கோலாகலம் கண் கொள்ளாக் காட்சியாகும்.

வரலாற்றுப் புகழ்மிக்க இந்தக் கைலாசபிள்ளை யார் கோயில் தனிச்சிறப்பு வாய்ந்தது. தந்தையும் தாயும் தனையனும் சேர்ந்து வழிபடும் அடியார்களின் அல்லல் அகற்றும் அற்புதம் இங்கு மட்டுமே உண்டு.

சிவனுக்குத் தனிக்கோயில். மகனுக்குத் தனிக் கோயில். அதனாலேயே கைலாசபிள்ளையார் என் னும் திருநாமத்துடன் இங்கு விநாயகர் அருள்பாலிக் கின்றார். விநாயகருக்குச் சித்திரை யில் மஹோற்சவம்; சிவனுக்கு ஆனியில் மஹோற்சவம்.

இன்று அடியார்க்கருள் புரியும் அற்புத விநாயகரா கத் திருத் தேரிலே வலம்பரும் கணபதி அடியார் பெருமக் கள் அனைவருக் கும் திருவருள் புரிய வேண்டும் என்று நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து உளமாரப் பிரார்த்தித்து அருளாசிகளை வழங்கு கின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்,
இரண்டாவது குரு மஹா சந்நிதானம்,
திருஞானசம்பந்தர் ஆதீனம், யாழ்ப்பாணம்.

## சித்திதத்து காத்திடுவாய்

விக்கினந் தீர்த்தருளும் விநாயகனே கணபதியே!
வினைகளை வேரறுக்கும் கைலாச பிள்ளையாரே!
பக்குவமாகவே பக்தரைக் காத்திடும் பானை வயிற்றோனே!
பரமபதம் தருவாய் அம்மை பார்வதியின் புத்திரனே!
சிக்கலெல்லாம் அழித்து நீ சிங்காரமாய்ப் பவனிவந்து
சித்திரத்தேரினிலே ஆரோகணித்து அருள்புரிந்திடுவாய்!
நெக்குருகி நின்றிடும் நின் பக்தர்கள் கூட்டத்தை
நிர்மலனே கடைக்கண்ணால் நீயொருக்கால் பாராயோ?

சித்திரத் தேரிலே இன்று சிங்காரப் பவனி வரும்
கைலாச பிள்ளையாரே நின் திருத்தாள் பணிந்தோம்
பத்தரை மாற்றுப் பசும் பொன்னாய் எம் வாழ்வு மலர்ந்திட
விக்கின விநாயகனே திருவருள் புரிவாய் அப்பா!
இத்தினந்தனிலே உன்னை வழிபடும் அடியார்களின்
இன்னல்கள் நீக்கியே இன்னருள் பொழிவாய் ஐயனே!
முத்தியைத் தந்தே எமக்கு நீ முழுமதியாய் ஒளிவீசி
சித்திதந்து காத்திடுவாய் சிங்காரக் கணபதியே!

திருவரன்.

## நாட்டு மக்கள் அனைவரும் இன்புற்றிருக்க கைலாச விநாயகரை வேண்டுவோம்

''நமசிவாய வாழ்க நாதன் தாழ் வாழ்க'' என்று மாணிக் கவாசக சுவாமிகள் சிவபுராணத்தில் பாடுகிறார். நமசிவாய என்ற பஞ்சாட்சரமும் பரமேஸ்வரனுடைய திருப்பாதங்களும் எண்ணில் அடங்கா காலம் வரை வாழும் என்றும் அவ்விரண் டும் மேலும் வாழ வேண்டும் என்று சிவபுராணத்தில் முதல் வரியில் கூறுகின்றார். இதே போன்று யாழ்ப்பாண இராச்சி யத்தை நிறுவிய சிங்கை ஆரிய சக்கரவர்த்தி தனது இராஜதானி கோயிலான கைலாச நாதரும் கையிலை நாயகியும் நீண்ட காலம் அருள்பாலிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டது போல் அவள் அருளாலே தன் சந்ததியினரும் தன் இராஜதானி மக் களும் இன்றும் வழிபட்டுக்கொண்டிருக்கின்றனர். இக்கைலாச நாதர் கையிலை நாயகியோடு கைலாச விநாயகரும் சேர்ந்து ஆக்கி காத்து அழித்து அருள் சுரந்து கொண்டிருக்கிறார். யார் இந்த கைலாசநாதர்? கைலாசநாதருக்கும் யாழ்ப்பாண இராட்சியத்துக்கும் என்ன சம்பந்தம்? பாண்டிய நாட்டில், இருந்து வந்த சிங்கை ஆரிய சக்கரவர்த்திகள் குல குருவான கங்காதர ஐயரோடும் மந்திரி புவனேகபாகுவோடும் யாழ்ப் பாணம் வந்து நாற்திசையிலும் நான்கு கோயில்களையும் அமைத்து தனது யாழ்ப்பாண இராட்சியத்தை நிறுவி இராட்சியத்தின் தலைநகருக்கு ''நல்லூர்'' என்று பெயர் சூட்டி தனது இராட்சியத்தை ஆரம்பித்தான். பாண்டியரின் குலதெய்வமான சொக்கநாதப் பெருமானை யாழ்ப்பாணத் திலும் எழுந்தருள செய்வதற்கு மன்னன் மிகவும் விரும்பினான். அப்போது மன்னன் தனது சப்பர மஞ்சத்தில் உறங்கும்போது பிரம்மாவுக்கும் விஷ்ணுவுக்கும் எட்டாத ஸ்ரீ கைலாசநாதன் கனவிலே தோன்றி என் பெயர் ''கைலாசநாதன்'' என்று அருளி ஆட்கொண்டார். ஸ்ரீ கைலாசநாதர் தன்னை ஆட்கொண்டு விட்டார் என்று மன்னன் மிகவும் சந்தோஷித்து கையிலை விநாயகர் அருகிலே கைலாயநாதர் கையிலை நாயகி அம்மன் கோயிலை மிகவும் விஷேஷமாகக் கட்டுவித்து பிரமானத் துக்கு இணங்க சுற்றி மதிலும் கோபுரமும் எழுப்பி கேதாரத் தில் மன்னன் பூசித்து வந்த ஆதாரலிங்கத்தை வரவழைத்து பிரதிஸ்டை செய்து தன்து இராஜகுருவான கங்காதர ஐய ரையே பூசைகள் நடாத்தும்படி வைத்து அல்லும் பகலும் ஸ்ரீகைலா சநாதர் திருவடியை தியானித்துக் கொண்டு கைலாசநாத ரின் அனுக்கிரகத்தோடு தனது இராட்சியத்தை சிறப்புற நடத் தினான். சக்கரவர்த்திகளின் வம்சத்தவர்கள் இன்றும் ஸ்ரீ கைலாசநாதரின் அனுகிரகத்தை பெற்றுக் கொண்டபடி இருக் கின்றனர். இதே போன்று யாழ்ப்பாண இராட்சியத்தின் மக் களும் இக் கைலாசநாதரை அன்று முதல் இன்று வரை வழி பட்டு அருட்கடாட்சம் பெற்றுக்கொண்டிருக்கின்றனர். ஸ்ரீ கைலாச விநாயகரோடு ஸ்ரீகைலாசநாதரும் இன்றும் அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றனர்.

சூரியன் மேட ராசியில் சஞ்சரிக்க சந்திரன் துலா ராசியில் சஞ்சரிக்கும் சித்ரா பௌர்ணமியை தீர்த்த உற்சவமாகக் கொண்டு முதல் ஒன்பது தினங்கள் பிரம்மனால் கூறப்பட் டவாறு பிரமோற்சவத்தை ஸ்ரீ கைலாச பிள்ளையார் நடத்திக் கொண்டிருக்கின்றார்.

இந்த பிரம்ம உற்சவத்திலே ஒன்பதாம் நாளான இன்று மகாரத உற்சவம் நடைபெறுகின்றது. மூன்றாம் கைலாசத்தை சர்வாலங்கார பூசிதராக ஸ்ரீ கைலாச விநாயகர் சௌபாக்கிய கௌரி மண்டபத்தின் ஊடாக மிகவும் உல்லாசமாக அதி அற்புதமான சித்திரத் தேரிலே ஆரோகணித்து திருவீதி உலா சென்று கைலாசத்தில் வந்து கைலாசநாதரை தரிசிக்கும் பேறுபெற்றவர்களிற்கும் யாழ்ப்பாண இராட்சியத்தின் மக் களிற்கும் சர்பாபீஷ்டங்களுக்கும் கிடைக்க அனுக்கிரத்து ஸ்ரீ கைலாச விநாயகரோடு கைலாசநாதர் அருள் சுரக்கிறார்.

- காசி ஆனந்தம்
('காசி ஆனந்த குருசாமி சர்மா, பிரதம குருவும், மஹோற்சவ குருவும்).

## விழாச் சிறப்புற வாழ்த்துவோர்


**ரி.சி.ரி.பல்பொருள் விற்பனை நிலையம்**
(தியாகிகள் அறக்கொடை நிறுவனம்)
எந்நாளும் எப்போதும் எந்நேரமும்
இலாப நோக்கமின்றி சேவைநோக்குடன் இயங்கும் எமது விற்பனை நிலையத்தில்
விற்கப்படும் தரமான பொருள்களை நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். தொ.இல: 021 222 8025

தேரேறி திருவீதி வரும் கைலாயபிள்ளையாரே!
நீரேறும் விழிகளுடன் இன்று ஆடும் எங்களை
சீரான வாழ்வுதனை தகம் மீதில் தருவாயே!
**க.கு.கந்தையாபிள்ளை அன்சன்ஸ்**
318, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

**NET WORK (I)**
Net Browsing
IDD/ Local Call
Net 2 Phones
Video Call
Computer Service
471 Navalar Road, Jaffna. 021 7451825



**வஜிதா**
மோட்டார் சைக்கிள் திருத்தகமும் சேவிஸ் சென்ரரும்
**Vageetha** Prop. M.Vasanthan
300/1, Navalar Road, Railway Junation, Jaffna.
300/1, நாவலர் வீதி, ரயில்வே சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 077 8097741

**சொக்கர் கடை சைவ உணவகம்**
பத்திரிகை விநியோகஸ்தர்,
கைலாசபிள்ளையார் கோயில்
பின்வீதி, நல்லூர்.

**யாழ்.ப.நோ. கூட்டுறவுச் சங்கம்**
யாழ்ப்பாணம்.

**STR COMPUTER SYSTEM**
Computer Accessories & Service
Computer Sales, ComputerClasses Computer Repairing, Computer printing
Internet Cate, Mobile Phone Repair
T.P: 021 222 4459, 077 4192275
Fax: 021 222 4460
No.380, Navalar Road, Nallur, Jaffna.

**சுதர்சன் மோட்டார் சைக்கிள் வேக்ஸ்**
சகல விதமான மோட்டார் சைக்கிள்
திருத்த வேலைகள்
குறித்த நேரத்தில் செய்து தரப்படும்.
284, நாவலர் வீதி, நல்லூர்.
உரிமையாளர்: வை.சு.வேந்திரன்.

**PC SOLUTIONS**
TECHNOLOGIES (PVT) LTD
305, Kasthuriyar Road, Jaffna.
TP - 021 222 1101, 021 222 9644
Branch - MMV Road, Nelliaddy
TP - 021 226 4999
pcsjaffna@sltnet.lk.

**LINGAM & CO**
General Hardware and Metal Merchants
No.48, Stanley Road, Jaffna.
Telephone No:2133

**ரிப்ரொப் பல்பொருள் வாணிபம்,**
358, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

**குணசேகரம் பல்பொருள் வாணிபம்**
5/7, நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




**உதயன்**

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

16.09.1990

* கடந்த வியாழக்கிழமை மண்டை தீவுக் கடற்பகுதியில் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் விழுந்து நொருங்கிய குண்டு வீச்சு விமானத்தின் சிதைவடைந்த பகுதிகள் பொது மக்கள் பார்வைக்குக் காட்சிப்படுத்தப்பட்டதாகத் தெரிவிப்பு.

* இலங்கை வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்றுவரும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர பொதுநல அமைப்பு நாடுகள் மத்தியஸ்தம் செய்யும் யோசனையை ஆஸ்திரேலிய அரசு பிரஸ்தாபிப்பு.

17.09.1990

* படையினர் யாழ்.கோட்டையைப் பிடித்ததுடன் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களான மாத்தையா, யோகி, டொமினிக் ஆகியோரையும் தேடி வலை விரித்துள்ளனர் என பொய்யான தகவல்களை வெளியிட்டு அரச சார்பு சிங்களப் பத்திரிகைகள் சிங்கள மக்களை ஏமாற்றி வருவதாகத் தெரிவிப்பு.

* வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் தீர்வுதான் காணப்படவேண்டும். இராணுவத் தீர்வுக்கு இடமில்லை என ஜனாதிபதி பிரேமதாஸ தலைமையில் நடந்த அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மாநாட்டில் தீர்மானம் எடுக்கப்பட்டதாகத் தெரிவிப்பு.

18.09.1990

* யாழ்.மாவட்டத்தில் நடமாடும் வங்கிச் சேவையொன்று பருத்தித்துறையில் நங்கூரமிடும் கப்பல்களில் இயங்குமெனவும், பெறுமதிமிக்க காசோலைகளை அரச திணைக்களங்கள் இந்த வங்கியில் பணமாக மாற்றிக் கொள்ளலாம் எனவும் தெரிவிப்பு.

* நேற்றுக் காலையிலிருந்து நண்பகல் வரை சீனத் தயாரிப்பான சகடை விமானங்கள் மற்றும் அவ்ரோ, பொம்பர் விமானங்கள் யாழ். நகரில் கட்டடங்கள் மீது குண்டு வீசி அழிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டதாகத் தெரிவிப்பு.

19.09.1990

* தமிழீழ விடுதலைப் புலிகளை ஒடுக்க அரச படையினர் புரியும் பயங்கரவாதச் செயல்களுக்கு இலங்கை அரசு முழு அளவில் ஆதரவளித்துச் செயற்பட்டு வருவதாக இலங்கை அரசு மீது சர்வதேச மன்னிப்புச் சபை குற்றச்சாட்டு.

* சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பான படங்கள் மற்றும் ஆவணங்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டமை சட்ட விரோதமானது என எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ தெரிவிப்பு.

20.09.1990

* வடக்கு - கிழக்கு எல்லைப் புறத்தில் பாதுகாப்பு வழங்குவதற்காக ஊர்காவல் படைக்கு 35 ஆயிரம் பேர் உடனடியாகச் சேர்க்கப்படவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவிப்பு.

* யாழ்.கோட்டைக்கு வெளியே நன்கு அரண் அமைக்கப்பட்ட பதுங்கு குழிகளை விடுதலைப் புலிகள் அமைத்திருப்பதாகவும் அவற்றைத் தகர்ப்பது மிகக் கடினமானது எனவும் சிரேஷ்ட இராணுவ அதிகாரியொருவர் ஒப்புக் கொண்டிருப்பதாக ராய்ட்டர் செய்திச் சேவை தெரிவித்திருப்பதாக அறிவிப்பு.

21.09.1990

* மட்டக்களப்பு மாவட்டம் சவளக்கடை இராணுவ முகாமில் வைத்து 35 தமிழ் இளைஞர்கள் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவிப்பு.

* யாழ். மாவட்டத்தில் ஐ.நா அகதிகள் ஸ்தானிகராலயத்தால் மேற்கொள்ளப்பட்ட புனர்வாழ்வுத் திட்டங்களில் ஏற்பட்டுள்ள சேதங்களைப் பார்வையிட்டு நிவாரணம் வழங்க கொழும்பிலுள்ள ஐ.நா.அகதிகள் ஸ்தானிகராலய அதிகாரிகள் யாழ்ப்பாணம் வர அரசு அனுமதி மறுத்துள்ளதாகத் தெரிவிப்பு.

22.09.1990

* யாழ். குடாநாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் நேற்றுக் காலை முதல் மீண்டும் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு நேற்றுக்காலை அறிவிப்பு.

* வடக்கு - கிழக்கில் நடக்கும் யுத்தம் காரணமாக பாதுகாப்புக் கருதி ஈழத்தமிழர்கள் அகதிகளாகத் தமிழகத்துக்கு வருவதைத் தடுக்க இந்திய அரசு மறைமுக நடவடிக்கைகளை எடுத்து வருவதாகக் குற்றச்சாட்டு.

23.09.1990

* மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த வியாழன், வெள்ளி ஆகிய இரு தினங்களில் மட்டும் வெவ்வேறு சம்பவங்களில் பெண்கள், குழந்தைகள் உட்பட 54தமிழ்ப் பொது மக்கள் தீவிரவாதக் கோஷ்டிகளால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

* யாழ்.நகர் மற்றும் அதனை அண்டியுள்ள பகுதிகளில் விமானப் படையின் குண்டு வீச்சு விமானங்கள் பரவலாக மேற்கொண்ட குண்டு வீச்சுத் தாக்குதல்களில் பலபொது மக்கள் பலி. வீடுகள் பல சேதம் எனத் தெரிவிப்பு.

24.09.1990

* பாலஸ்தீன விடுதலை இயக்கம், ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் போன்ற விடுதலை அமைப்புக்களை அங்கீகரித்தமை போன்று விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் இந்திய அரசு உடனடியாக அங்கீகரிக்க வேண்டும் என விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய பிரமுகர் கிட்டு கோரிக்கை.

* இலங்கைத் தமிழ் மக்களது பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காணுமாறு இலங்கை அரசுக்கு உந்துதல் கொடுக்குமாறு உலகத் திருச்சபை மன்றம் ஐ.நா.சபையிடம் கோரிக்கை விடுப்பு.

25.09.1990

* கடந்த ஐந்து நாள்களாக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பயணிகள் இராணுவத்தினரால் வழிமறைக்கப்பட்டு வவுனியாவிலுள்ள அகதிகள் முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்குதடுத்து வைக்கப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவிப்பு.

* நேற்றுடன் முடிவடைந்த 36 மணி நேரத்தில் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 13 இராணுவத்தினர் உயிரிழந்ததாக இந்திய வானொலி அறிவிப்பு.

26.09.1990

* யாழ்.கோட்டைக்குள் சிக்குண்டிருக்கும் பொலிஸ்காரர்களில் பலர் தற்போது காது கேளாத மந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் விடுதலைப் புலிகளின் குண்டுத் தாக்குதல்களால் ஏற்படும் சத்தங்களே இதற்குக் காரணமெனவும் இராணுவ அதிகாரியொருவர் தெரிவித்துள்ளதாக கொழும்புப் பத்திரிகையொன்று தெரிவிப்பு.

விசேட பதிப்பு

யாழ்ப்பாணம் கோட்டை இன்று காலையில் விடுதலைப் புலிகளிடம் வீழ்ந்தது. அங்கு இதுவரை நிலைகொண்டிருந்த இலங்கைப் பாதுகாப்புப் படையினர் நேற்று நள்ளிரவு யாழ்.கோட்டையைச் கைவிட்டு அங்கிருந்து வெளியேறிவிட்டதாகத் தெரிவிப்பு.

27.09.1990

* மண்டைதீவிலிருந்தும் இராணுவம் வெளியேறி வருவதாக பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தெரிவித்ததாக பி.பி.சி வானொலி அறிவிப்பு.

புலிகள் வசம் வீழ்ந்த யாழ்ப்பாணம், கோட்டையைப் பார்க்க நேற்று மாலை பொது மக்கள் அங்கு முண்டியடித்துக் கொண்டு சென்றதாகத் தெரிவிப்பு.

(27.09.1990 திகதியன்று நண்பகல் உதயன் - சஞ்சீவி பணிமனை மீது இலங்கை விமானப்படையினர் குண்டு வீச்சு நடத்தியதால் 28.09.1990 ஆம் திகதி முதல் 01.10.1990 வரை நான்கு நாள்களாக உதயன் பத்திரிகை பிரசுரமாகவில்லை.)

# கட்சி தாவத் தயாராகிறார் காதர் எம்.பி.?
## ரணிலுக்கு எதிராக அவர் போர்க்கொடி!

கொழும்பு,ஏப்.27

கண்டி மாவட்டத்திலிருந்து மீண்டும் ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் காதர் எம்.பி., எதிரணியிலிருந்து ஆளும் பக்கம் பாய்வதற்கு முன்னேற்பாடாக இப்போது ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கி முறுக ஆரம்பித்துவிட்டார்.

அந்த நடவடிக்கைகளின் ஒரு கட்டமாக ஐ.தே.கட்சியில் தாம் வகித்துவந்த அகில இலங்கை முஸ்லிம் அமைப்பாளர் பதவியை அவர் இராஜிநாமாச் செய்துள்ளார். அடுத்து அவர் வகித்துக்கொண்டிருக்கும் கட்சியின் உப தலைவர் மற்றும் செய குழு உறுப்பினர் பதவிகளையும் அவர் இராஜிநாமாச் செய்யத் திட்டமிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அகில இலங்கை முஸ்லிம் அமைப்பாளர் பதவியை இராஜிநாமாச் செய்கிறார் எனத் தெரிவித்து காதர் எம்.பி. கடந்த வெள்ளிக்கிழமை ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியவை வருமாறு:-

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் மீது தாம் இனியும் நம்பிக்கை வைக்கமுடியாது. அவர் கட்சியை ரவூப் ஹக்கீமிடம் அடகு வைத்துவிட்டார். ரவூப் ஹக்கீம் கண்டியில் போட்டியிட்டதன் காரணத்தால் எமது கட்சிக்குக் கிடைக்கவிருந்த ஓர் ஆசனம் கிடைக்காமல் போய்விட்டது.

ஹக்கீம் அங்கு போட்டியிட்டதன் காரணத்தால் சிங்கள - முஸ்லிம் மக்களிடையே பிளவு ஏற்பட்டுவிட்டது. சிங்களவர்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சியில் முக்கியத்துவம் வழங்கப்படவில்லை எனக் கூறி பெரும்பாலான சிங்களவர்கள் ஆளும் கட்சிக்கு ஆதரவாக வாக்களித்தனர். இதனால் கண்டியில் எமது ஆசனங்கள் குறைந்தன.

பலமிக்க ஐக்கிய தேசியக் கட்சி அதன் தலைமைத்துவத்தின் பிழையான அரசியல் காய் நகர்த்தல் காரணமாகப் பலமிழந்து போய்விட்டது. அக்கட்சியில் இருப்பதால் எவருக்கும் எந்தப் பிரயோசனமும் இல்லை. இதனால் நான் அக்கட்சியில் வகித்துவரும் அத்தனை பதவிகளையும் இராஜிநாமாச் செய்கிறேன்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அகில இலங்கை முஸ்லிம் அமைப்பாளர் பதவியை நான் இராஜிநாமாச் செய்துள்ளேன். கட்சியின் உபதலைவர் மற்றும் செயற்குழு உறுப்பினர் பதவிகளையும் அடுத்து இராஜிநாமாச் செய்யவுள்ளேன். - என்றார். (சி)

# நெல் மூடைக்குள் வைக்கப்பட்ட பணம் அரிசி ஆலையிலிருந்து மீட்கப்பட்டது

நல்லூர்,ஏப்.27

நெல்மூடைக்குள் வைக்கப்பட்டிருந்த 2 லட்சம் ரூபா பணம் மூன்று தினங்களின் பின் சுன்னாகம் பொலிஸ் நிலையம் முன்பாகவுள்ள ஏ.வி.எம். அரைக்கும் ஆலையின் உரிமையாளரால் சொந்தக்காரரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாது:-

சுன்னாகம், மயிலணியைச் சேர்ந்த ராசரத்தினம் என்பவர் தனது மனைவியிடம் கொடுத்திருந்த 3 லட்சம் ரூபா பணத்தை அவரது மனைவி வீட்டில் உள்ள நெல் மூடை ஒன்றில் பாதுகாப்பாக வைத்திருந்ததாகவும் நெல் மூடைக்குள் பணம் இருப்பதை அறியாத நாகரத்தினம் நெல் உடைப்பதற்காக ஒரு மூடையை எடுத்துச் சென்று மேற்படி ஆலையில் ஒப்படைத்தார்.

கணவர் மீண்டும் மனைவியிடம் பணத்தைக் கேட்டபோது குறிப்பிட்ட நெல் மூடை அரிசி ஆலையில் ஒப்படைக்கப்பட்ட விடயம் தெரியவந்தது. இதைத் தொடர்ந்து மேற்படி சம்பவம் குறித்து அரிசி ஆலை உரிமையாளரிடம் கூறப்பட்டதும் உடைப்பதற்காக வைத்திருந்த மூடையொன்றினுள் இருந்து கண்டெடுத்த குறிப்பிட்ட பணத்தை அதன் சொந்தக்காரரிடம் வழங்கியமை பலராலும் பாராட்டப்பட்டது.

(50-111)

# ஆங்கில ஆசிரியர் இல்லாத பாடசாலை; உடனடியாக நியமிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப் 27

புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயத்திற்கு ஆங்கிலப்பாட ஆசிரியர் இதுவரை நியமனம் செய்யப்படாமையால் இங்கு கல்வி பயிலும் மாணவர்கள் ஆங்கில அறிவைப் பெறமுடியாது பின்தங்கிய நிலையில் இருப்பதாகப் பெற்றோர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் பாடசாலை அதிபருடன் தொடர்புகொண்டு கேட்டபோது - தான் இந்த விடயத்தை வலயக் கல்விப் பணிப்பாளருக்கு எழுத்து மூலம் ஏற்கனவே தெரிவித்துள்ளதாகவும், ஆனால் இதுவரை ஆங்கில ஆசிரியர் எவரும் நியமிக்கப் படவில்லையெனவும் பதிலளித்துள்ளார்.

எனவே பாதிக்கப்பட்ட மாணவர்களின் நலன்கருதி உடனடியாக ஆங்கில ஆசிரியர் ஒருவரை நியமனம் செய்வதற்கு ஆவன செய்யுமாறு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் அவசரவேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(க-188)

# திருத்தப்படாத வீதியும் வருத்தப்படும் மக்களும்

கைதடி,ஏப்.27

கைதடி, ஆவரம்பள்ளம் வீதி கடந்த பல வருடங்களாக திருத்தப்படாததினால் அவ் வீதியால் பயணம் செய்யும் பாடசாலை மாணவர்களும், பொதுமக்களும் பெரும் அவலங்களைத் தினமும் அனுபவிப்பதாகக் கூறப்படுகின்றது.

கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயத்திலிருந்து வடக்குப் பக்கமாகச் செல்லும் இவ்வீதி நான்கு கிலோ மீற்றர் நீளமுடையது எனவும், கைதடி வடக்கில் சென்று முடிவடைகின்றது என்றும், பல காலமாக திருத்தப் படாததினால் மழை காலங்களில் வெள்ளமும், கோடை காலங்களில் விசமிகளால் மண் அகழ்வும் இடம் பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



அத்துடன் இவ்வீதிகளில் அண்மைக் கால மாக வேறு இடங்களில் இருந்து கொண்டுவரப்படும் கழிவுகள் பலவும் கொட்டப்படுவதாகவும் இதனால் இப்பகுதியில் தற்போது தாங்க முடியாத துர்நாற்றம் வீசுவதாகவும் அப்பகுதியில் வசிக்கும் மக்களால் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் கவனமெடுத்து இவ்வீதியை உடன் திருத்தித் தர நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(50-288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய சந்தையில் ஆதிக்கம் செலுத்தும் இலங்கை முதலீட்டாளர் 'புறமோட்டர்ஸ்'

இலங்கையின் முதலீட்டாளர் ஒருவர் தனது தனித்திறமையினால் உலகின் மிகப்பெரிய இந்தியச் சந்தையில் பால் குளிரூட்டும் இயந்திரத் தயாரிப்பில் முன்னோடியாகத் திழ்கின்றார். அவர் வேறுயாருமல்ல இலங்கை தேசிய கைத்தொழில் சம்மேளனத்தினால் பலமுறைகள் தங்கம் மற்றும் பளிங்கு விருதுகளைத் தனது தொழில்துறை மேன்மைக்காக வென்ற புறமோட்டர்ஸ் மற்றும் ஐ.எஸ்.எவ் கூட்டு நிறுவனங்களின் தலைவரான ந.சிவகுமாரன் ஆவார்.

"நாங்கள் தற்பொழுது இந்திய ரூபாய் 700 லட்சங்கள் மதிப்புள்ள பால் குளிரூட்டும் இயந்திரங்களை இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் இயங்கிவரும் 'அமுல்' கூட்டுநிறுவனங்களுக்காகத் தயாரித்துவருகின்றோம்." இதனை மிகவும் பெருமையுடன் தெரிவிக்கும் சிவகுமாரன் 1977 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் மோட்டார் இயந்திரங்களையும், விவசாய உபகரணங்களையும் மீள் அமைக்கும் வியாபாரத்தை புறமோட்டர்ஸ் எஞ்சினியரிங் கம்பனி என்ற பெயரில் ஆரம்பித்தார்.

தனது பட்டப்படிப்பை பொறியியலாளராக இங்கிலாந்தில் நிறைவுசெய்த சிவகுமாரன் அந்நாட்டின் குடியுரிமை பெற்றுவாழும் வாய்ப்பை உதறித்தள்ளி விட்டு தனது தாய் நாட்டில் தொழில் முயற்சியை மேற்கொள்ளும் வண்ணம் யாழ்ப்பாணத்தில் தொழிற்சாலை ஆரம்பித்து இன்று பால் உணவு உற்பத்திப் பொருள்களை பதனிடும் இயந்திரங்களைத் தயாரிப்பதில் முன்னோடியாகத் திகழ்க்கின்றார். இன்று ஐ.எஸ்.எவ். என்னும் பிரபல வியாபார அடையாளக் குறியின் கீழ் இலங்கையின் மிகப் பிரபலமான பன்நாட்டு உணவு உற்பத்தி நிறுவனங்களுக்கு உலகத்தரம் வாய்ந்த இயந்திரங்களை வழங்கி வருகிறார்.

ஐ.எஸ்.எவ். நிறுவனம் அண்மையில் 5 சிறிய பால் பதனிடும் தொழிற்சாலைகளை முற்றும் முழுதாக தாங்களே வடிவமைத்து ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையுடன் கிழக்கு மாகாணத்தில் அமைத்துள்ளனர். உலகத்தரம் வாய்ந்த அதிநவீன தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய இயந்திரங்களை உள்வாங்கியுள்ள இத் தொழிற்சாலைகள் மிகக்குறிய காலத்தில் துரிதகதியில் அமைக்கப்பட்டு ஆசிய அபிவிருத்தி வங்கியின் முகவரான நிக்கொட் ஸ்தாபனத்தினரால் பாராட்டைப் பெற்றவை.

ஐ.எஸ்.எவ். நிறுவனத்தின் முன்னோடித் தகைமைகள் அவர்களின் முழுமையான தொழிலகமாக ஆக்கியதோடு மட்டுமல்லாமல் பிற்காலத்தில் இந்தியாவில் பால் குளிரூட்டும் இயந்திரங்களின் முன்னோடித் தயாரிப்பாளராகும் வாய்ப்பையும் பெற்றுக்கொடுத்தது.

சிவகுமாரனின் இந்தியத் தொழில்முயற்சியும் மிகவும் தனித் தன்மை வாய்ந்தது. ஐ.எஸ்.எவ். நிறுவனத்தால் இலங்கையில் இயங்கிவரும் பன்நாட்டு நிறுவனமான நெஸ்லே ஸ்தாபனத்திற்கு அவர்களால் தயாரித்து வழங்கப்பட்ட பால் குளிரூட்டும் இயந்திரங்களால் மிகவும் கவரப்பட்ட இந்திய நெஸ்லே ஸ்தாபனம் அவர்களுக்குத் தேவையான பால் குளிரூட்டும் இயந்திரங்களை சிறிலங்காவில் இயங்கிவரும் ஐ.எஸ்.எவ்.ஸ்தானபத்தில் இருந்து இறக்குமதி செய்தனர். ஐ.எஸ்.எவ். இன் தரத்தையும் உயர் தயாரிப்புத் திறனையும் சாலவே அறிந்து கொண்ட நெஸ்லே இந்திய நிறுவனம் தமக்குத் தேவையான இயந்திர உபகரணங்களை அவர்களிடமிருந்தே பெற்றுக்கொள்ளத் தீர்மானித்தது.

அவ் இயந்திரங்களை இந்தியாவிலேயே ஐ.எஸ்.எவ். ஸ்தாபனத்தால் தயாரித்துப் பெறும் பொருட்டு அவர்களின் தொழிற்சாலையை இந்தியாவில் அமைக்கும்படி கேட்டுக்கொண்டது. இக்கோரிக்கையை முற்றும் முழுதாகப் பயன்படுத்திக் கொண்ட ஐ.எஸ்.எவ். ஸ்தாபனம் இலங்கை இந்திய அரசாங்கங்களின் அனுமதியுடன் தனது துணை நிறுவனத்தை 1996 ஆம் ஆண்டு இந்தியாவில் ஆரம்பித்து பால்குளிரூட்டும் இயந்திரங்களை இந்தியாவிலேயே முதன் முறையாகத் தயாரித்து வெற்றிகண்டது.

உலகின் மிக்பெரிய பால் உற்பத்திப் பொருள்களை உற்பத்தி செய்யும் நாடாக இந்தியா திகழ்வதை நன்றாகவே உணர்ந்து கொண்ட ஐ.எஸ்.எவ். நிறுவனம் சென்னையில் இயங்கிவரும் தமது இருதொழிற்சாலைகளையும் துரிதகதியில் விரிவாக்கம் செய்ததோடு இல்லாமல் டில்லி, மோகா, புனே, அகமதாபாத், ஹைதராபாத் போன்ற இந்தியாவின் வளர்ச்சியடைந்து வரும் நகரங்களிலும் தமது விற்பனை அலுவலகங்களை அமைத்துக் கொண்டனர். இத்தோடு மட்டுமல்லாமல் உலகின் அதிநவீன இயந்திர உபகரணங்களை வெளிநாட்டிலிருந்து தருவித்து தமது உற்பத்தித் திறனை மூன்று மடங்காக அதிகரித்து மிக வேகமாக அதிகரித்து வரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கேள்விகளை முழுமையாக நிறைவேற்றிக் கொள்வதில் அதிககவனம் செலுத்தி வருகின்றது.

இங்கு குறிப்பிடத்தக்க ஐ.எஸ்.எவ். நிறுவனத்தின் மற்றும் ஒரு சாதனையாக இந்தியாவிலேயே முதல் முறையாக Micro Processor கட்டுப்பாட்டுடன் கூடிய 10000 லீற்றர் கனவளவை உள்ளடக்கக் கூடிய பால் குளிரூட்டிகளை தயாரித்து அண்மையில் நடந்த அகிலஇலங்கை பாற்பண்ணையாளர்களின் சம்மேளன வருடாந்த மாநாட்டில் காட்சிக்கு வைத்தனர். அகில பாரதம் எங்கும் வாழும் அதிதிறமையான பால் உற்பத்தியாளர்கள் பங்குபற்றிய இம்மாநாட்டில் அவர்களாக மிகவும் பாராட்டிப் புகழப்பட்ட நிறுவனமாக ஐ.எஸ்.எவ். உலாவந்ததோடு மட்டுமல்லாது சிறந்த விற்பனைக் கண்காட்சி கூடத்திற்கான விருதினையும் பெற்றுக் கொண்டது.

உலகில் மிகவும் பிரப்லமான தரம்வாய்ந்த பால் இயந்திரங்களைத் தயாரிக்கும் நிறுவனங்களான பின்லாந்து நாட்டிலுள்ள "Elecster" நிறுவனத்துடனும், டென்மார்க் நாட்டின் Gram Equipment நிறுவனத்துடனும் கைகோர்த்துள்ள ஐ.எஸ்.எவ். நிறுவனம் மிக நீண்ட நாள்கள் குளிரூட்டிகள் இல்லாமலேயே பாதுகாக்கப்படக் கூடிய பொலித்தீன் பைகளில் பொதிசெய்யக் கூடிய இயந்திரத்தை இந்தியாவிலேயே முதல் முறையாக அறிமுகம் செய்துள்ளனர். ஐ.எஸ்.எவ். இன் இம் முயற்சியானது பாரம்பரியமாக பால்பதனிட்டு பொதி செய்து குளிர்சாதன முறைகள் மூலம் விநியோகிக்கும் முறையை மாற்றி பால் உற்பத்தியிலும் விநியோகத்திலும் பாரியமாற்றங்களை ஏற்படுத்தி பால்பதனிடும் முதலீட்டாளர்களின் இன்றைய தேவையாக உருவாகி இருப்பது குறிப்பிடத்தக்கது.

அத்தோடுமட்டும் இல்லாது குளிரூட்டிகளின் பாவனையால் வெளியேற்றப்படும் மாசுக்களும் அகல்வதால் உலகின் மிகப்பெரிய பிரச்சினையாக உருவெடுத்து வரும் புவி வெப்பமடைதலையும் தவிர்ப்பதில் ஐ.எஸ்.எவ். நிறுவனம் தனது பங்கைச் செலுத்திவருகிறது.

ஐ.எஸ்.எவ். நிறுவனம் முதல்முறையாக 1984 ஆம் வருடம் 'ஏற்றுமதி அபிவிருத்தி சபை' தேசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையுடன் நடத்திய 'இலங்கையின் உற்பத்திக் கண்காட்சியில் விருது' வழங்கிச் சிறப்பிக்கப்பட்டனர். இதன்பின் அயராத உழைப்பின் பயனாக ஐ.எஸ்.எவ். நிறுவனமாக இலங்கைத் தேசிய தொழில் சம்மேளனத்தினால் (சி.என்.சி.ஐ) சார்க் நாடுகளில் இலங்கையர்களின் சாதனையாளர்களுக்கான தங்க விருதை 2002ஆம் ஆண்டு பெற்றுக் கொண்டதோடு தொடர்ந்து வந்த இருவருடங்களிலும் தங்க விருதுகளைப் பெற்றுக்கொண்டதால் 2004 ஆம் ஆண்டு பளிங்கு விருது அளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது. இப்பளிக்கு விருதானது சாதனை விருதுகளில் மிகவும் அரிதாகப் பெறப்படும் விருது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

விளம்பர வரணம்

# கணினித் துறையில் நாம் எவ்வாறு கற்கை நெறிகளைத் தேர்வு செய்வது

இன்று அனைவர்க்கும் கணினி என்பது இன்றியமையாததாகி விட்டது.

எத்துறை சார்ந்தோருக்கும் தமது துறையை மேலும் விருத்தி செய்ய கணினி அறிவு மிகவும் அவசியமாகும்.

ஒவ்வொருவரும் தமது தனிப்பட்ட அல்லது அலுவலகத் தேவைகளை இலகுபடுத்த பிரயோப்பொதிகள்( Microsoft Office, Open Office) இலத்திரனியல் தபால் (e-mai) , இணையப்பாவனை (Internet handling) என்பவற்றில் தேர்ச்சி மிகவும் அவசியமானதாகும். இதனாலேயே எவ்வேலை வாய்ப்புகளின் போதும் ஆங்கிலப் புலமையுடன் கணினிப்புலமையும் கட்டயாமாக எதிர்பார்க்கப்படுகின்றது.

போட்டி நிறைந்த இவ்வுலகில் துறைசார்ந்த புலமையை மேம்படுத்த அவரவர் துறையில் பல்வேறு சிறப்பான பிரயோகப் பொதிகள் வெளிவந்துள்ளன.

அச்சகத்துறையில், கணக்கீட்டுத்துறையில், தரவுப் பேணல்துறையில், புகைப் படத்துறையில், பல்லூடகத்துறையில், கட்டட வடிவமைப்புத் துறையில், மருத்துவத துறையில், என துறைசார்ந்த புலமையை மேம்படுத்த அவரவர் துறைசார்ந்த பிரயோகப் பொதிகளில் தேர்ச்சி பெறுவது அவசியமானதாகும்.

புதிதாக வேலைவாய்ப்பைத் தேடிக்கொள்ள விரும்புவோர் தமது இயல்பான ஆற்றலுக்கேற்பவும் தற்போதைய உலக தொழில் சந்தைக் கேற்பவும் தமது அறிவையும் அனுபவத்தையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

முதலாவதாக மாணவர்கள் தமக்குரிய தொழில் வாய்ப்புகளை முதலில் இனங்காண வேண்டும்.

தொழில் வாய்ப்புக்களை எவ்வாறு இனங்காணலாம

தமது சூழலை அவதானித்தல், பத்திரிகைகளை அவதானித்தல். இன்று உலகில் உள்ள அனேக நாடுகளில் உள்ள வேலை வாய்ப்பு சம்பந்தமான விபரங்கள் இணைய சஞ்சிகைகளில் வெளியிட்படுகின்றன.

அதுமட்டுமன்றி அனேகநாடுகள் தம்நாடுகளில் உள்ள ஆள்தேவையாக உள்ள தொழிற்பட்டியலை( Demands job list) இணையத்தின் வாயிலாக வெளியிட்டுள்ளன.

இவற்றை ஆய்வு செய்து தமக்கு ஆர்வம் உள்ள தொழில்களில் தகைமையையும் அனுபவத்தையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

தகவல் தொழிற்நுட்பத்துறையைப் பொறுத்தவரையில் அதிகளவான வேலை வாய்ப்புக்கள் இணையம் மூலமே கோரப்படுகின்றன.

இலங்கையில் http://www.topjobs.lk/எனும் தளமும் மிகப்பிரல்யமானது. வெளிநாட்டு தொழில்ற்சந்தை சம்பந்தமான விபரங்களை www.monster.ca www.careerbuilder.com தளங்கள் மூலம் அறியலாம்.

தகவல் தொழில்நுட்பத்துறையில் உயரிய வேலைவாய்ப்பைப் பெறவிரும்பும் ஒருவர் தொழில்வாய்ப்பு சந்தையையும் அதற்கு எவ்வகையான தகைமைகள் தேவைப்படுகின்றன என்றும் அறிவது மிக முக்கியமானதாகும்.

பன்னர் அதற்குரிய தகைமையை வழங்கும் தரமான கற்கை நெறிகளை விரைவாகவும் முழுமையாகவும் கற்றுத் தேர்ந்து தகைமை வாய்ந்த சான்றிதழ்களை பெறவேண்டும். தான் இலக்காக கொண்ட தொழில்வாய்ப்பு சார்ந்த தொழில் அனுபவத்தைப் பெற்றுத்தரக்கூடியதான அதனிலும் குறைந்த தொழில் ஏதேனும் ஒன்றில் பயிலுனராகவேனும் அனுபவத்தினை பெற்றுக்கொள்ள வேண்டும்.

மேற்குறித்த தகுதியை உடையவர் செல்ல விரும்பும் நாடொன்றில் அவர் விரும்பும் தொழில் ஆள்தேவையாக உள்ள தொழிற்பட்டியலில் ( Demands job list) இருந்தால் அவர் இலகுவாக( Work Permit)தொழில் அனுமதி அல்லது- (Skill Migration ) புலமையாளருக்கான குடிவரவு அனுமதியை பெறமுடியும்.

உதாரணமாக தகவல் தொழில்நுட்பத்துறையில் வலையமைப்பு பாதுகாப்பு (Network Security) ஆனது அதிகளவில் வெற்றிடங்களை உடையதாக காணப்படுவதுடன் உலகின் அனேக நாடுகளில் தொழிற்பட்டியலில்( Demands job list) இல் தொடர்ச்சியாகக் காணப்படுகின்றது.

இதற்கான தகைமைகளாக (மைக்ரோ சொப்ற் கணனிப் பொறியியலாளர் வலையமைப்பு பாதுகாப்பு சிறப்புத் தேர்ச்சி MCSE- spl in Network security, சர்வதேச கணினித் தொழில்நுட்ப நிறுவனங்களின் அமைப்பின் வலையப்பு சிறப்புத் தேர்ச்சியாளர் அங்கத்துவம் (ComTIA Security+), கனடா லிணக்ஸ் புலமையாளர் நிறுவனத்தில் வலையமைப்பு பாதுகாப்பில் சிறப்புத் தேர்ச்சி (Linux Professional Institute_Ontario, Candada_ security), சிஸ்கோ நிறுவனத்தின் சி.சி.என்.ஏ.(CISCO, CCNA,CCNP ) ஆகிய தகைமைகள் கோரப்படுகின்றன.

எமது யாழ். மாணவர்கள் பலரும் இத்தகைய தகைமைகளைப் பெறுவதற்கான வசதிகளின்றி பல்வேறு சட்டரீதியற்ற வழிகளை நாடி வெளிநாடு செல்லுவதும் அங்கு போதிய வருமானம் உடைய தொழில்கள் இன்றி இன்னல் படுவதை அவதானித்த பலரதும் ஆலோசனைக்கிணங்க இல. 324, பலாலி வீதி, பரமேஸ் வராச்சந்தியில் அமைந்துள்ள ஐ.நா.அபிவிருத்தி திட்ட ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்ட எம்.சி.எஸ். (MCS) நிறுவனம். மேற்குறித்த நிறுவனங்களின் பயிற்சி நிலையமாகவும் அங்கீகாரம் பெற்ற பரீட்சை நிலையமாகவும் திகழ்கின்றது.

ஐக்கிய அமெரிக்காவின், அரிசோனா பல்கலைக்கழகத்தில் 40000$ (500 000 Rs) கற்பிக்கப்படும் அதேகற்கை நெறியை -38000 Rs.w;F மிகுந்த சமூகப் பொறுப்புடன் போதித்து வருகின்றது.

தற்போது இக்கற்கை நெறிக்கான பரீட்சைக் கட்டணங்களை, கௌரவ ஜனாதிபதி அவர்களின் கீழ் இயங்கும் ICTA அமைப்பு வழங்கி இலங்கையில் தகவல் தொழில்நுட்ப ஆளணியை விருத்தி செய்யப்பாடுபட்டு வருகின்றது.

சர்வதேச வேலைவாய்ப்புகளைப் பெறுவதில் ஆங்கில அறிவு தடையாக இருப்பதனை உணர்ந்து ஆங்கிலக் கற்கை நெறியை சிறப்பாக போதித்து வரும் MCS நிறுவனம் தற்போது (Test of English as a Foreign Language) TOEFL பரீட்சை நிலையமாகவும் செயற்பட்டு வருகின்றது.

உலகின் தொழிற்சந்தைக்கேற்ப மாணவர்கள் கற்கை நெறிகளைத் தேர்வு செய்து அதற்கான தகைமையையும் ஆற்றலையும் வளர்த்துக் கொள்வது அவர்களின் கனவை நனவாக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சாளன்



நல்லதம்பி தெருவழியாக நடந்து சென்று கொண்டிருந்தான். அந்தத் தெருவின் ஒரு கோடியிலே ஒரே கூட்டமாக இருந்தது. கூட்டத்தை என்னவென்று பார்ப்பதற்காக அவன் அதை நோக்கிச் சென்றான். தெருவின் நடுவில் போடப்பட்டிருந்த மேடையின் மீது ஓர் இளைஞன் நின்றுகொண்டு பேசிக்கொண்டிருந்தான்.

" நல்ல குரல்! நல்ல பேச்சு!' என்று கூடியிருந்தவர்கள் கருத்துப் பரிமாறிக்கொண்டார்கள். அந்த இளைஞன் திருக்குறள், திருவாசகம், திருமந்திரம் போன்ற எல்லா நூல்களிலிருந்தும் பாடல்களை எடுத்துக் கூறினான். அவற்றின் ஆழ்ந்த கருத்துக்களை அழகழகாக விளக்கிப் பேசினான். புதுப்பூமணம் போல் அவன் புகழ் அந்தக் கூட்டத்தினிடையே பரவிக் கமழ்ந்தது.

நல்லதம்பிக்கு அந்த இளைஞன் மீது ஒரு மதிப்பு ஏற்பட்டது. அந்த மதிப்பு அவனை இளைஞனிடம் இழுத்துச் சென்றது. அவன் இளைஞனைப் போய்ப் பார்த்தான். சிறிது நேரம் பேசினான். அவனுடன் நட்புக் கொண்டான்.

அதன்பின் இருவரும் நெருங்கிய நண்பர்கள் ஆனார்கள். இளைஞன் பேசுகின்ற கூட்டத்திற்கெல்லாம் நல்லதம்பி தவறாமல் சென்றான். இளைஞனோடு நெருங்கிப் பழகப்பழக நல்லதம்பிக்கு அவன் மீது இருந்த மதிப்பு குறைந்து வந்தது.

அந்த இளைஞன் பேச்சுத்தான் பகட்டாயிருந்தது. அவன் பேச்சுக்கு கையாளும் பாடல்கள் - கருத்துரைகள் கூட அவன் படித்துப் பார்த்துச் சிந்தித்துக் கூறியவையல்ல என்றும், யாரோ வேறு கூட்டங்களில் பேசியவை, எழுதியவை என்றும் நல்லதம்பி அறிந்துகொள்ள வெகுநாளாகிவிடவில்லை. மேலும், அந்த இளைஞனுடைய பழக்கவழக்கங்களை நல்லதம்பியால் நெடுநாள் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. மேடையிலே பேசுவதெல்லாம் உண்மை- அன்பு- உயர்வு- பெருந்தன்மை போன்ற கருத்துக்களாயிருந்தன. அவன் செயல்களோ எல்லாவற்றிற்கும் மாறாக இருந்தன. மேலும் அவன் நண்பர்களையே ஏமாற்றிப் பிழைக்கும் வாழ்வைக் கொண்டிருந்தான்.

முதல் நாள் மணம் வீசிய பூ மறுநாள் வாடி மூன்றாம் நான்காம் நாள்களில் அழுகி நாற்றம் எடுப்பது போல், அந்த இளைஞனுடைய தன்மையும் இருந்தது. நல்லதம்பி அவன் நட்பை உதறிவிட்டு வந்துவிட்டான். - உமாசங்கர்.

★★★★★★★★★★★★★★★★★

# தாகம்

நா வரண்டு ஒரு துளி தண்ணீருக்கு ஏங்கிக் கிடக்கிறது.

தண்ணீரே சூழ்ந்திருந்த பொழுதுகளில் தண்ணீரைப் பற்றிச் சிந்திக்க முடியவில்லை. இப்போது நினைவு முழுவதையும் தண்ணீரே ஆக்கிரமிக்கிறது.

எனக்குள் எழுந்த தாகம் பெருக ஆரம்பித்திருக்கிறது.

உன்னை நாடிய தாகமென அது கிளர்ந்து விஸ்வரூபம் கொள்கிறது.

ஒருதுளி அமிர்ததாரை போதும். அந்தத் தாகத்தைத் தணித்து விடுவதற்கு.

ஆனால் நீதான் அந்த மழைச் சாரல்களைக் காட்டமாட்டேன் என்கிறாயே!

வாடிய
பயிருக்கெல்லாம்
நீர்
வார்க்கும்
நீ, இந்த
ஏழையின்
தாகத்திற்குப்
பெரும் விலை
பேசுகிறாய்.



தாகம்.....
கடைசிவரை
உலுப்பிப்
போடுகிறது
உயிரை....
வரண்டு
உலர்ந்த நெஞ்சில்
ஒரு துளி ஈரத்தைத்
தடவ மாட்டேன்
என்கிறாய்!

தாட்சாயணி

தாகம் பற்றி உணர்த்த
வேண்டும் என்பதற்காக இப்படியா என்னை நீ உலர்த்திப் போட வேண்டும்?

உலர்ந்த இதயம்....
உலர்ந்த உயிர்வெளி...

வரண்ட காற்றின் சுவாசத்தில் மலர்ச்சி கொஞ்சமும் இல்லை.

பாலைத்துயர் நெஞ்சை வருத்துகிறது.

நீண்டு வெறித்துக் கிடக்கும் பாலைவனத்தில், தொலை தூரத்திற்கு யாருமே இல்லை...

யாருமற்ற வெறும் வனாந்தரத்தில் தாகத்தோடலையும், பாலைவனப் பயணியாய் என்னை மாற்றிவிட்ட நீ, எங்கே உன்னை மறைத்துக் கொண்டாய்...?

உன்னைத் தேடிவரும் பயணத்தில் என்னோடிணைந்தவர்கள் அற்றுப் போவதையும் அறியாமல் உனது குரலின் பின் இழுபட்டு வந்துவிட்டேன்.

தூரத்தே உனது பிம்பம் தண்ணீர்க்குடம் சுமந்த பெண் போல் தெரிகிறது.

குடத்திலிருந்து சிந்திய துளிகள் நிலத்தில் உலர்ந்து திரண்ட மண்துகள்களாய் மாறியிருக்கின்றன.

அந்தச் சுவடுகளின் பின்னால், என்னைத் தொற்றிய தாகம் படர, நடந்து கொண்டிருக்கிறேன்.

உயிர்களற்ற வெளியில் எனது உயிர்த்துளி மட்டும், தயங்கித் தயங்கி நடந்து கொண்டிருக்கிறது.

மேலே வரண்டு திரளும் மேகங்களின் அமிர்த தாரை வழிவதற்கான சாத்தியமே அற்றுப் போய்க் கொண்டிருக்கின்றது.

ஒரு மலர்க்காடு தானும் எதிர்ப்படாதா...? என்ற ஏக்கத்தில் நடக்கிறேன்.

மலர்க்காட்டின் வசீகரத்தில் அங்கு நீ தங்கியிருக்கலாமல்லவா?

மலர்களின் சுகந்தத்தில் மெய்ம்மறந்து நீ உன் அருள் மழை இறைக்கையில் அந்தத் துளி என் கரம் சேரலாமல்லவா....?

இல்லை... நீ உன்னை மறைத்துப் போய்க் கொண்டிருக்கிறாய்.

நானும் உன் முகவரி தொலைத்துத் தேடிக் கொண்டிருக்கிறேன்.

கொஞ்சம் கொஞ்சமாய் உலரும் காற்றில் எனக்குள் சுரந்த நீரும் வற்றிக் கொண்டிருக்கிறது.

வரண்ட காற்று உடல் தடவ, உலர்ந்த சருகாய் காற்றில் ஏற்றப்படுகிறேன்.

ஏற்றப்பட்டு வீழ்ந்த இடத்தில் சூழவும் பூக்களாய் நிறைந்திருக்கிறாய்.

மலர்களில் வழியும் மகரந்தத் தேன் துளியை இலைகளில் கோலியெடுத்து, என் உதடுகளில் வார்க்கிறாய்...

தாகம் அமுதத்தால் நிறைகிறது.

உன்பின் அலைவுற்ற இதயம் அமைதியுறுகிறது.

என்னை அழைத்து, அலைத்து இறுதியில் பேரின்பம் காட்டினாய்.

தாகம் தீர்த்து உன் மடியில் உறங்கிற்று இதயம்.

*(நன்றி: கடவுளோடு பேசுதல் - சில ஆன்மீகக் குறிப்புகள்)* ✱✱✱



# உலகின் முதல் இருதயமாற்றச் சிகிச்சை

உலகத்திலேயே முதல் முதலில் 'இதய மாற்று அறுவை சிகிச்சை'யை செய்து கொண்டவர் 'லூயிஸ் வாஷ் கன்ஸ்கை' என்பவர் தான். தென்னாப்பிரிக்காவின் கேப்டவுன் நகரிலுள்ள க்ரூடிசேவர் மருத்துவமனையில் இந்த இதய மாற்று அறுவை சிகிச்சை நடந்தது. டாக்டர் கிறிஸ்டியன். பேர்னாட் என்ற பேராசிரியரின் தலைமையில் 30 டாக்டர்கள் கண்காணிப்பில் நடந்தது. 1967 ஆம் ஆண்டு டிசெம்பர் 3 ஆம் திகதி நள்ளிரவு ஒரு மணி முதல் 6 மணி வரைக்குள்ளாக அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அறுவைச் சிகிச்சைக்கு நன்கொடை அளித்தவர் செல்வி டெனிஸ் ஆண்டர்வால் என்ற 25 வயது பெண். அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட லூயிஸ் 18 நாள்கள் உயிர் வாழ்ந்துவிட்டு டிசெம்பர் 31 ஆம் திகதி இறந்துவிட்டார். இவர் முதன் முதலில் இதய மாற்று அறுவை சிகிச்சையைச் செய்து கொண்டவர் என்ற முறையில் சாதனையாளர் வரிசையில் சேர்ந்து விட்டார். - சுகந்தன். ★★★

# கடவுளும், சாக்கடையும் நீர்த்தேக்கங்களே!



*இமயமலையைப் பார்த்தேன்; 'அடடா! எவ்வளவு பெரிய சிருஷ்டி!' என்று பிரமித்தேன். கம்பனின் காவியத்தைப் படித்தேன்; 'ஆகா! எவ்வளவு மகத்தான படைப்பு!' என்று பிரமித்தேன். பாரதி கவிதைகளைப் படித்தேன்; 'இத்தனை சின்ன வயதுக்குள்ளே எத்தனை அற்புதம்' என்று பிரமித்தேன். காந்திஜியின் போராட்ட முறைகளைப் படித்தேன்; ' எவ்வளவு தன்னம்பிக்கை' என்று பிரமித்தேன்.*

*எனக்குத் தோன்றியது இதுதான்: மனிதப் பிறவிக்கோர் இலட்சியம் உண்டென்றால் அது பிரமிக்கத்தக்க வாழ்க்கை வாழ்வதே.*

*' செய்தால் அவன் செய்ய வேண்டும்' என்பார்கள். 'இதற்கு இவன்தான்' என்பார்கள்; இவனை விட்டால் ஆள் கிடையாது' என்பார்கள்; 'இன்னொருவன் பிறக்கப் போகின்றானா' என்பார்கள்; 'இவன் ஒரு சகாப்தம்' என்பார்கள்; அவனை ஒரு எல்லைக் கல்லாகச் சுட்டிக்காட்டுவார்கள்.*

*இன்னொரு காந்தி இன்னும் பிறக்கவில்லை; இன்னொரு கம்பன் இன்னும் தோன்றவில்லை; இன்னொரு இமயமலை இனியா உற்பத்தியாகப் போகிறது?*

*வியப்புக்குரியவன் கடந்த காலம், எதிர்காலம், நிகழ்காலம் மூன்றையும் நிர்ணயிக்கின்றான்.*

*இமயமலை உள்ள நாட்டிலே பாறாங்கற்களும் கிடைக்கலாம்; ஆனால் பாறாங்கல் இமயமலையாகாது.*

*கப்பல் ஓடுகின்ற கடலில் கட்டு மரமும் ஓடலாம்; ஆனால் கடலோடும் பிரயாணி கட்டுமரத்தை நம்பமாட்டான்.*

*மகா மனிதர்களுக்கிடையிலே சிறியவர்களும் பெரியவர்கள் போல் தோற்றமளிக்கலாம்; ஆனால் சிறுமைக்கோர் எல்லை, பெருமைக்கோர் எல்லை என்று வரையறை இருக்கிறது.*

*வேடிக்கை என்னவென்றால், இமயமலை பாறாங்கல்லைக் கேலி செய்வதில்லை; பாறாங்கல் இமயமலையை விமர்சனம் செய்கிறது.*

*'நிறைகுடம் தளம்பாது' என்பார்கள். 'சலனமில்லாத இடத்தில் ஆழம் அதிகம்' என்பார்கள். கரையோரம் இருக்கும் அலை நடுக்கடலில் இல்லையே!*

*பறக்கும் போது டகோடா விமானம் படபடவென்று அடித்துக் கொள்கிறதே; போயிங் விமானம் பல்லக்குப் போல் செல்கிறதே!*

*ஆற்றலில் பெரிதானது அலட்டிக் கொள்ளாது. பேரன் குதித்து விளையாடும் குளத்தில் தாத்தா மெதுவாகத் தான் இறங்குவார். பேரன் அடிபட்டுப் பல்லுடைவான்; தாத்தா அசையாமல் கரையேறுவார்.*

*அரசியலில் பார்க்கிறேன்; கலையுலகிலும் பார்க்கிறேன். 'இந்தியாவில் தகுதியே தேவையில்லாத இரண்டு துறைகள்' என்று கூறியிருக்கிறேன். இரண்டிலுமே சுரைக்குடுக்கைகள் ஆட்டம் போடுகின்றன; பெரியவர்கள் அமைதியாக இருக்கிறார்கள்.*

*தகுதி இல்லாமல் பதவிக்கு வந்தவன். அரசியலே தன் கைவசம் என்று கருதுகிறான். தகுதியில்லாமல் கலையுலகிற்கு வந்தவன், தானே இனி என்று ஆட்டம் போடுகிறான்.*

*அவன் தேர்தலில் அடி வாங்குகிறான்; இவன் அரங்கிலே அடி வாங்குகிறான்.*

*மாமரத்துக்கு அடியில் முளைத்திருக்கின்ற புல், காற்றில் விழுந்த மாங்காயைத் தான் ஈன்ற காய் என்று கருதிக் கொள்ளுமாம்.*

*காக்கை உட்கார்ந்தவுடன் கைகாட்டி இறங்கிற்றாம். 'அடடா! கை காட்டியையே அசைத்து விட்டேன்' என்று காக்கை பெருமைப்பட்டதாம்! கைகாட்டியை இறக்கிய பாயிண்ட்ஸ்மேன் காக்கையைப் பார்க்கவில்லையாம்!*

*திருப்பதி நாயகனுக்குப் பெருத்த வருமானம் வருகிறதே என்று தெருக்கோடிப்பிள்ளையார் அலைமோதும் நிலையே, அரசியலின் நிலை.*

*அது சரி! நான் சொல்லும், பெரியவன் யார், சிறியவன் யார்?*

*எவனைக் கண்டு உலகம் பிரமிக்கிறதோ, அவன் பெரியவன்; எவன் தன்னைக் கண்டு தானே பிரமிக்கிறானோ, அவன் சிறியவன்.*

*அதுவும் சரி, இதில் நீங்கள் யார் என்று கேட்கிறீர்களா?*

*இதற்கும் உலகம்தான் பதில் சொல்லியாக வேண்டும்.*

-- **கண்ணதாசன்** - (நம்பிக்கை மலர்கள் நூலிலிருந்து) - ★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் படவிழாவை புறக்கணிக்குக! மும்பையில் அமிதாப்பின் வீடு முற்றுகை

## நேரில் சந்தித்து கோரிக்கை வைத்தது 'நாம் தமிழர்' இயக்கம்



மும்பை,ஏப்.27

கொழும்பில் நடைபெற உள்ள சர்வதேச திரைப்பட விழாவில் கலந்துகொள்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மும்பையில் நடிகர் அமிதாப் பச்சன் வீட்டை 'நாம் தமிழர்' இயக்கத்தினர் முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தினர்.

இலங்கைத் தலைநகர் கொழும்பில் வரும் ஜூன் மாதம் சர்வதேச இந்தியத் திரைப்பட விருது வழங்கும் விழா நடைபெறுகிறது. இந்த விழாவிற்கு பொலிவுட் நடிகர் அமிதாப்பச்சன் விளம்பரத் தூதராக இருக்கிறார். இவரது மகன், மருமகள் ஆகியோரும் இந்த அமைப்பில் உள்ளனர்.

இதற்கு ம.தி.மு.க. பொது செயலாளர் வைகோ, தமிழர் தேசிய இயக்க தலைவர் பழ.நெடுமாறன் போன்ற தமிழக தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

ஆயிரக்கணக்கான தமிழர்களின் மரணத்துக்கு காரணமான மஹிந்த அரசு, தலைநகர் கொழும்பில் நடத்தும் சர்வதேச திரைப்பட விழாவில் தமிழ்த் திரைப்படத் துறையைச் சேர்ந்த எவரும் கலந்துகொள்ளக் கூடாது.

அதோடு அமிதாப்பச்சன் தனது நடவடிக்கைகளை கைவிட்டு, சக இந்தியரின் உணர்வுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்று அவர்கள் கூறியிருந்தனர்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் காலையில் மும்பையிலுள்ள நடிகர் அமிதாப்பச்சனின் வீட்டை நாம் தமிழர் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் முற்றுகையிட்டு கோஷங்களை எழுப்பினர்.

அப்போது இந்திய திரைப்பட விழாவை இலங்கையில் நடத்தக் கூடாது, அந்த நிகழ்ச்சிக்கான விளம்பர தூதர் பொறுப்பில் இருந்து தன்னை விடுவிக்க வேண்டும் என்று அமிதாப்பச்சன் வலியுறுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்.

போராட்டத்தின் போது அமிதாப்பச்சன் வீட்டில் இருந்தார். போராட்டம் நடந்து முடிந்த பிறகு நாம் தமிழர் இயக்கத்தை சேர்ந்த சிலர் அமிதாப்பச்சனை சந்தித்து தமிழர்களின் உணர்வை மதித்து நிகழ்ச்சியை புறக்கணிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

கோரிக்கையை கேட்டுக் கொண்ட அமிதாப், இது பற்றி யோசித்து முடிவு எடுக்கப்படும் என்று கூறியுள்ளார்.

நாம் தமிழர் அமைப்பின் போராட்டம் மும்பையில் பரபரப்பை ஏற்படுத்தியது.

### அ.தி.மு.க. இன்று முழு அடைப்பு; தமிழகத்தில் பஸ், ரயில்கள் ஓடும்

சென்னை,ஏப். 27

தமிழகத்தில் இன்று (ஏப்ரல் 27) அ.தி.மு.க. தலைமையில் ம.தி.மு.க., இடதுசாரிகள் பொது வேலைநிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்துள்ள நிலையில், பஸ், ரயில்கள் வழக்கம் போல் ஓடும் என்று அரசு அறிவித்துள்ளது.

அசம்பாவித சம்பவங்கள் ஏதும் நடைபெறாத வகையில் பஸ், ரயில் நிலையங்கள் பொதுமக்கள் கூடும் முக்கிய இடங்களில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விலைவாசி உயர்வைக் கண்டித்து இன்று பா.ஜ.க. கூட்டணியில் இடம் பெறாத பிற எதிர்க்கட்சிகள் பொது வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்துள்ளன.

தமிழகத்தில் அ.தி.மு.க. தலைமையில், ம.தி.மு.க., இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகள் இந்த வேலை நிறுத்தத்தை நடத்தவுள்ளன.

இந்தப் போராட்டத்தில் பங்கேற்க மாட்டோம் என்று தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை, தமிழக அனைத்து வணிகர்கள் சங்கம், தமிழக வணிகர்கள் முன்னேற்ற சங்கம், தமிழக வணிகர் சங்கங்களின் கூட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு சங்கங்கள் அறிவித்துவிட்டன. இதனால் இன்று கடைகள் வழக்கம் போல் திறந்திருக்கும்.

இந்நிலையில் பஸ், ரயில்களும் தமிழகத்தில் வழக்கம்போல் ஓடும் என்று அரசு அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

சென்னை உள்பட தமிழகம் முழுவதும் முக்கிய இடங்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு போடப்படும் என்று பொலிஸாரும் அறிவித்துள்ளனர்.

# உச்ச நீதிமன்றுவரை தமிழ் ஓங்கி ஒலிக்க வேண்டும்...!

## முதல்வர் கருணாநிதி கோரிக்கை



சென்னை,ஏப்.27

உச்சநீதிமன்றம் வரை தமிழ் ஒலிக்க வேண்டும் - என்று முதல்வர் கருணாநிதி வேண்டுகோள் விடுத்தார்.

சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் சட்டமேதை டாக்டர் அம்பேத்கர் சிலை திறப்பு விழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. விழாவில் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித் தார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

சட்டத்தரணிகள் சேமநல நிதியை ரூபா 2 லட்சத்திலிருந்து 5 லட்சமாக உயர்த்தி, இறந்த சட்டத்தரணிகளின் குடும்பத் துயர் துடைக்க வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் பால்கனகராஜ் கோரிக்கை வைத்துள் ளார்.

ஐந்து லட்சம் அல்ல; அதற்கு அதிகமாகக் கூட தர நான் தயாராக இருக்கிறேன். ஆனால், சட்டப்பேரவை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இங்கே நான் ஏதாவது வெளியிட்டால் சட்டப்பேரவையில் நாளை கேள்வி எழும்.

எனவே, நான் நிதிக்குப் பயந்து அல்ல, சட்டத்திற்குப் பயந்து இங்கு வெளியிடவில்லை. அதைப்பற்றி வெளியிட வேண்டிய நேரத்திலே அறிக்கையாக வெளியிடுவேன்.

கோரிக்கைகளை நிறைவேற்றுவது ஒன்றும் பெரிதல்ல. அதுவும் சட்டத்தரணிகளின் கோரிக்கையை நிறைவேற்றுவது எனக்குப் பிடித்தமான ஒன்று. என்னுடைய பொதுவாழ்க்கை ஆரம்பமான காலத்திலிருந்து பொலிஸ்காரர்களோடும், சட்டத்தரணிகளோடும்தான் அதிகமான தொடர்பு உண்டு.

காரணம், என்னைக் கைது செய்கின்ற வேலையை அரசின் வலியுறுத்தலால் பொலிஸார் செய்கின்றனர். காப்பாற்றுகின்ற வேலையை சட்டத்தரணிகள் செய்கிறார்கள்.

எப்போதுமே, என் மீது விழுகின்ற அம்புகளை நான் மலர்க் கணைகளாகத்தான் நினைத்துக் கொள்கிறேன். என் மீது வீசப்படுகிற கணைகளை நான் தாங்கித்தான் பழக்கப்பட்டிருக்கிறேன். என்னுடைய இதயத்தைத் திறந்து பார்த்தால், நூற்றுக்கணக்கான காயங்கள் இருக்கும். அந்தக் காயங்களை ஏற்படுத்தியவர்கள் யார் என்று சொல்ல விரும்பவில்லை.

நான் விரும்புகிற ஒரே காயம் இங்கே உள்ள உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி கே.ஜி. பாலகிருஷ்ணன், உச்ச நீதிமன்ற நீதிபதி சதாசிவம் ஆகியோரின் சகாயத்தைத்தான். இது சுயநலத்துக்காக அல்ல. இந்தச் சமுதாய நலன்களுக்காகவும், சமூக நீதிக்காகப் போராடிக் கொண்டிருக்கிற மக்களுக்காகவும் அதை விரும்புகிறேன். நீங்கள் அந்த மக்களுக்கு எதிர்காலத்திலே வழி காட்ட வேண்டும், வழி வகுக்கவேண்டும்.- என்றார் முதல்வர்.

## இந்தியச் செய்திகள்

# அந்நியச் செலாவணி மோசடி; நித்தியானந்தா மீது வழக்கு?



பெங்களூர்,ஏப்.26

விதிமுறைகளை மீறி வெளிநாடுகளில் நன்கொடைகளை வாங்கி குவித்தமை தொடர்பாக நித்தியானந்தா மீது அந்நியச்செலாவணிமோசடி வழக்குத் தொடர சி.ஐ.டி. அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.

பாலியல் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குகள் பதிவு செய்து கர்நாடக சி.ஐ.டி. பொலிஸார் நித்தியானந் தாவைக் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

இந்நிலையில் நித்தியானந்தாவின் பிடுதி ஆசிரமத்தில் கடந்த வாரம் பொலிஸார் பறிமுதல் செய்து ஆய்வுக்காக ஐதராபாத்தில் உள்ள தடய அறிவியல் ஆய்வகத்துக்கு அனுப்பிவைத்த கணினி ஆவணங்களில் சில முக்கிய தகவல்கள் கிடைத்துள்ளன.

அமெரிக்காவில் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் தனது தியான பீடக் கிளை மூலம் நித்தியானந்தா, அந்நியச் செலாவணி மோசடி செய்திருப்பது தெரியவந்துள்ளது எனத் தகவல்கள் கூறுகின்றன. இதுதொடர்பாக அந்நியச் செலாவணி இயக்குநர் அலுவலக அதிகாரிகளுக்கு கர்நாடக சி.ஐ.டி. பொலிஸார் தகவல் தெரிவித்துள்ளனர். இதையடுத்து நித்தியானந்தாவிடம் விசாரணை நடத்த அவர்கள் முடிவு செய்துள்ளனர்.

இந்த மோசடி உண்மையானால் நித்தியானந்தா மீது அந்நியச் செலாவணி மேலாண்மை சட்டத்தின்கீழ் வழக்குப் பதிவு செய்யப்படும் என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

# நடுவானில் தடுமாறிய கொச்சி விமானம் விபத்துத் தவிர்ப்பு; 20 பயணிகள் காயம்!

கொச்சி,ஏப்.27

துபாயில் இருந்து 361 பயணிகளுடன் கொச்சி வந்த விமானம் கோவா அருகே நிலைதடுமாறி கீழே பாய்ந்தது. இந்தப் பயங்கரச் சம்பவத்தில் விமானத்தில் இருந்த 20 பேர் காயமடைந்தனர். நல்ல வேளையாக, விமானம் விபத்துக்கு உள்ளாகவில்லை.

ஐக்கிய அரபு எமிரேட்டில் உள்ள துபாய் நகரில் இருந்து நேற்றுமுன்தினம் காலை 'எமிரேட்ஸ் பிளைட் இ.கே.530' என்ற விமானம் 361 பயணிகள் மற்றும் விமான ஊழியர்கள் 14 பேருடன் கேரள மாநிலம் கொச்சி நகருக்கு வந்து கொண்டிருந்தது.

அந்த விமானம் காலை 8 மணி அளவில் கோவா வான்வெளி பகுதியில் வந்தபோது 25 ஆயிரம் அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்தது. அப்போது அங்கு குறைந்த காற்றழுத்தம் மற்றும் அடர்த்தி காரணமாக உருவாகியிருந்த காற்றுச்சுழலுக்குள் விமானம் நுழைந்ததால் விமானிகளின் கட்டுப்பாட்டை இழந்து நிலை தடுமாறியது. அத்துடன் பயங்கர வேகத்தில் விமானம் பூமியை நோக்கி செங்குத்தாக பறக்க ஆரம்பித்தது.

இதைக்கண்டு அதிர்ச்சியடைந்த விமானிகள், விமானத்தை உடனடியாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடிவு செய்தனர். எனினும், சில வினாடிகளுக்குள் விமானம் 200 அடி தூரம் கீழே இறங்கி விட்டது. அந்த நேரத்தில் விமானம் கிடுகிடு வென்று ஆடி குலுங்கிக்கொண்டே கீழ்நோக்கி தாழ்வாக பறந்தது.

அப்போது எந்த பயணியும் பாதுகாப்பு 'சீட்' பெல்ட்டை அணிந்திருக்கவில்லை. இதனால் விமானத்தில் இருந்த அத்தனை பயணிகளும் தங்களது இருக்கையில் இருந்து நாலாபக்கமும் தூக்கி வீசப்பட்டனர். விமானப் பயணிகளும், ஊழியர்களும் விமானத்தின் உட்புறச் கூரை மீதும், பக்கவாட்டு கண்ணாடி ஜன்னல்கள் மீதும் கடுமையாக மோதி கீழே உருண்டு விழுந்தனர்.

இதனால் 20 பேருக்கு தலையிலும், தோள்பட்டையிலும் பலத்த அடி விழுந்தது. 12 பயணிகள் ரத்த காயம் அடைந்தனர்.

அதிர்ச்சியில் விடுபடாத பயணிகள் தங்களின் உயிரை காத்துக்கொள்வதற்காக முண்டியடித்து கொண்டு பிராணவாயு கவசத்தை எடுக்க முயன்றபோது, மேற்கூரையில் மோதி பொத்பொத்தென்று கீழே விழுந்தனர்.

இதனால் விமானத்தின் உட்புறபகுதி மேற்கூரை பலத்த சேதமடைந்தது. விமானம் விபத்துக்குள்ளாக போகிறது என்று கருதிய பயணிகள் 'அய்யோ அம்மா' என்று கதறினர்.

இந்த அமளி துமளிக்கிடையே, சிறிது நேரத்தில் விமானத்தை விமானிகள் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட்டனர். அதன் பிறகு விமானம் பழைய உயரத்துக்கு சீராகப் பறக்கத் தொடங்கியது.

# பார்வதி அம்மா தமிழகத்தில் சிகிச்சை பெற விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## திருமாவளவன் எம்.பி. கோரிக்கை

சென்னை,ஏப்.27

பிரபாகரனின் தாயார் தமிழகத்தில் சிகிச்சை பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திருமாவளவன் எம்.பி. கோரிக்கை விடுத்தார்.

சென்னை பெரியார் திடலில் 'பிரபா கரன் தாயாரை திருப்பி அனுப்பக் கார ணம் யார்' என்ற பெயரில் சிறப்பு கூட்டம் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாள் கடந்த 16ஆம் திகதி இரவு மலேஷியாவில் இருந்து சிகிச்சைக்காக சென்னைக்கு அழைத்து வரப்பட்டார். அப்போது சென்னை விமான நிலையத்தில் அவரை இறங்க அனுமதிக்காமல் தடுத்து, அதே விமானத்தில் மலேஷியாவுக்கு இந்தியக் குடியுரிமை அதிகாரிகள் திருப்பி அனுப்பிவிட்டனர்.

இந்தியக் குடியுரிமை அதிகாரிகள் இவ்வாறு நடந்து கொண்டமைக்கு, கடந்த 2003 ஆம் ஆண்டு இந்திய அரசு வெளியிட்ட தடை ஆணையே காரணம் என்பது தெரியவருகிறது.

அதாவது, பார்வதி அம்மாளை திருப்பி அனுப்புவதற்கு அப்போதைய அ.தி.மு.க. அரசு பெற்ற தடையாணைதான் காரணம்.

எனினும் அதனை காரணம் காட்டி அவரை இங்கு மருத்துவம் செய்யவிடாமல் திருப்பி அனுப்பிய நடவடிக்கை மிகவும் கண்டனத்துக்குரியது. இந்தச் செயலை மனித நேயம் உள்ள எவராலும் சகித்து கொள்ள முடியாது.

முதல்வருக்கு நெருக்கமான திராவிடர் கழக தலைவர் வீரமணி போன்றவர்கள், முதல்வர் கருணாநிதியை வலியுறுத்தி பிரபாகரனின் தாயாரை மீண்டும் தமிழகத்திற்கு கொண்டு வந்து சிகிச்சை அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு விடுதலை சிறுத்தைகள் கட்சி உறுதுணையாக இருக்கும். பார்வதி அம்மாளை திரும்ப அனுப்ப காரணமானவர்களை தமிழ் சமுதாயம் ஒருபோதும் மன்னிக்காது - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆக்கிரமிப்பை முறியடிக்க அணுகுண்டு பாவிப்போம்

## வட கொரிய இராணுவத் தளபதி எச்சரிக்கை

பீஜிங், ஏப். 27

''எங்கள் நாட்டின் மீது மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்பை முறியடிக்க, அணுகுண்டு உட்பட எந்தவித ஆயுதத்தையும் பயன் படுத்தத் தயங்கமாட்டோம்'' என வடகொரிய இராணுவத் தலைமைத் தளபதி ரியாங் ஹோ எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

வடகொரிய மக்கள் சேனை உருவாக் கத்தின் 78ஆவது வருட அணிவகுப்பு நிகழ்ச்சியில் உரையாற்றுகையில் அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

''எங்கள் நாட்டின் மீது படை எடுத்து வர முயற்சி செய்தாலோ, எங்களுடைய எல் லையில் 0.001 மில்லி மீற்றர் அளவுக்கு ஆக்கிரமித்தாலோ அவற்றைப் பொறுத்துக் கொள்ளமாட்டோம். அணுகுண்டு உட்பட எந்தவித ஆயுதத்தையும் பயன்படுத்தத் தயங் கமாட்டோம்'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த எச்சரிக்கை தென் கொரியாவுக் கும், அமெரிக்காவுக்கும் என்பது குறிப் பிடத்தக்கது. சீன ஆதரவு நாடு வடகொ ரியா. அமெரிக்க ஆதரவு நாடு தென் கொரி யாவாகும்.

வடகொரியாவின் இராணுவத்துக்கு கொரிய மக்கள் சேனை (கே.பி.ஏ.) என்று பெயர். இது உருவாக்கப்பட்டு 78 ஆண் டுகளாவதை முன்னிட்டு நடைபெற்ற மிகப்பெரிய அணிவகுப்பு நிகழ்ச்சியில் அமெரிக்காவையும் தென் கொரியாவை யும் அவர் இவ்வாறு எச்சரித்துள்ளார்.

''அதிபர் லீ மியுங் பாக் தலைமையி லான தென் கொரிய அரசு எதிரிகளாலும், துரோகிகளாலும் நிரம்பி வழிகிறது. இரு கொரிய நாடுகளும் இணைய முடியாத படிக்குத் தடுப்பது தென்கொரிய அதிபர் தான்'' என்றும் அவர் சாடியுள்ளார்.

தென் கொரியாவின் கடலோரக் காவல் படையின் கப்பலை வட கொரிய இராணு வம் மார்ச் 26ஆம் திகதி வழிமறித்து கடலில் மூழ்கடித்தது. அதனால் தென்கொரியாவைச் சேர்ந்த 40 மாலுமிகள் இறந்தனர், 6 பேரைக் காணவில்லை. ஆனால், அதை அவர் தன்னு டைய உரையில் குறிப்பிடவில்லை.

அணிவகுப்பு மரியாதையை வட கொரிய அதிபர் கிம் ஜோங் இல் பார்வை யிட்டார் என இராணுவம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள் ளது. அணிவகுப்பு மரியாதை எந்த இடத் தில் எந்த நாளில் நடந்தது என்ற தகவலும் தெரிவிக்கப்படவில்லை என்பது குறிப் பிடத்தக்கது.

## ஈராக் முன்னாள் துணை ஜனாதிபதி மெசப்பத்தோமியா மலையில் கைது



பக்தாத், ஏப். 27

ஈராக்கிய முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுஸைனின் ஆட்சியில் துணை ஜனாதிப தியாக இருந்த இசாத் அல்-டவுரி, மெசப்பத் தோமியா மலையில் கைதுசெய்யப்பட்டார். இவர் இதுவரை தேடப்பட்டு வந்தவராவார்.

ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுஸைனின் ஆட்சியில் துணை ஜனாதி பதியாக இருந்த இசாத் அல்-டவுரி, சதாம் ஹுஸைன் தூக்கிலிடப்பட்ட பின்னர் அல்-குவைதா தீவிரவாதிகளின் பாதுகாப்பில் தலைமறைவாக இருந்துவந்தார்.

எனவே, இவரை ஈராக் படைகளும், அமெரிக்கப் படைகளும் வலைவீசி தேடி வந்தன. அவரைப் பற்றி தகவல் கொடுப் பவர்களுக்கு ரூ. 15 கோடி பரிசளிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், வட கிழக்கு மாகாணத் தின் தலைநகரான தியாலாவில் உள்ள ஹம்பரின் மலைப்பகுதியில் அல்-குவைதா தீவிரவாதிகளுடன் இவர் பதுங்கியிருக்கிறார் எனத் தகவல் கிடைத்தது.

இதைத் தொடர்ந்து அமெரிக்க விமானப் படையினர் அங்கு தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அப்போது மெசப்பத்தோமியா மலையில் உள்ள குகையில் பதுங்கியிருந்த இசாத் அல்-டவுரி கைதுசெய்யப்பட்டார். இவரிடம் விசாரணை மேற்கொள்ளப் பட்டது.

# மும்பைத் தாக்குதலில் கைதான அஜ்மல் கசாப்பை ஒப்படைக்குமாறு இந்தியாவிடம் பாக். கோரிக்கை

இஸ்லாமாபாத், ஏப். 27

மும்பைத் தாக்குதலில் கைதான தீவிர வாதி அஜ்மல் கசாப்பை விசாரணைக் காகத் தன்னிடம் ஒப்படைக்கவேண்டும் என பாகிஸ்தான் இந்தியாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த 2008 ஆம் ஆண்டு மும்பையில் தாஜ் ஹோட்டல், சத்ரபதி சிவாஜி ரெயில் நிலையம் உட்பட பல இடங்களில் பாகிஸ் தான் தீவிரவாதிகளால் மிகப்பெரிய தாக்கு தல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் பலர் உயிரிழந்தனர்.

இதில் ஈடுபட்ட தீவிரவாதிகளில் பாகிஸ் தானைச் சேர்ந்த அஜ்மல் கசாப் உயிருடன் பிடிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட் டார். இவர் மீதான வழக்கு விசாரணை மும்பை தனி நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், பாகிஸ்தான் தலை நகர் இஸ்லாமாபாத்தில் ஞாயிற்றுக் கிழமை பாகிஸ்தானின் உள்நாட்டு அமைச் சர் ரகுமான் மாலிக் இந்திய தூதர் சரத் சபர் வாலை சந்தித்துப் பேசினார்.

அப்போது அவர் மும்பைத் தாக்குதல் தீவிரவாதி அஜ்மல் கசாப்பின் மீது பாகிஸ் தான் நீதிமன்றத்தில் பிடியாணை பிறப்பிக் கப்பட்டுள்ளமையால் அவரை பாகிஸ்தா னிடம் ஒப்படைக்க வேண்டும் என்று அமைச் சர் ரகுமான் மாலிக் கேட்டுக்கொண்டார்.

இந்த சந்திப்பிற்கு பின்னர் ரகுமான் மாலிக் நிருபர்களுக்குப் பேட்டியளித்தார். அப்போது அவர் குறிப்பிடுகையில்,

''மும்பைத் தாக்குதல் வழக்கில் கசாப்பின் வாக்குமூலம் மிகவும் முக்கியமாகும். எனவே, இந்தியா கசாப்பை விசாரணைக் காக பாகிஸ்தானிடம் ஒப்படைக்க வேண் டும்'' என்றார்.

''பாகிஸ்தான் நீதிமன்றத்தில் விசா ரணை நடைபெறும்போது இந்தியா சார் பில் இரண்டு நீதிபதிகளும், மும்பை சி.ஐ.டி. பிரிவின் முதன்மை விசாரணை அதிகாரியும் கலந்துகொள்ளவேண்டும். அப்போது கசாப்பின் வாக்குமூலம் முழு வதையும் பதிவு செய்துகொள்ள அவர்க ளிடம் (இந்தி யா விடம்) கோரப்படும். இதன் மூலம் இந்த வழக்கு விசாரணை முன்னோக்கி செல்ல உதவும்'' என்றார்.

# அமெரிக்கப் படைகளுக்கு எரிபொருள் எடுத்துச்சென்ற 12 லொறிக்ள் எரிப்பு!

காபூல், ஏப். 27

ஆப்கானிஸ்தானிலுள்ள லோகர் மாகா ணத்தில் முகாமிட்டுள்ள அமெரிக்கப் படைகளுக்கு எரிபொருள் ஏற்றிச்சென்ற 12 லொறிகள் பொதுமக்களால் வழிமறிக் கப்பட்டு தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிர வாதிகளை ஒடுக்க ஆப்கான் இராணுவத் துக்கு உதவியாக அமெரிக்கா உள்ளிட்ட பன்னாட்டுப் படைகள் முகாமிட்டுள்ளன. காபூல் அருகே உள்ள லோகர் மாகாணத் தில் முகாமிட்டுள்ள அமெரிக்கப் படைக ளுக்கு எரிபொருள் உள்ளிட்ட பொருள் களை ஏற்றிக்கொண்டு லொறிகள் சென்று கொண்டிருந்தன.

அப்போது, அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் கும்பலாக திரண்டு வந்து எரி பொருள் மற்றும் பொருள்களை ஏற்றிச் சென்ற 12 லொறிகளை தீவைத்து கொளுத்தினர். இவற்றில், பெரும்பாலா னவை எரிபொருள் லொறிகளாகும்.

கடந்த வாரம் லோகர் மாகாணத்தில் ஆப் கான் படைகளும், அமெரிக்கப் படைக ளும் இணைந்து 2 தடவை தீவிரவாதிக ளுக்கு எதிரான வேட்டையை மேற்கொண் டன. இதைத் தொடர்ந்து வீடு வீடாகப் புகுந்து சோதனையும் நடத்தப்பட்டது.

அப்போது அப்பாவி மக்கள் கொல்லப் பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். இதனால் ஆத்திரம் அடைந்த பொது மக் கள் அமெரிக்கப் படைகளுக்காக பொருள் களை ஏற்றிச்சென்ற லொறிகளுக்குத் தீவைத்துள்ளனர்.

இந்தத் தகவலை லோகர் மாகாண பொலீஸ் தலைமை அதிகாரி ஜெனரல் முஸ்தபா மொக்செனி தெரிவித்துள்ளார். கடந்த 18 மாதங்களில் இப்பகுதியில் நடந்த மிகப் பெரிய தாக்குதல் இது என லோகர் மாகாண ஆளுநரின் செய்தித் தொடர்பாளர் டின்முகமது நார்விஷ் தெரி வித்துள்ளார்.

## மணல் விநியோகத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் அத்தகைய மீள்கட்டுமானம், புனரமைப்பு என்பவற்றுக்கு அவசியமான மணல் விநியோ கத்தை ஆயுதத்துடன் அரசியல் செய்யும் ஒரு குழு எதேச்சதிகா ரமான முறையில் தன் கையில் எடுத்துக் கொண்டு மக்களை வருத்தி வருகின் றது.

முன்னரெல்லாம் மக்கள் தம் முடைய கட்டடப்பணிகளுக்காக யாழ். செயலகம் ஊடாக விண்ணப்பித்து மணலைப் பெற றுக்கொள்ள முடிந் தது. ஆனால் எவ்வித அரச அறிவித்தலு மின்றி சட்டவிரோ தமான முறையில் மகேஸ்வரி நிதியம் என்ற பெயரில் ஒளிந்துகொண்டு, குறித்த அரசியல் கட்சி மணல் விநியோகத்தை தன்கட் டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள் ளது. இதனால் கிராமசேவகர், பிரதேச செய லர், தொழில்நுட்ப அலுவலர் என் போரி டம் உரிய அனுமதியைப் பெற்ற பின்னர் அதிகாலை 3 மணிக்கு முன் னதாகவே குறித்த நிதியக் கட்டடத்தில் வரிசையில் காத்திருந்து, தமக்குரிய அனு மதியைப் பெற மக்கள் அலைந்து அல்லற் படு கின்றார்கள். வரிசையில் நிற்கும் எல் லோருக்குமே மணல் அனுமதி வழங்கப் படுவதுமில்லை. ஒரு நாளுக்கு 60 பேருக்கு மட்டுமே மணல் விநியோகத் திற்கான அனுமதி வழங்கப்படுகின்றது. அதுவும் மணலுக்கான முழுப் பெறு மதியையும் செலுத்திய பின்னர் மகேஸ் வரி நிதியத்தினர் குறிப்பிடும் வாகனத்தி லேயே மணல் அனுப்பப்படும். இவ்வாறு மணலை பெறுவதற்கு மாதக்கணக்கிலும் காத்திருக்க வேண்டிய அவலம் குடா நாட்டு மக்களுக்கு வந்திருக்கின் றது. இதே வேளை குறித்த கட்சியினர் பெருந் தொகைப் பணத்தை பெற்றுக்கொண்டு இரகசிய வழியில் ஒரு சில வர்த்தகர்க ளுக்கு இந்த மணல் விநியோகத்தை பொறுப்ப ளித்துள்ளதையும் அந்த வர்த் தகர்கள் பெருந்தொகைப் பணத்தை மக் களிடம் வாங்கிக் கொண்டு சட்ட விரோத மான முறையில் மணலை விற் பனை செய்வதையும் பொதுமக்கள் பலர் என் னிடம் முறையிட்டுள்ளனர். மக் களின் அவசியத் தேவைகளில் ஒன் றான மணல் விநியோகத்தை அரசியல் கட்சி ஒன்று தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து ஏமாற்றும் நிலைக்கு முற்றுப்புள்ளி வைத் தாகவேண்டும்.

இது தொடர்பாக 'மகேஸ்வரி நிதி யம்' எவ்வாறு ஒட்டுமொத்த குடா நாட்டுக் கான மணல் விநியோகத்தை பொறுப் பேற்றது? அவ்வாறு மணல் விநியோகம் மகேஸ்வரி நிதியத்தி டமே சட்ட பூர்வமாக ஒப்படைக்கப் பட்டதா? இது தொடர்பான பகிரங்க கேள்வி அறிவித்தல் விடுக் கப்பட்டதா? இல்லையாயின் 'மகேஸ்வரி நிதியம்' எவ்விதம் மணல் விநியோகத்தை தன்கையில் எடுக்க முடிந்தது? என்பன தொடர்பாக நான் அரசிடம் முறையிடவும் சட்டநடவடிக்கை எடுக்கவும் திட்டமிட் டுள்ளேன். அதனூடாக மணல் விநி யோகத்தில் மக்களை பாடாய்ப் படுத் தும் ஆயுதம் தாங்கிய அரசியல் கட்சி யின் ஜன நாயக விரோத [illegible] கட்ட வேண்டும் [illegible] வும் இன்றிய மையாததாகும்- என்றுள்ளது.

## யுத்தத்துக்குப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வங்கிகளும் நிதி நிறுவனங்களும் ஆரம் பிக்கப்படுகின்றமையாக மாத்திரமேயுள் ளது. வேலைவாய்ப்புகளை உருவாக்கக் கூடிய தொழிற்சாலைகளைக் காண முடிய வில்லை என்றும் அந்த செய்திச்சேவை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக 'ஐ.பி.எஸ்' செய்திச்சேவை மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

யுத்தம் முடிவடைந்து ஒரு வருடம் பூர்த்தியாகின்ற நிலையில் யாழ்ப்பாணத் தில் சேதமடைந்த கட்டடங்கள் கைவிடப் பட்ட நிலையிலேயே காணப்படுகின்றன.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் காணப் படும் வர்த்தக வாய்ப்புகளைக் கைப்பற்று வதற்காகப் போட்டியிடும் கொழும்பு வங் கிகள், நிதி நிறுவனங்கள் புதிய கட்டடங் களை வேகமாக அமைக்கின்றன.

எனினும், யாழ். நகர மக்கள் வேறு வித மான அபிவிருத்தி குறித்து எதிர்பார்ப்பு வெளியிடுகின்றனர்.

''அபிவிருத்தி நடவடிக்கையில் நாங் களும் பங்கு தாரர்களாக இருக்க விரும்புகி றோம். பார்வையாளர்களாக இருக்க விரும்ப வில்லை.'' - எனப் பழிவாங்கப்படலாம் என்ற அச்சத்தினால் தமது பெயரைக் குறிப்பிட விரும்பாத வர்த்தகர் ஒருவர் தெரிவித்தார்.

வங்கிகளும் நிதிச்சேவை நிறுவனங்க ளும் எவ்வகையிலும் யாழ்ப்பாண மக்க ளுக்கு உதவியாக அமையவில்லை என உயர்தர வகுப்பு மாணவியொருவர் தெரி வித்தார்.

''யாழ்ப்பாணத்தில் கிளைகளை நிறு வும் வங்கிகள் கொழும்பைச் சேர்ந்தவர்க ளுக்கே வேலைவாய்ப்பை வழங்குகின்றன. எமக்குத் தொழில் வாய்ப்புகள் இல்லை.'' - என மேலும் தெரிவித்த அவர், வங்கிகள் எமது வைப்புப் பணத்தைப் பெறுவதில் போட்டியிடுகின்றன, ஆனால் அவற்றிடம் எம்மவர்கள் கடன்களைப் பெறுவது கஷ்ட மாகவுள்ளது, பிணை கோருகின்றனர், என் றும் சொல்கிறார்.

அரசு வடபகுதியில் முன்னெடுக்கும் அபிவிருத்தித் திட்டங்களில் யாழ்ப்பாண மக்களை இணைத்துக்கொள்ளவில்லை என சுமார் முப்பது மாணவர்கள் ஏகோபித்த குரலில் தெரிவித்தனர்.

எனினும் யாழ்ப்பாணத்தில் புதிதாகத் திறக்கப்படும் வங்கிகளில் அந்தப் பிர தேசத்தவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங் கப்படுவதாக மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் எம்மிடம் தெரிவித்தார்.

அங்கு, அநேகமான மாணவர்கள் தாம் வெளிநாடுகளுக்குக் கல்வி கற்கச் செல்ல விரும்புகின்றனர் எனவும் அங்கேயே நிரந் தரமாகத் தங்கிவிட விரும்புகிறார்கள் என வும் தெரிவித்தனர். ''இங்கு எமக்கு எதிர் காலம் இல்லை. நாங்கள் இரண்டாம்தரப் பிர ஜைகளே.'' - என அவர்கள் குறிப்பிட்டனர்.

யாழ். நகர மத்தியில் 80 அறை விடுதி யொன்றைக் கட்டுவதற்காகக் கொழும்பி லிருந்து சென்ற வர்த்தகர்களும் வங்கியா ளர்களும் அடிக்கல் நாட்டிய சம்பவத்திற் குப் பின்னரே, குறிப்பாக அந்த மக்கள் மத் தியில் கொழும்பு குறித்த அதிருப்தி அதி கரித்துள்ளது.

வருடந்தோறும் ஆயிரக்கணக்கான இந்து மதத்தவர்கள் வழிபாட்டிற்காகச் செல்லும் இந்து ஆலயத்திற்கு அருகில் இந்த விடுதியை அமைப்பது குறித்து உள் ளூர் மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

புனித பகுதியில் எவ்வாறு மதுவையும் மாமிசத்தையும் விற்க முடியும் என அவர் கள் கேட்கின்றனர்.

குறிப்பிட்ட கோயிலைச் சுற்றிப் பல சிங்கள வர்த்தகர்கள் வியாபாரத்தில் ஈடு பட்டுள்ளனர். இது சிறுபான்மை சமூகத்தி னர் மத்தியில் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளது - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவ்திப்படுகிறீர்களா ?
இதோ பாவியுங்கள்

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச்செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணித் தைலம்**

பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரைக் குறியீடு உள்ளதா என பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw
(Reg.No:- 6382) AR/PR/No.228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567

(C/564561)


## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளராகக் கடமையாற்றும் செல்வி யோ.ஜெயந்தினிதேவி அவர்களின் அன்புத் தந்தையான

**ம.யோகீஸ்வர சர்மா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மாவட்ட நன்னடத்தை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

மாவட்ட அலுவலர்,
நன்னடத்தை அலுவலகர்கள்,
நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள்.

## 31 ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பிறப்பு
12 ★ 07 ★ 1928



இறப்பு
29 ★ 03 ★ 2010

கடந்த 29.03.2010 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் சீனியர் இரத்தினம்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (28.04.2010) புதன்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் அன்று நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெற உள்ளன. அன்று நிகழும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் 30.04.2010 வெள்ளிக்கிழமை நடைபெறும் மதிய போசன விருந்துபசாரத்திலும் தாங்களும் குடும்ப சமேதராகக் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
(இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

612, கே.கே.எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


### ஓவ்செற் மெஷின் மைண்டர், கணனி இயக்குநர் தேவை

Rota Print மெஷினில் முன் அநுபவம் உடையவர்கள் நேரில் வரவும். திறமைக்கும் சேவைக்கும் ஏற்பவேதனம் வழங்கப்பெறும்.
தொலைபேசி: 0214902905
717, காங்கேசந்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தீபம் பிறிண்டர்ஸ்.


## முதல் நன்றித்திருப்பலி

புதிய குருவாக யாழ்.அ... திருநிலைப் படுத்தப்பட்ட அருட்பணி இ.செல்வ விஜேந்திரன் (அ.ம.தி.) அடிகளாரின் முதல் திருப்பலி யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

நாளை புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஆலய முன்றலில் புதியகுரு வரவேற்கப்பட்டு தமது நன்றித் திருப்பலியை நிறைவேற்றவுள்ளார். (ஒ-135)

## கலை அரங்கின் நிர்மாணப் பணிகள்

கொழும்புத்துறை,ஏப்.27

கொழும்புத்துறை கிழக்கு சனசமூக நிலைய கலை அரங்கின் நிர்மாணப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இப்பகுதியில் 2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற போரினால் இந்தக் கலையரங்கு முற்றாக அழிவடைந்திருந்தது.

யாழ்.மாநகரசபை உதவி மேயர் து.இளங்கோவின் முயற்சியில் கிடைக்கப்பெற்ற 12லட்சம் ரூபா நிதியைக்கொண்டு இந்த அரங்கை மீளக்கட்டி எழுப்பவுள்ளதாக நிலையத் தலைவர் க.நடராசா தெரிவித்தார். (ஒ-135)

## கொழும்புத்துறையில் பாலம் புனரமைப்பு

கொழும்புத்துறை,ஏப்.27

கொழும்புத்துறை கிழக்கு 3ஆம் குறுக்கு வீதியிலுள்ள பிரதான பாலம் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

மழைக்காலத்தில் நெடுங்குளத்தில் நிரம்பி வழியும் நீர் கடலுக்குச் செல்லும் வெள்ளவாய்க்காலில் அமைந்திருக்கும் இப்பாலம் நீண்ட காலமாக சேதமடைந்து போக்குவரத்துக்குச் சிரமமாகக் காணப்பட்டது.

தற்போது யாழ். மாநகர சபையால் புதிதாக இப்பாலம் அமைக்கப்பட்டு வருகிறது. (ஒ-135)

## துயர் பகிர்கின்றோம்



எமது பாடசாலை சிரேஷ்ட ஆசிரியை திருமதி நி.கிருபாகரன் அவர்களின் பாசமிகு தந்தை

**அமரர் மகேசசர்மா யோகேஸ்வரசர்மா**

(ஓய்வு பெற்ற தபால் திணைக்கள பிரதம எழுதுநர்)


அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலை,
யாழ்ப்பாணம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
(சி/587196) பழைய மாணவர் சங்கம்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
03 ★ 10 ★ 1932



உதிர்வு
08 ★ 05 ★ 2009

**பாலாத்தை வயித்திலிங்கம்**

(ஓய்வுபெற்ற லிகிதர், நடேஸ்வராக் கல்லூரி)

பாசத்தைப் பொழிந்து அன்பாய் வளர்த்து
நேசமுடன் அனைவருக்கும் அறிவூட்டி
எம்மை தவிக்க விட்டு எங்கு சென்றீர்கள்?
ஆண்டு ஒன்று ஆனாலும்.
ஆறவில்லை எம் மனம்......

26/1, வளாக ஒழுங்கை,
திருநெல்வேலி.
(97487)
குடும்பத்தினர்.


### காணி விற்பனைக்கு

நவாலி தெற்கில் விசாலமான பாதையோரமாக கிணறடங்கிய 5ப. 6.6கு. காணி விற்பனைக்குண்டு:
காத்திரமானவர்களின் தொடர்புகளுக்கு
☎:0779676128

### கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் 27.04.2010 காலை 6 மணிக்கு விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

**றாஜீவ்,**
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
தொ.பே: 0776090926, 0212222867

### வேலையாள் தேவை

கோழிப்பண்ணையின் விற்பனை நிலையத்திற்கு வேலையாள் தேவை. கோழி சுத்தம் செய்யக்கூடிய வயதானவர் விரும்பத்தக்கது. மாதச் சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு: வீனஸ் பாம், பலாலி வீதி,நல்லூர்.
AGA Office முன்பாக, திருநெல்வேலி.

பரீட்சையில் சித்திபெற்ற மாணவர் களைக் கௌரவிக்க ஒரு தங்கமெடல் வழங்குங்கள்.



ரூபா 350 இல் இருந்து
S.S.யசோதரன் ஆட்ஸ்,
381u, K.K.S வீதி, யாழப்பாணம்.
(வண்ணை சிவன் கோயில் அருகில்)

### எமது சிகிச்சைகள்

புற்றுநோய் தணிப்பு தைராய்ட் பிரச்சினைகள்
ஈரல் கோளாறுகள் மஞ்சள் காமாலை
மூட்டுவலி முதுகுவலி ஒற்றைத் தலைவலி
சுவாசப்பைக் கோளாறுகள்
படுக்கைபுண் நீரிழிவுப் புண்
நோய் எதிர்ப்பு சக்தி குறைபாடு
நீக்குதல் பக்க விளைவுகள் இல்லை.
சிக்கனமான மூலிகை மருத்துவம்




Free Consultation:
Weekdays 9.00 am to 5.00 pm
Saturday 9.00 am to 2.00 pm

### இனி இல்லை நெஞ்சு வலி

இருதய நோயாளர் எதிர்காலத்தில் நெஞ்சு வலியின்றி சுகமாக வாழலாம். எமது ஆயுர்வேத மூலிகை மருந்தினால் இரத்த ஓட்டம் சீர்பெறும் நெஞ்சு வலியிலிருந்து சுகமடைவீர்கள் உடல் நலம் பெறுவீர்கள்

மருத்துவ ஆலோசனைகளுக்கு
வவுனியா: Dr. சிவராஜா, ஆதி மெடிக்கல் ஹொரவப்பொத்தான வீதி, கோயில் சந்தி
காலம்: 02.05.2010 (ஞாயிறு)
யாழ்ப்பாணம்: Dr. நவரட்ணம், நடன முருகன் மெடிக்கல் 222, ஆஸ்பத்திரி வீதி
காலம்: 03.05.2010 திங்கட்கிழமை

FAIR PHARMA (PVT) LTD
(Manufacturers of Ayurvedic Medicines)
(ஆயுர்வேத மருந்துகள் உற்பத்தியாளர்)
Level 5/ East Tower, 1C, World Trade Centre, Col. 01
Tel: 0094-11-5517897, 5551879, 5558442
Fax: 0094-11-5517756 E-mail:fairpharmasrilanka@yahoo.com
Website: www.fairpharmasrilanka.com

நிலையங்கள்: செட்டியார் தெரு, வெள்ளவத்தை, முகத்துவாரம், காசல் வீதி, பிற்றக்கோட்டை, மஹரகம, பிலியந்தல, கடுவெல, தெஹிவல, நுகேகொட, மருதமுனை, கொஹூவல, பாணந்துறை, கம்பஹா, மாவனல்ல, ..., பண்டாரவெல, அநுராதபுரம், மின்னேரிய, அளுத்கம, ..., அம்பலாங்கொட, ஹிக்கடுவ, திருகோணமலை, கண்டி.
A BOI Approved & ISO 9001-2000 QMS Certified Company

KDK
SINCE 1909
JAPAN

SLS 814




**அசல் KDK கூரை மின் விசிறிகளில் 2 வகை**
**இப்போது SLS இலட்சனையுடன்**




0% INTEREST
upto 3 and 6 months for credit card holders of
HSBC

Sole Authorized Distributor
ELITERADIO
ELITE RADIO & ENGINEERING CO.,(PVT) LTD
35/3, Nawala Road, Narahenpita, Colombo 05.
Tel: (011) 236 8472 - 4 Fax: (011) 236 8471
E mail: sales@eliteradio.com
Also available at
G 70, Liberty Plaza, Colombo 03.
TP: (011) 257 3541

KDK 1909-2009 100th ANNIVERSARY

A Comfortable life & Clean Environment with KDK


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் நிம்மதியான வாழ்வுக்காகவே கூட்டமைப்பு அரசுடன் பேச முன்வந்துள்ளது



## தந்தை செல்வாவின் நினைவு நிகழ்வில் மாவை சேனாதிராஜா

யாழ்ப்பாணம்,ஏப்.27

தமிழ் மக்களின் நிம்மதியான வாழ்வுக்காக - விடுதலைக்காக - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுடன் பேச்சு நடத்த முன் வந்துள்ளது. அதனை அரசு சாதகமாகப் பரிசீலிக்க வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

தந்தை செல்வாவின் 33ஆவது நினைவு தினம் நேற்று திங்கட்கிழமை தந்தை செல்வா சதுக்கத்தில் நடைபெற்றது. தந்தை செல்வா அறங்காவல் குழுவின் தலைவர் பேரருட் கலாநிதி எஸ். ஜெபநேசன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அறங்காவல் குழுவின் உப தலைவரான மாவை சேனாதிராஜா மேலும் தெரிவித்தவை வருமாறு -

தந்தை செல்வநாயகம் விட்டுச் சென்ற சொத்து அவரது கொள்கைகளும் இலட்சியங்களுந்தான். அவரது வழியில் நாமும் பயணிக்கின்றோம். எமது தமிழ் பேசும் இனம் தாயகத்திலும், தாயகத்திற்கு வெளியேயும் வரலாற்றில் சகிக்கமுடியாத துன்பதுயரங்களைச் சந்தித்திருக்கிறது. துன்பதுயரங்களைத் தாங்கிநிற்கும் வல்லமையுடையவர்களே வெற்றிகளைக் காணமுடியும்.

எமது மக்களுடன் பக்கபலமாக இருந்து அவர்களது விடுதலைனக்காக - நிம் மதியான வாழ்வுக்காக - அரசுடன் பேசத் தயார் என்பதை அறிவித்திருக்கின்றோம். அதற்கு அரசு செவிசாய்க்க வேண்டும்.

தந்தையின் வழியில் நாம்....

வடக்குக் கிழக்கு மக்கள் இணைந்து ஒரே பிராந்தியமாக வாழவே விரும்புகின்றனர். தந்தை செல்வாவின் வழியில் உரிய தீர்வைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஜனநாயக வழியில் சாத்வீக வழியில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பயணிக்கிறது. தந்தை செல்வாவின் வழியில் பயணிக்கும் எமது குரலை நசுக்குவதற்குப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் பலவிதமான சவால்களையும் எதிர்கொண்டு எமது இலக்கு நோக்கி நகர்ந்து வருகின்றோம் - என்றார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் எம்.பி.யான சுமந்திரன் பேசுகையில்-

தமிழர் என்ற இனம் தனித்துவமானது. அவர்களுக்கு என சுயநிர்ணய உரிமை உண்டு. அதனடிப்படையில் இணைப் பாட்சி ஏற்படுத்த வேண்டும் என்று தந்தை செல்வா கூறியிருந்தார். இந்த தாற்பரியத்தை விளங்கிக்கொண்டே மக்கள் மிக மோசமான காலகட்டங்ளை எதிர்கொண்ட போதும் தந்தை செல்வநாயகத்தில் நினைவு தினங்களை கொண்டாட மறந்ததில்லை- என்றார்.

இந்த நிகழ்வில் பேரருட் கலாநிதி எஸ். ஜெபநேசன், கத்தோலிக்கத் திருச்சபையைச் சேர்ந்த ஆ. ஜெயசேகரம், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், செல்வநாயகம் சந்திரகாந்தன் தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் எக்ஸ்.எம். குலநாயகம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (ஒ-14)

## யாழ் நகரில் பங்குச் சந்தை கிளை திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஏப். 27

கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை தனது ஐந் தாவது கிளையை இன்று காலை 9.30 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரி வீதியில் - யாழ். பஸ் நிலையம் முன்பாக - 398/1 ஆம் இலக்கக் கட்டடத்தில் வைபவ ரீதியாகத் திறக்கவிருக்கின்றது.

கொழும்பு பங்குப்பரிவர்த்தனையின் முதல்வர் ஏ.என். பொன்சேகா இக்கிளையைத் திறந்துவைப்பார்.

இக்கிளையில் பங்குப் பரிவர்த்தனைக்கு வசதியளிப்பதற்காக 6 பங்குத் தரகர் நிறுவனங்கள் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையுடன் இணைந்து யாழ்ப்பாண மக்களுக்குச் சேவையாற்றவுள்ளன.

தற்போதைய சூழலில் யாழ்ப்பாண மக்களின் முதலீட்டிற்கான மிகச்சிறந்த வாய்ப்பாகப் பங்குகளில் முதுலீடு அமைவதனால் இவ்விடயம் தொடர்பான மேலதிக விவரங்களைப் பெறக் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை யாழ்ப்பாணக்கிளைக்கு வருகை தருமாறு நிர்வாகத்தினர் [illegible] டுள்ளனர் (ஒ-1)

## மாணவருக்கான உணவுப்பொருள் விநியோகம்; இன்றுமுதல் களஞ்சியத்தில் பெறமுடியும்

யாழ்ப்பாணம், ஏப். 27

யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்துக்கான உணவுப்பொருள் விநியோகம் இன்று ஆரம்பிக்கப்படுகிறது என்று யாழ். அரச அதிபர் கே. கணேஷ் அறிவித்துள்ளார்.

ப.நோ.கூ. சங்கங்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட பொருள்களுக்கான வழங்கற் கட்டளைகளை செயலக உலக உணவுத்திட்ட மாவட்ட முகாமைத்துவப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். இந்த விநியோகத்தை அடுத்த மாதம் 2 ஆம் திகதிக்கு முன் நிறைவுசெய்ய வேண்டும் என்று அரச அதிபர் அறிவுறுத்தியுள்ளார்.

பாடசாலை அதிபர்கள் உரிய ப.நோ.கூ. சங்கங்களுடன் தொடர்பு கொண்டு உணவுப்பொருள் விநியோகத்தைத் துரிதப்படுத்தி மாணவர்களுக்கான மதிய உணவுவழங்கலைச் சீரான முறையில் மேற்கொள்ளுமாறும் அரச அதிபர் அறிவித்துள்ளார். அடுத்த மாதம் 3ஆம் திகதிக்கு முன்னர் உணவுப்பொருள்கள் கிடைக்கப்பெறாத பாடசாலைகள் மாவட்டப் புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்திலுள்ள உலக உணவுத் திட்ட மாவட்ட முகாமைத்துவப் பிரிவின் தொலைபேசி இலக்கம் (021 222 9716) மூலம் தொடர்பு கொள்ளுமாறும் அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

கோப்பாய் உலக உணவுத் திட்டக் களஞ்சியத்தில் இருந்து பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்காகப் பொது விடுமுறை நாளான நாளையும் மற்றும் சனி, ஞாயிறு தினங்களிலும் களஞ்சியம் திறந்து இருக்கும். மேலும் பாடசாலை அதிபர்கள் அத்தினங்களில் பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக ப.நோ.கூ. சங்கங்களுடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் அரச அதிபர் அறிவித் துள்ளார். (ஒ-1)

## வவுனியாவிலும் தந்தை செல்வாவின் நினைவு தினம் நேற்று அனுஷ்டிப்பு

வவுனியா,ஏப்.27

தந்தை செல்வாவின் நினைவு தினம் நேற்றுமாலை வவுனியா சுத்தானந்தா மண்டபத்தில் நடைபெற்றது.

வவுனியா தந்தை செல்வா நினைவுச் சபைத் தலைவர் டேவிட் நாகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம பேச்சாளர்களாக யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகப் பீடாதிபதி ஆர். நந்தகுமார்,வவுனியா கல்வியியற்கல்லூரிப் பீடாதிபதி கே.பேணாட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா,அதன் உபதலைவர் எஸ்.சூசைநாதன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவக்தி ஆனந்தன், சுமந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ-10)

## மீண்டும் மே இறுதியில் விலை உயர்வு வரும் என எச்சரிக்கின்றது ஐ.தே.க.!

எரிபொருள் உட்படப் பல அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அடுத்த மாதம் இறுதிக்குள் அரசால் அதிகரிக்கப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பியும் அக்கட்சியின் ஊடகப் பேச்சாளருமான கயந்த கருணாதிலக நேற்றுக் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

ஆசியாவிலேயே மிகச் சிறந்த நாடாக இலங்கையை மாற்றுவதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவை வழங்குமாறு அரசு தேர்தலின்போது மக்களிடம் கேட்டது. ஆனால், 50 வீதத்திற்கும் அதிகமான மக்கள் வாக்களிப்பதைத் தவிர்த்து அவர்களின் எதிர்ப்பை அரசுக்குத் தெரிவித்துள் ளனர்.

அமைச்சர்களின் எண்ணிக்கை 35 ஆக மட்டுப்படுத்தப்படும் என்று அரசு சொன்னது. ஆனால், இப்போதே அதன் எண்ணிக்கை 35ஐத் தாண்டிவிட்டது. அந்த எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கப்படவுள்து.

அமைச்சர்களின் விருப்பங்களை நிறைவேற்றும் வகையில்தான் இந்த அமைச்சரவை அமைக்கப்பட்டுள்ளது. மக்களின் தேவைகளைநிறைவேற்றும்வகையில்அல்ல.

ரூபவாஹினிக்குச் சென்று வாங்கிக் கட்டிய மேர்வின் சில்வா ஊடகத்துறைப் பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். இது ஊடகத்துறையை வியப்பில் ஆழ்த்தியுள்ளது. எதிர்காலத்தில் ஊடகம் எப்படி நடத்தப்படப்போகின்றது என்பதை மேர்வின் சில்வாவின் நியமனத்தின் மூலம் எம்மால் விளங்கிக்கொள்ள முடியும்.

இந்த அமைச்சரவையால் நாட்டின் பொருளாதாரம் அபிவிருத்தியடைந்து விடாது. அடுத்த மாதம் இறுதிக்குள் எரிபொருகள் உட்பட அத்தியாவசிய பொருள்கள் பலவற்றின் விலைகளை இந்த அரசு நிச்சயம் உயர்த்தும். - என்றார்.

## இன்று தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம்,ஏப்.27

வட்டுக்கோட்டை அடைக்கலந் தோட்டம் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழா இன்று காலை 8மணிக்கு நடைபெறவுள்ளது.

காலை வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து முருகப்பெருமான் தேரில் பவனிவந்து பக்தர்களுக்கு அருக்காட்சி வழங்குவார். (ஒ-10)

## வெட்டுக்காயங்களுடன் ஒரே குடும்பத்தவர்கள் நால்வர் ஆஸ்பத்திரியில்!

யாழ்ப்பாணம்,ஏப்.27

கோண்டாவில் வடக்கில் நேற்றிரவு இடம்பெற்ற சம்பவத்தில் வெட்டுக்காயங்களுக்கு இலக்கான நிலையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் யாழ்.ஆஸ்பத்திரியில் நேற்றிரவு அனுமதிக்கப்பட்டனர்.

அதேயிடத்தைச் சேர்ந்த குணநாயகம் (வயது-53),அவரது மனைவி கமலாதேவி (வயது-48), அவரது மகன்மாரான ரவிராஜ் (வயது-8) , லிங்கேஸ் (வயது-19) ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவார்.

குடும்பப் பிணக்குக் காரணமாகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது. (ஒ-1)

## பொன்சேகாவின் உரிமை மீறல் மனு ஜூலை 8ஆம் திகதிக்க ஒத்திவைப்பு

கொழும்பு, ஏப். 27

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவின் விடுதலையைக் கோரி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் அடிப்படை உரிமை மீறல் மனுவை எதிர்வரும் ஜூலை எட்டாம் திகதி வரைக்கும் உயர் நீதிமன்றம் நேற்று ஒத்திவைத்தது.

இராணுவத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் பொன்சேகாவின் கைது மற்றும் தடுப்புக்காவலை ஆட்சேபித்து அவரது மனைவி அனோமா பொன்சேகா இம்மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

அவர் இம்மனுவில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்கோத்தபாய ராஜபக்ஷ, இராணுவத் தளபதி ஜெனரல் ஜகத் ஜயசூரிய, கொழும்பு பாதுகாப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் சுமித் மனவடு, இராணுவப் பொலிஸ் அதிகாரி பிரிகேடியர் விஜேஸ்ரீ மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரை எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிட்டிருந்தார்.

இம்மனு பிரதம நீதியரசர் அசோக டி சில்வா, நீதியரசர்கள் நிமால் காமினி அமரதுங்க, கே. ஸ்ரீபவன் ஆகியோரைக் கொண்ட உயர்நீதிமன்ற ஆயம் முன் நேற்று விசாரணைக்கு வந்தது.

எதிர்மனுதாரர்கள் இம்மனு தொடர்பில் அவர்களின் எழுத்துமூல ஆட்சேபனைகளை ஏற்கனவே மன்றுக்கு சமர்ப்பித்திருந்தார்கள்.

இந்நிலையில், மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் எதிர்மனுதாரரின் ஆட்சேபனைகளுக்கு எழுத்துமூலப் பதில்களை சமர்ப்பிப்பதற்கு உரிய அவகாசம் வழங்கவேண்டுமென்று மன்றைக் கோரினர்.

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் ஜெனரல் பொன்சேகாவைத் தாம் கடந்தகாலங்களில் சந்திக்க முடியாமல் போனமையாலேயே எழுத்துமூலப் பதில்களை மன்றுக்குச் சமர்ப்பிக்க முடியாமல் போய்விட்டது என்று அவர்கள் நீதிமன்றுக்குத் தெரியப்படுத்தினர்.

இதையடுத்து, நீதியரசர்கள் குழு மனுதாரரின் சட்டத்தரணிகள் எழுத்து மூலப் பதில்களைச் சமர்ப்பிப்பதற்கு மூன்று மாத கால அவகாசம் வழங்கி வழக்கை ஒத்திவைத்தது. (சி)

## தாலிக்கொடியை அறுக்க எடுத்த முயற்சி தோல்வி

சங்கானை,ஏப்.27

சங்கானை வைத்தியசாலைக்கும் தொட்டிலடிக்கும் இடையில் வீதியில் சென்ற பெண்ணிடம் தாலிக்கொடியை அறுக்க எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 8.30மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்களில் வந்த இருவர் இந்தப் பெண்ணுக்கு அருகே சென்று கழுத்தில் கையை வைக்க, அந்தப் பெண் கூக்கூரலிட்டுள்ளார். அதனைத் தொடர்ந்து அவர்கள் தப்பி ஓடிவிட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-1-29)

## மயோன் முஸ்தபாவுக்கு எதிராக மேல்நீதிமன்றத்தில் வழக்கு

கொழும்பு, ஏப்.27

தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த முஹமட் முஸ்ஸாமிலுக்கு ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் 43 லட்சம் ரூபாவை வழங்கி அத் தேர்தலில் போட்டியிட்ட முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்கக் கோரினார் எனக் குற்றஞ்சாட்டி முன்னாள் உயர் கல்வித்துறைப் பிரதி அமைச்சர் மயோன் முஸ்[illegible] எதிராகக் கொழும்பு மேல்நீதிமன்றத்தில் நேற்று சட்டமா அதிபரினால் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டது.

மேற்படி குற்றத்தைப் புரிந்ததன் மூலம் மயோன் முஸ்தபா ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தை மீறிச் செயற்பட்டு விட்டாரென சட்டமா அதிபர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வழக்கில் அரசுத் தரப்பு சாட்சிகளாக 21 பேர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார்கள். தொலைபேசி உரையாடல் பதிவுகள், ஓர் ஓடியோ கசெட், ஒரு வீடியோ கசெட் ஆகியனவும் இவ்வழக்கின் ஆதாரங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர சபை, யாழ்ப்பாணம்.



# ஐக்கிய தேசியக் கட்சியின் கட்டமைப்பில் அடுத்த வாரத்தில் மாற்றங்கள் வருமாம்

கொழும்பு, ஏப்ரல் 27

பலமிக்க மாற்று அரசு ஒன்றை அமைப்பதற்கு ஏதுவாக ஐக்கிய தேசியக் கட்சியில் அடுத்த வாரம் அளவில் பாரிய மாற்றங்கள் இடம்பெறும் என அக்கட்சி நேற்று அறிவித்தது. கட்சியின் தலைமைத்துவம் உட்பட அனைத்து விடயங்களும் இந்த மாற்றத்திற்கு உட்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த வாரமளவில் இடம்பெறும் கட்சியின் செயற்குழுக்கூட்டம் எப்படிப்பட்ட மாற்றங்களை ஏற்படுத்துவது என்ற முடிவை எடுக்கும் என்று ஐ.தே.கட்சியின் எம்.பியும் அக்கட்சியின் ஊடகப் பேச்சாளருமான கயந்த கருணாதிலக நேற்றுத் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

தேர்தல்கள் முடிந்தால் அத் தேர்தல்களில் தோல்வியடைந்த கட்சிகள் மாற்றங்களுக்கு உட்படுத்தப்படுகின்றமை சாதாரண விடயம். அதேபோல், நாமும் எமது கட்சியை மாற்றங்களுக்குட்படுத்தப் போகிறோம்.

**மாற்று அரசு ஒன்றை அமைக்கும் நோக்கில்...**

பலமிக்க மாற்று அரசு ஒன்றை அமைக்கும் நோக்கில் நாம் எமது கட்சியை முழுமையான மாற்றத்திற்கு உட்படுத்தப் போகிறோம். அதற்கமைய கட்சியில் உள்ள அனைவருக்கும் முக்கிய பதவிகள் வழங்கப்படும். கிராம மட்டத்தில் கட்சி உறுப்பினர்களுக்குப் பதவிகள் வழங்கப்பட்டு கட்சி கட்டியெழுப்பப்படும்.

கட்சித் தலைமைத்துவம் உட்பட கட்சி முழுமையான மாற்றங்களுக்கு உட்படுத்தப்படும். ஆனால், இப்போது கட்சியின் தலைமைத்துவத்தை மாற்ற வேண்டும் என்றோ அல்லது வேறு எந்தப் பதவி நிலைகளை மாற்ற வேண்டும் என்றோ கட்சிக்குள் எவரும் குழப்ப மேற்படுத்தவில்லை.

அடுத்த வாரம் கூடும் எமது கட்சியின் செயற்குழு எப்படிப்பட்ட மாற்றங்களைக் கட்சிக்குள் ஏற்படுத்த வேண்டும் என்று முடிவெடுக்கும். எப்படிப்பட்ட மாற்றம் செய்யப்படப் போகின்றது என்று அடுத்த வாரமளவில் இந்நாட்டு மக்களால் அறிந்து சொ[illegible] முடியும்.

தற்போதைய நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி எம்.பிக்கள் எவரும் மஹிந்தவின் அரசுடன் இணைய மாட்டார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கையை முன்னெடுப்பதற்காகவே மக்கள் அவர்களைத் தெரிவு செய்தனர். மக்களின் ஆணைப்படி எமது எம்.பிக்கள் செயற்படுவர். - என்றார்.

# அனைத்து அமைச்சுகளையும் தொடர்புபடுத்த புதிய திட்டம்

சகல அமைச்சுகளுக்கும் இடையில் பரஸ்பர புரிந்துணர்வைக் கட்டியெழுப்பிக் கூட்டுப் பொறுப்பை உருவாக்கும் வகையில் புதிய செயல்திட்டம் ஒன்றை அமைப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

ஜனாதிபதி யின் செயலாளர் லலித் வீரதுங்க அரசின் இப் புதிய திட்டம் குறித்து ஊடகங்களுக்கு நேற்று விளக்கமளித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சகல அமைச்சுகளுக்கும் இடையில் பரஸ்பர புரிந்துணர்வு, கூட்டுப் பொறுப்பு ஆகியன ஆரோக்கியமான முறையில் நிலவுவதை உறுதிப்படுத்துவதற்கென பிரத்தியேகப் பிரிவு ஒன்றை அமைக்க அரசு தீர்மானித்துள்ளது. இப்புதிய செயற்றிட்டம் மிகுந்த வெற்றி பெறும்.

அமைச்சர்கள் ஒவ்வொருவருக்கும் ஒதுக்கப்பட்டிருக்கும் பொறுப்புகள், விடயங்கள், அதிகார வரம்புகள் குறித்து அடுத்த வாரம் அரசே வர்த்தமானி மூலம் அறிவிக்கப்படும் அதை தொடர்ந்து இப்புதிய செயற்றிட்டத்துக்கு உயிர் கொடுக்கப்படும்-என்றார்.

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரது குழுவினரையும் வரவேற்றார்.

நாளை ஆரம்பமாகவுள்ள 'சார்க்' உச்சி மாநாட்டில் உறுப்பு நாடுகளின் தலைவர்கள் பலர் கலந்துகொள்ளவுள்ளனர். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவர்களுடன் முக்கிய பேச்சுகளை மேற்கொள்வார்.

மஹிந்த ராஜபக்ஷ இரண்டாவது தடவையாக இலங்கை ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் உலகத் தலைவர்களைச் சந்திக்கின்றமை இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

'சார்க்' உச்சி மாநாட்டின்போது பிராந்தியத்திற்கு முக்கியத்துவம் வாய்ந்த மூன்று உடன்படிக்கைகளும் கைச்சாத்தாகவுள்ளன.

அமைச்சர்கள், எம்.பிக்கள், அரச அதிகாரிகள் அடங்கிய குழுவினரும் ஜனாதிபதியுடன் அங்கு சென்றுள்ளனர். (அ-சி)

## வவுனியாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் கைது செய்யப்பட்ட குறித்த உறுப்பினர் வழங்கிய தகவலையடுத்தே, மேற்படி கடத்தப்பட்டிருந்த நபர் வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள வீடொன்றிலிருந்து மீட்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## வலிகாமம்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் நிலையங்கள் எவற்றிலும் முறைப்பாடும் செய்யப்படவில்லை.

நேற்று இந்தப் பரபரப்பான தகவல் பரவியதை அடுத்து பொலிஸாரும், படையினரும் வாகனங்களை வழிமறித்து சோதனையிட்டனர். வலிகாமத்தில் பல்வேறு இடங்களிலும் இராணுவத்தினர் வாகனச் சோதனையில் ஈடுபட்டனர்.

வலிகாமம் பகுதி எங்கும் காட்டுத் தீயாகப் பரவிய இந்தக் கடத்தல் செய்தியால் பொற்றோரும் பீதி மற்றும் பதற்றத்துடன் பாடசாலைகளுக்குப் படையெடுத்தனர்.

நேற்றைய இந்தப் பரபரப்பான தகவல்களை அடுத்து வட்டுக்கோட்டை பொலிஸாரும், சுழிபுரம் பகுதி பாடசாலைகளுக்குச் சென்று அதிபர்களைச் சந்தித்து உரையாடி இவ்வாறு சம்பவம் எதுவும் காலையில் இடம்பெறவில்லை என்று உறுதிப்படுத்தினர்.

பொதுமக்களையும், மாணவர்களையும் தேவையற்ற விதத்தில் குழப்பமடைய வேண்டாம் என்று தெரிவித்த பொலிஸார் இவ்வாறு சம்பவம் ஏதும் இடம்பெற்றால் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு உடனடியாகத் தெரியப்படுத்துமாறு கூறிச் சென்றனர்.

(ஒ-93-29)

# விடுதலைப்புலிகளை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்கெனவே 26,000 படையினர் தமது உயிர்களைத் தியாகம் செய்திருந்தனர். அத்துடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரின் ஆலோசகர்களும் 1987ஆம் வடமராட்சிநடவடிக்கை முதல் கினிஹிர 9 நடவடிக்கை வரையான முந்தைய யுத்த நடவடிக்கைகளை நன்கு ஆராய்ந்தனர்.

புலிகளுக்கு எதிரான 30 ஆண்டு கால யுத்தத்தின் தோல்விகளுக்கான காரணங்களை ஆராய்வதே இதன் நோக்கமாக இருந்தது. தோல்விக்கான ஒவ்வொரு காரணிக்கும் ஒரு தீர்வை நாம் கண்டுபிடித் தோம். உண்மையில் இராணுவத்துடன் தொடர்பான தோல்விக் காரணி எதுவும் இருக்கவில்லை. 2005ஆம் ஆண்டு புலிகளுக்கு எதிராக யுத்தத்தை ஆரம்பித்தால் முந்தைய 30 வருடகாலமாக புலிகளுக்கு எதிராக போராடிய அதே இராணுவத்தைக் கொண்டே போரிட வேண்டியி ருக்கும் என்பதை நாம் உணர்ந்திருந் தோம்.

**இராணுவத்தின் எண்ணிக்கையை அதிகரித்தோம்**

எமது இராணுவத்திலும் விசேட படையினரிலும் நாம் நம்பிக்கை கொண்டிருந்தோம். ஆனால் முந்தைய நான்கு ஜனாதிபதிகளும் நாட்டின் இராணுவத்தின் முழுப் பலத்தை வினைத்திறனுடன் பயன்படுத்த முடியாமைக்கான காரணம் என்ன என ஆராய்ந்தோம். இதற்குத் தீர்வாக படையினரின் பலத்தை அதிகரிக்க வேண்டும் எனத் தீர்மானித்தோம். ஆயுதப் படையால் யுத்தத்தை முடிப்பதற்கு முடியாதிருந்தமைக்கான காரணம் எண்ணிக்கை குறைபாடே என்பதையும் இராணுவத்தை விஸ்தரிப்பது புலிகளுக்கு நிச்சயமான பாதிப்பை ஏற்படுத்தும் என்பதையும் உணர்ந்தோம்.

எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் முந்தைய இரு தோல்விக் காரணிகளை தீர்க்க ஆயுதப் படைகளால் முடிந்தது.

**கிழக்கு மாகாண வெற்றி**

கிழக்கு மாகாணத்தை நாம் சுத்திகரித்த போது தமிழீழ விடுதலைப்புலிகள் தாம் தோற்கடிக்கப்படவில்லை எனவும் தாம் தந்திரோபாய பின்வாங்கலை மேற்கொண்டதாகவும் கூறினர். கிழக்கு மாகாணத்தைத் தக்கவைப்பதற்கு இலங்கை ஆயுதப் படைகளிடம் போதிய துருப்புக்கள் இருக்கமாட்டாது என புலிகள் நம்பினர்.

முந்தைய காலத்தைப் போல தாம் வடக்கில் போர்முனையொன்றைத் திறந்தால் இலங்கைப் படையினர் வடக்கிற்கு நகர்த்தப்பட வேண்டிருக்கும் எனவும் அதன் மூலம் தாம் மீண்டும் கிழக்கை கைப்பற்றிவிடலாம் எனவும் புலிகள் நம்பினர். எதிர்க்கட்சித் தலைவர்கள் பலர் கூட கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் காத்திரமானதாக இருக்கமாட்டாது என பகிரங்கமாகக் கூறினர். நாம் உண்மையில் பரந்தளவிலான போர் முனையிலும் பல் போர்முனையிலும் போரிடுவதற்குத் தயாராக இருந்தோம் என்பதை புலிகள் குறைவாகவே அறிந் திருந்தனர்.

**தரைப்படையாக, கடற்படை விமானப்படைகள்**

படையினரின் எண்ணிக்கையை அதிகரிப்பது ஒரே இரவில் சாத்திய மாகாது என்பதை அறிந்திருந்தோம். அதனால் கடற்படை, விமானப் படையினரையும் தரை யுத்த நடவடிக்கைகளில் ஈடுபடுத்தினோம். அதற்கேற்ப நாம் அவர்களுக்கு பயிற்சியளித்தோம். ஆகவே நிலத்தை தக்கவைப்பதற்கான எமது பலம் திடீரென அதிகரித்தது.

யுத்தத்தின் கடைசி மாதத்தின் இரு வாரங்களில் நாம் சிவில் பாதுகாப்புப் படைக்கு 5,000 பேரை சேர்த்தோம். ஒவ்வொரு மாதமும் 5,000 படையினரை இணைத்ததன் மூலம் இராணுவத்தின் எண்ணிக்கை மூன்று வருடங்களில் ஒரு லட்சத்திலிருந்து 3 லட்சமாக அதிகரித்தது. படைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது சிறிய பொருளாதாரத்தைக் கொண்ட எமது நாட்டினால் தாங்கிக் கொள்ள முடியாது எனக் கருதி முந்தைய நான்கு ஜனாதிபதிகளும் துணிச்சலான தீர்மானங்களை மேற்கொள்ளத் தயங்கி னர்.

2005ஆம் ஆண்டில் நடைபெற்ற பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் இராணுவத்தின் எண்ணிக்கையை இயன்றவரை விரைவாக 5,00,000 ஆக அதிகரிக்க வேண்டும் என நான் கூறினேன். படைகளின் உயர் தலைவர்கள் ஒவ்வொரு மணித்தியாலமும், ஒவ்வொரு நாளும் இராணுவ நடவடிக்கைகள் குறித்து அலசினர். எந்த படைத்தளபதியும் தேவையான ஆயுதத்தையோ அல்லது வேறு எதையுமோ கேட்கக்கூடிய நிலை இருந்தது. படைகளின் இழப்புக்கள் குறித்த அழுத்தங்களை எதிர்கொள்வதிலும் ஜனாதிபதி உறுதியாக இருந்தார்.

**6,000 படையினர் கொல்லப்பட்டனர்**

மூன்றரை வருடகாலத்தில் ஏறத்தாழ 6000 படையினர் கொல்லப்பட்டனர். இது குறித்த அரசியல் அழுத்தத்தை உங்களால் புரிந்து கொள்ளமுடி யும். இந்தியாவின் அழுத்தத்தை ஜனாதிபதி எதிர்கொண்ட முறையும் யுத்த வெற்றிக்கு முக்கிய காரணியாகும். இந்தியாவை எமது தரப்பில் இணைத்து வைத்திருக்க வேண்டிய அவசியத்தை ஜனாதிபதி உணர்ந்தார்.

1987 ஆம் ஆண்டின் ஒபரேஷன் லிபரேஷன் படை நடவடிக்கையின்போது இடம்பெற்ற சம்பவங்கள் மீண்டும் நடைபெறுவதை ஜனாதிபதி விரும்பவில்லை. 2005 முதல் 2009 வரை இந்தியா எமது படை நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு நிர்ப்பந்திக்கக்கூடிய பல சந்தர்ப்பங்கள் இருந்தன. புதுடில்லிக்கு நாம் முறையாக விளக்கமளித்து வந்ததன் மூலம் அவ்வாறன நிலை ஏற்படுவதை நாம் அனு மதிக்கவில்லை.

**தமிழ்நாட்டின் உணர்ச்சிமயநிலை**

மன்மோகன் சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கம் ஒரு கூட்டு அரசாங்கம் என்பதால் தனது பங்காளிக்கட்சிகளின் குறிப்பாக தி.மு.கவின் கரிசனைகள் காங்கிரஸ் கட்சிக்கு முக்கியமானவை என்பதை நாம் உணர்ந் திருந்தோம். பொதுமக்களின் இழப்புகள் தொடர்பாக தமிழ்நாட்டில் ஏற்படும் உணர்ச்சிமய நிலையை நாம் உணர்ந் திருந்தோம்.

ஆகவே இந்தியத் தலைமைக்கு நிலைமையை விளக்குவதை ஜனாதிபதி உறுதிப்படுத்தி வந்தார். எமது தரப்பில் பசில் ராஜபக்ஷ, லலித் வீரதுங்க மற்றும் நான் ஆகியோர் இந்தியாவின் எம்.கே. நாராயனன், சிவ்சங்கர் மேனன், விஜய் சிங் ஆகியோருடன் அவ்வப்போது தொடர்ச்சியாகக் கலந்துரையாடினோம்.

ஏதேனும் முக்கிய விவகாரம் எழும் போது நாம் இந்தியத் தரப்பினரை நேரில் சந்தித்து அதை தீர்த்துக்கொண்டோம். இதன் மூலம் எமது படை நடவடிக்கைகள் இடையூறின்றித் தொடர்ந்தன. இந்த யுத்தத்திற்கு பொதுமக்களின் ஆதரவை திரட்டிக்கொள்ள முடிந்தமையும் வெற்றிக்கு பங்காற்றியது - என்றார். (அ)


புதிய பிரிவுகள் ஆரம்பம்



Diploma Courses...
*MS Office *Accounting*Graphics 3D
*Printing & Typing,Hardware*English
*Web Designing* Video Editing *AutoCAD
* VB.net,LINUX,ICT,GIT,Kids Programs
International Courses...
Computer Engineering,CIMA,IELTS / Toefl
Cisco-CCNA, ICDL-AutoCAD, BCS,
Sun Java programmer, Red Hat Engineer
Degree Course-BIT-University of Colombo
Free e-Citizen,Hardware Technology-DHT,
INTERNATIONAL COMPUTER DRIVING LICENCE-ICDL
Diploma in English,DTP(Printing),Typing,Internet&Email
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு Closing Date 28.04.2010
MCS 324,Palaly Road, Parameswara Junction Web site : Http://www.mcsitcampus.org Call 772395895

8 ஆம் திகதி நடைபெறவுள்ள புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரிப் பரீட்சை தொடர் வகுப்புகள்
நுண்ணறிவு, மொழித்திறன்
P. கமல்தாசன்
S. பாசோதரன்
P. உமாசங்கர்
ஆரம்பம் - 27.04.2010 (இன்று)3.30 p.m.
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

SHAMROCK
கச்சேரியடி, யாழ்.
A/L 2010
BIOLOGY
ஆரம்பம்- Wed.28.04. 5.30 p.m.
Mr. R. Kuhanathan -B.Sc. M.Ed.
Che. Mr.MA. - நிரோஜன் -B.Sc
Phy. - ஆசிரியர்
C/ma. - Mr. G - [illegible]

தற்போது விற்பனையில்
* Physics - Past Paper By: Dr. Rosa
5 வகையான புத்தகங்கள்
* A/L English Medium Past Paper - Astan
* O/L Past Paper
*சங்கீதம், மனைப்பொருளியல் நாடகமும் அரங்கியலும், கிறிஸ்தவம், பரத நாட்டியம்
அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம் - சாவகச்சேரி
021 222 9881 - 021 2270003

தேவை
அலுவலகத்தில் பணியாற்றக்கூடிய ஒருவர் (ஆண்) தேவை.
வயதெல்லை 50 - 60 ஆங்கில அறிவு விசேட தகைமை
கற்பகம் கல்வி நிறுவனம்
166, நாவலர் வீதி, யாழ். 0718474325

CIMA UK 100% சித்தி



CIMA நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பயிற்சி மையம்
(Listed College), பரீட்சை நிலையம்
MCS இல் CIMA அனைத்து கற்கை பிரிவுகளும்.
எதிர்பார்க்கை வினாக்களுடன் கூடிய மாதிரிப்பரீட்சைகள்
Operational Level -28/04/2010 (Poya Day) 9AM
* ICDL - International Computer Driving License
* DIE - Diploma in English (Duration 06 Months) } Free
MCS Supported By UNDP/JRRP
பதிவுகளுக்கு27-04-2010 முன் நேரில்
Call 772395895 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.04.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.